ஓம்.

பரப்பிரம்மணேநம:.

# நவநீதசாரம்:

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலுசெட்டியார் அவர்களால்

சோதிக்கப்பட்டு,

ஷையாராலும்

தஞ்சை. எஸ். குமாரசுவாமிபிள்ளை

அவர்களாலும்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

*Copy-right Registered.*

1903.

விலை அணா-8.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 26 | 21 | அாதே | அதோ |
| 31 | 25 | தழுவு | நழுவு |
| 34 | 8 | வந்தன | வந்தது |
| 40 | 3 | பிரதி | பிராதி |
| 42 | 3 | பிரதிபித்த | பிரதிபிம்பித்த |
| 44 | 4 | கடையாதும் | கடையாளம் |
| 45 | 23 | பிரா | பிராண |
| 47 | 14 | அதிரிசயம் | அதிரிசியம் |
| 55 | 4 | தம | தமோ |
| 66 | 6 | சுகமாதி | சுகசமாதி |
| 68 | 11 | பசுவந்தன | பசுபந்தன |
| 82 | 12 | காத்துக்கு | காத்துய்க்கு |
| 87 | 5 | மனுவிந்தும் | மனுபவித்தும் |
| 87 | 6 | அவைகளா ஸ்ல் | அவைகளால் |
| 88 | 14 | விசாரித்தறிவேண்டி | விசாரித்தறியவேண்டி |
| 89 | 13 | சொல்லாமே | சொல்லலாமே |
| 92 | 22 | பிரமான | பிரமாண |
| 96 | 3 | பாரீற் | பாரீர் |
| 99 | 22 | தவீர . | தவிர |
| 100 | 10 | கந்தப்ப | கந்தர்ப்ப |
| 114 | 22 | அபாப | அபாவ |
| 114 | 25 | நூறுண்டென்டென்னும் | நூறுண்டென்னும் |
| 116 | 13 | முர்ச்சை | மூர்ச்சை |
| 139 | 17 | லட்சனம் | லட்சணம் |
| 141 | 12 | ஙாமரூபங்களை | நாமரூபங்களை |
| 141 | 21 | கிராசாரம் | கிராகாரம் |

# பிரகரண அட்டவணை.

| | | | பக்க வெண். |
|---|---|---|---|
| வைராக்கியப் பிரகரணம் | ... | ... | 1 |
| முமுட்சுப் பிரகரணம் | ... | ... | 18 |
| உற்பத்திப் பிரகரணம் | ... | ... | 32 |
| திதிப் பிரகரணம் | ... | ... | 54 |
| உபசாந்திப் பிரகரணம் | ... | ... | 66 |
| நிருவாணப் பிரகரணம் | ... | ... | 108 |

# பிரகரண அட்டவணை.


| | | |
|---|---|---|
| | | பக்க எண். |
| 1. | வைராக்கியப் பிரகரணம் ... ... | 1 |
| 2. | முமுட்சுப் பிரகரணம் ... ... | 18 |
| 3. | உற்பத்திப் பிரகரணம் ... ... | 32 |
| 4. | திதிப் பிரகரணம் ... ... | 54 |
| 5. | உபசாந்திப் பிரகரணம் ... ... | 66 |
| 6. | நிருவாணப் பிரகரணம் ... ... | 108 |

### அவையடக்கம்.

நாநா வொன்றுந் தானாகா நாநா வான வொருபொரு ளைத், தானு முளக்கண் ணதனலத் தன்மை யுணர்ந்தோர்க் கிடைப்புகலல், மாநா கந்தான் மணிப்படத்தால் வையகஞ் சுமப்ப மற்றதன்முன், பூநா கந்தான் சுமப்பலெனும் புன் மை யறிவை நிகர்க்குமால். (சு)

உ

## முதலாவது

# வைராக்கியப் பிரகரணம்.

### நூல்.

#### அவதாரிகை.

இந்நூலாசிரியர் தாமடைந்த * நிரதிசயானந்த † சாட் சாத்கார ‡ சுவானுபூதிப் பிரத்தியட்சத்தை ¶ முமூட்சுக்கள் எளிதி னுணர்ந்து நித்திய திருப்தியாகும் பொருட்டுக் கிருபை கூர்ந்து வைராக்கியப் பிரகரணம், முமூட்சுப் பிர

---

* தனக்கு மேற்பட்டதோ ராநந்தமில்லாதது நிரதிசயாநந்த மெனப்படும், பேரின்ப மென்றபடி.

† சாட்சாத்காரம்—நேராய்க் காண்டல்.

‡ சுவானுபூதி—தனது அனுபவம்.

¶ முமூட்சுக்கள்—மோட்ச விருப்பமுள்ளவர்கள்.

கரணம், உற்பத்திப் பிரகரணம், திதிப் பிரகரணம், உபசாந்திப் பிரகரணம், நிருவாணப் பிரகரணம் என்னும் அறுவகைப் பிரகரணங்களால் இந்நூலினிது முடிக்கத் தொடங்கி, பூர்வஜன்ம $ சம்ஸ்கார பலத்தினால் § கிஞ்சித்து ஆவரண விலட்சணப்பட்டு ஆத்மானாத்ம விவேகம் செய்ய வந்த சீஷனுக்குப் || பிரபஞ்ச வைராக்கிய முண்டாகும்படி முந்தி வைராக்கியப் பிரகரணங் கூறுகின்றார்.

கவி.

தேகமே யான்மாப் போகஞ் சேர்ந்திடன் முத்தி யாமென்
றேகமின் மூக ராய்நின் றிறந்தவர் பிறவா ரென்ற
மோகங்க ளனைத்து நீக்கி முத்தியை யடைவ தற்கே
தாகமா யிருக்கு முத்தர் தானுமே தேவ ராவார். (க)

தேவர்மா னிடரா னாலுஞ் செனித்திடல் வளர்தன் மாய்தன்
மூவகை யிடத்துந் துன்ப மாதலான் மோக மென்னுஞ்
சீவனுட் பற்றை நீக்கச் சிந்தித்தெத் திறத்தா னாலுந்
தாவுமா றுடைத்தல் வேண்டுஞ் சற்குரு சகாயத் தன்றே.

வினா:—தேகமே யான்மா வல்லாமல் உள்ளேயாகிலும் வெளியேயாகிலும் ஆன்மா வேறில்லையென்னில்?

---

$ அனுபவத்தின் காரியமாயும் நினைப்பிற் கேதுவாயு மிருப்பது சம்ஸ்கார மெனப்படும்.

§ கிஞ்சித்து ஆவரண விலட்சணப்பட்டு—சிறிது மறைப்பு நீங்கி.

|| பிரபஞ்ச வைராக்கிய முண்டாகும்படி—உலகத்தில் வெறுப்புண்டாகுமாறு.

விடை:—கரணங்க ளிருக்கிறபடியா லப்படி சொல்லக் கூடாது.

வினு:—மனம் ஒன்றேதவிர வேறு கரணங்களுமில்லை; போகங்களில் ஸ்திரீ சையோகமே முத்தி; அவர்களைச் சதா காலமும் நினைத்திருப்பதே கல்வி; சதாகாலமும் அவர்கள் விசாரத்தினுற் சரீரமிளைப்பதே தவம்;எப்போதும் அவர்களுடன் சரசவுல்லாசமாய் வசனித்திருப்பதே சீவன் முத்தி; எப்போதும் அவர்களது ஸ்தனங்களிற் கூடிச் சையோக வின்பத்தி லழுந்தி யிருப்பதே விதேகமுத்தி; அவர்களணிந்துள்ள புஷ்ப சுந்தனுதிகளின் மணங்களை ஆக்கிராணித்(மோக்) திருப்பதே சுவர்க்கபோகம்; அவர்களதரபானமே தேவாமிர்தம். இப்படிப்பட்ட மதத்தைவிட்டுப் பிரிந்தவனே நரகத்தை யடைவன். இறந்தவர்க ளொருகாலத்தும் பிறப்பதேயில்லை; அப்படி பிறப்பதுண்டானுல் முன்னுள்ளவறிவு இப்போதிருக்க வேண்டும்; அப்படி காணுமையால் தேகமே யான்மா; போகமே மோக்ஷம். இறந்தவர்கள் மறுபடியும் பிறவார்க ளென்பதே நிச்சயமென்னில்?

விடை:—இப்படி யுளறிக்கொண்டு மிருக பட்சிகளைப் போல வறிவில்லாதவர்களாய் அருந்தல் பொருந்தல் மாத்திரமாய் வீண்காலம் போக்குவார்களாகில் அவர்களுக்கு நரகமேயன்றி மோட்சமில்லை. மேலும் நாமிறந்தால் நமக்கிருப்பிடமெங்கே? நாமெங்கேயிருந்து வந்தோம்? நமக்குக் கதியேதென்று விசாரித்தறிய வொட்டாமல் அவர்கள் புத்தியை மறைத்திருப்பது அஞ்ஞான காரியமல்லாமல் வேறல்ல.

வினா:—அஃதெப்படி?

விடை:—தேகமே அறிவாகிய வான்மாவென்றால், தேகமிருக்குங் காலமெல்லாம் அறிவிருக்க வேண்டுமே? அப்படி காணாதபடியினால் தேகம் பிணமாய்க் கிடக்கும்போது அறிவாகிய வுயிர் போய்விடுதலால் தேகத்தினுள் அறிவாகிய தேகி யொருவனுண்டு. அவன் இத்தேகத்தைவிட்டு மறு தேகத்திற் போனதால் இத்தேகம் பிணமாய்க்கிடக்கின்றது. ஆகையினால் வேறே தேகியொருவ னுண்டென்றும் தேகம் ஆன்மாவல்ல ஜடமென்றுங் கொள்ளப்பட்டன.

வினா:—ஸ்திரீ போகமே மோட்சமல்ல வென்ப தெப்படி?

விடை:—மலங்களைப் புசிக்கவேண்டுமென் றிச்சித்துத் திரிகின்ற ஊர்ப்பன்றியானது அன்னியரால் விடப்பட்ட அசுத்தமான மலங்களைப் புசித்து வெயிலால் தபித்துச் சூடுகொண்டு வரும் வழியில், அசுத்தமாகிய சாக்கடைச் சேற்றைக் கண்டு அதில்போய் விழுந்து புரண்டு அவ்வசுத்த நீரைக்குடித்துத் தன்னிளைப்பாகிய தாகசோகந் தணிந்து சுகித்திருப்பதுபோல, மூடனானவன் இரத்தமாமிசமல மூத்திர திட்டான துர்க்கந்தங்க ணிறைந்து அநேக ஜன்மங்களிற் செய்துள்ள பஞ்சமா பாதகங்க ளனைத்தையு மொன்றுகக்கூட்டிப் பிரமன் ஒரு பெண்வடிவாகச் சிருஷ்டிக்க வந்த மாயா ரூபத்தைக் கண்டு சுகமென் றிச்சித்து அவர்கள் எச்சிலாகிய வாய்நீரையுண்டு, தனங்களாகிய மாமிசக்கட்டிகளி லழுந்தி, அசுத்தமாகிய கால்களையெடுத்துக் கண்களிலொற்

றிக்கொண்டு, யோனியாகிய வுப்பளற்றில் விழுந்து, சதா காலமு மதுவே யின்பமென்று சுகித்திருப்பன். இந்த மூடனும் அந்தச் சாக்கடைச் சேற்றில் விழுந்து புரளுகின்ற ஊர்ப்பன்றியுஞ் சரியாம். ஆகையால் பரிசுத்தமாகிய மோட்ச விருப்ப முடையவர்கள் சுத்த நித்தராயிருக்கின்ற ஈசுவரானுக்கிரகம்பெற்று அடிமைத்திறஞ் செய்கின்ற பெரியோர்களைக் கண்டு பூசித்து, அவர்களால் நித்திய சுகமாயிருக்கின்ற மோட்சத்தைப் பெறுவார்கள். அங்ஙனமிருக்கப் போகமே மோட்சமென்பது கூடாது. இறந்தவர்கள் பிறப்பார்களென்பதே துணிவு.

வினு:—இறந்தவர் பிறப்பாரென்ப தெப்படி?

விடை:—சாக்கிரத்தில்மனோராச்சியம் (வீண் எண்ணம்) பண்ணும்போது சீவன் ஆசத்தி (ஆசை) யாய் நினைந்த பொருள்களை ஸ்தூலத்தைக் கைவிட்ட சொப்பனவஸ்தையில் சத்தியமாய்க் கண்டனுபவிப்பதுபோல, இந்தப் பிறப்பில் ஆசத்தியா யேறியிருந்த வாசனைகளே மரண மடையும்போது மறுபிறப்புக்கு வித்தாக அதற்கிடான சரீரங்களையெடுத் தனுபவிப்பனென்பதே துணிவு.

வினு:—இறந்தவர்கள் மீண்டும் பிறப்பது மெய்யானல் முன்னுள்ள நினைவுகள் தோற்றவேண்டுமே?

விடை:—இறந்துபோன புத்திர மித்திரர் தாய் தகப்பன் முதலியோர் சொப்பனவஸ்தையில் மெய்போல வந்திருக்கக் கண்டனுபவிக்கும்போது இது பொய்யென்று ஒருவருமே

னறியவில்லை? முன்னமே இவர்களிறந்து போனார்களென்று சாக்கிரத்தி லிறிந்திருந்த சீவன்தானே இப்போதுஞ் சொப் பனங் காணுகிறான். இவனுக்கேன் முன்னுள்ள நினைவு கள் தோற்றவில்லை? ஆதலாலிறந்தவர்கள் பிறந்தாலு முன் னிருந்த நினைவுகள் தோற்றாவென்பதே துணிவு.

வினா:—அப்படி தோற்றாமைக்குக் காரணம் என்ன?

விடை:—இந்தச்சீவன் ஸ்தூலதேகத்துடன் கூடி இந்திரிய விவகாரமான சாக்கிரத்திருந்து பிறகு ஸ்தூல தேகத்தைக் கைவிட்டுச் சூட்சும தேகத்தை யபிமானித்ததினால் முன் னுள்ள நினைவுகள் தோற்றவில்லை. இப்படியே எழுவகைப் பிறப்பிலுமுண்டான நினைவுகளு மந்தந்த தேகத்தை விட்டு மறுபிறப்பாகிய வேறொரு தேகத்திற் புகும்போது இந்தச் சீவன் மரணாவஸ்தையிற் பட்டதுன்பத்தினா லறியவில்லை. ஆதலால் இறந்தவர் பிறவாரென்ற வினா தள்ளப்பட்டு இறந் தவர் பிறப்பாரென்ற சித்தாந்தமே கொள்ளப்பட்டது.

வினா:—ஆனால் சிலர் தேவபோகத்தைக் குறித்து யாகாதி (வேள்வி முதலிய) கருமங்களைச் செய்கின்றார்களே அக்கருமங்களா லவர்களுக்கு இன்பமில்லையோ?

விடை:—அந்தத் தேவபோகத்தை யனுபவித்தற்குரிய தேவப்பிறப்பிலு மின்பமில்லை. எப்படியென்றால் தேவ யோனிகளிற் பிறக்கின்ற காலத்திலுந் துக்கம். திதிகாலத் திலும் பிரமாதி தேவர்களாலும் ரிஷீசுவரர்களாலும் ஒரு வர்க்கொருவரால் நேரிடும் * அன்னியோன்னிய சாபத்தி

* அன்னியோன்னியம்—ஒன்றற்கொன்று.

ஞலும் ஒருவர் பெண்சாதி, தனங்களை யொருவரபகரிப்பதி ஞலும் ராக்ஷதர்கள் தங்கள் போகபூமியைப் பிடுங்கிக்கொ ண்டு அடித்துத் துரத்திவிடுவார்க ளென்கிற பயத்திஞலுந் துன்பமேயல்லாம லெள்ளளவு மின்பமில்லை. மரணகாலத்தி லும் முன்செய்துள்ள யாகாதி கர்மபலத்திஞல் எழுபத் தொரு சதுர்யுகம் ஆனந்தபோக மனுபவித்துத்தீர்ந்தவுடன் அங்குள்ள தேவதைகளால் பிடித்துத் தள்ளப்பட்டு நட்சத் திரங்களாகித் தலைகீழாய்ப் பூமியிலெரிந்து விழும்போது அவ்வானந்த மறந்து அனித்தியமாய்ப் போவதிஞலும் மீண் டுற்பவிக்குங் காலத்திலும் முன்பு * பசுபந்தனம் பண்ணின † பாவகர்மத்திஞல் பூமியில் நாக்குப்பூச்சி, கிருமி முதலிய வைகளாய்ச் செனிப்பதிஞலுந் துன்பமென்பதே துணிவு.

வினு:—ஆஞலிந்த மானிடப் பிறப்பில்தா னின்ப மில்லையோ ?

விடை:—இந்த மானிடயோனிகளிற் பிறக்கின்ற காலத் திலும் மாதாவின் கருப்பப்பையில் கட்டுண்டு அவளது மல மூத்திரக் கிருமிகளிஞலும் மூலாக்கினியாலும் வெதும்பி அவள் அன்னபாஞதிகளை நிறையவுண்டபோது உடல் நெரு க்கத்திஞல் மூச்சுவிடுதற் கிடமில்லாத வருத்தத்திஞலும்,

* பசுபந்தனம் பண்ணல்—யாக ஸ்தம்பத்தில் பசு (ஆடு) வைக் கட்டிக்கொல்லுதல்.

† பசுபந்தனம் பண்ணுதல் புண்ணிய கருமமென்று கூறுது பாவ கருமமென்று கூறியது தேவபோகத்தில் வெறுப்புத் தோன்றற் கென்க.

அவளுண்ணுதபோது எழுகின்ற வுதராக்கினியால் சுடப்படு கிறுபிரயாசையினுலும், பிறக்குங்கால் பிரசூதவாயுவினுல் மொத்துண்டு ஆலையிற்பட்ட கரும்பைப்போலும் செக்கிலி ட்ட எள்ளைப்போலும் யோனித்துவாரத்தி னெருக்குண்டு மூலைமேல் நின்றுனைத் தலைகீழாய்த் தள்ளுவதுபோல் பூமியிற் பிள்ளையாய் விழுகின்றதினுலுந் துன்பம். திதிகாலத்திலும் * சைசவப் பருவத்தில் கணங்கள் பறவையாதிகளால் வருந் தோஷங்களினுலும், பாலப்பருவத்தில் காதுகுத்தல் சுரமுத லிய பலவியாதிகளாற் படும் பிரயாசத்தினுலும், வாசித்தல் முதலிய கருமங்களால் உபாத்தியாயர் முதலானவர்களா லுண்டாகும் வருத்தத்தினுலும், குமாரப்பருவத்தில் தன தானியங்களைச் சம்பாதிக்கவேண்டி வருகிற தாக மோகங் களினுலும், அதற்கிடையூறு வருவதினுலும், விடயபோக விச்சையினுலும், அகங்கார மிருப்பதினுலும், படியாமற் போனதினுலும், படித்துந் தர்க்கங்கள் பேசவல்லுவதினுலும் துன்பம். விருத்த பருவத்திலோ வென்றுல் ஆசைமிகுவதி னுலும், நரை திரை மூப்புக்களினுலும், பலவியாதிகளுண்டா தலினுலும், மனைவிமுதலியோர்களுக்கு வியாதி வருதலினு லுந் துன்பம். ஒருவனுக்குப் பிராணுதாரமா யிருந்த பிள்ளை சாகவும், அந்நேரம் வீடிடிந்து விழவும், உழுகிற மாடு சாக வும், கடன்காரர்வந்து மறிக்கவும், அடிமையாள் மறிக்கவும், வாராவிருந்து வரவும், வீட்டில் அரைக்கா சளவில்லாமல் அயல்வீட்டில் கடன்கேட்க, அவர்களைக் கொடுக்கவொட் டாமல் முன்கடன்காரர் மறிக்கவும் இப்படி நாநாவித துன்

* சைசவப்பருவம்—குழந்தைப்பருவம்.

பங்களினால் காற்றினாலசைகின்ற சலத்திற்பிரதிபிம்பித்த சந்திரன் படுகிற சலனம்போல் வருத்தமுண்டாவதினாலுந் துன்பம். மரணகாலத்திலும் வாத பித்த சுர க்ஷய குன்ம சூலை முதலான பலரோகங்கள் மேலிட்டுச் சீவத்துவம் பேதித்திருக்கிறபோது நமனைக் கண்டதுபோல் வரும் பயங்களினாலும், நடுக்கங்களினாலும், ஊர்த்த சுவாசத்தினாலும் வருந்திச் சிலேத்துமத்தில் தட்டுண்டுழலும் வேதனையோடு பிராணப்பிரயாணகாலத்திற் காண்கிற துக்கங்களினாலும், அப்படி பிராண னீங்கியபோது நெருப்பாற்றிலுங் கும்பிபாகமான நரகத்திலும் சுடுகிற பாதையிலும் அசிபத்திர வனத்திலும் வீழ்த்தி, யமபடாள் தண்டிக்கின்ற வாதனைகளினாலுந் துன்பம். இப்படி தேவர் மானிடரென்னு மிருவகைப் பிறவிகளே துன்பமானால் ஏனைய பிறவிகளாகிய மிருகபட்சி தாவராதிகளெல்லாம் துக்க சமுத்திரத்தழுந்தி பாவமான நரகங்களிற் படும்பாடுகளையெல்லா மிவ்வளவென் றளவிட்டுச் சொல்லல்முடியாது. ஆகையினாலிந்தப் பிறவிகள் நீங்குமார்க்கத்தையே விசாரித்தறியவேண்டும்.

வினா:—விசாரித்தறியு மார்க்கமெப்படி?

விடை:—யானென தென்னும் பற்றுக்க ளொழிந்தால் சீவத்துவங்கெடும். இந்த யானெனதென்னும் பற்றுக்களே சீவசொரூபம். இவ்விருவகைப் பற்றுக்களில் முந்தி எனதென்னும் பற்றை விடவேண்டும்.

வினா:—இப்பற்றெதனால் வந்தது?

விடை:—பெண்சாதி பிள்ளைகள் கிரகம் (வீடு) பூமி தன (பொருள்) தானியாதிகளை யெனதென் றபிமானிப்பது ஆன்மாவுக்குச் சுபாவமல்ல. அவ்வபிமானம் அறியாமை யான மோகாந்தகார மூடபுத்தியினால் வந்தது.

வினா:—அதற்கு விவரமெப்படி?

விடை:—உன் பெண்சாதியானவள் ஒரு தாய் தகப்பனுக்கு மகளாயிருக்கிறாள். நீ ஒரு தாய்தகப்பனுக்கு மகனாயிருக்கிறாய். இப்படி புறம்பாயிருக்க, அவளென் பெண்சாதி யென்றுனக்குச் சத்தியபுத்தி வரலாகுமா? உன்னைவிட்டு அவள் பிரிந்துபோய்விடுகிறாள், அவளைவிட்டு நீ பிரிந்துபோய்விடுகிறாய். ஆகையா லுனக்கவள் சொந்தமல்ல. அவளை நீ எனதென்பது கூடாது. பின்னும் நீ பிள்ளையை எனதென்கிறாயே? அந்தப்பிள்ளை உன்னாலுண்டாக்கப் பட்டதா? அல்லது உன்பெண்சாதியா லுண்டாக்கப்பட்டதா? அல்லது அன்னியர்களா லுண்டாக்கப்பட்டதா? இப்படியுங்களொருவரா லு முண்டாக்கப்படாதிருக்க வீணாகமயங்குவது பிராந்தியே. மேலும் சொப்பனத்தில் மலடி பிள்ளை பெற்றதுபோலும் இந்திரசால வித்தையில் வல்லவன் வித்தை காட்டுவது போலும் பிரமனதுசிருட்டியினா லிருவருக்குநடுவேயோர் பிள்ளை தோற்றியது. இதை எப்படி என் பிள்ளையென்று சொல்லுவது? தெருவிற்கண்ட பிள்ளையை என்பிள்ளை யென்றெவன் சொல்லுவான். அதுபோலப் பிரமனது சிருஷ்டியால் வந்த பிள்ளை பிரமன் பிள்ளை யல்லாமலுன்பிள்ளை யல்ல. ஆதலால் பிள்ளையை எனதென்பது கூடாது. அப்படியே இந்த வீடு

வாசல் பூமி தனதானிய சம்பத்துக்களெல்லாம் உன் தகப்பனாலார்ச்சிக்கப் பட்டபடியினாலும் அறிவை நோக்கி விசாரிக்கு மிடத்து நீயவனுக்குப் பிள்ளையாகாமற் போகிறபடியினாலும் நீ இவைகளையும் எனதென்பது கூடாது.

வினா:—அப்படி யல்ல. நானே கஷ்டப்பட்டுத் திரவியங்களைச் சம்பாதித்து அவற்றால் வீடுவாசல் பூமியாதிகளைச் சேகரித்திருத்தலால் தாங்கள் சொல்வது எப்படி பொருந்தும்?

விடை:—அப்படி யானாலுமந்தத் திரவியங்களு முனதல்ல.

வினா:—அஃதெப்படி?

விடை:—திரவியங்களெல்லாம் இராஜாக்களுக்குச்சொந்தமானதால் இந்தத் திரவியங்களையு மெனதென்பது கூடாது.

வினா:—ஆனால் பெண்டு பிள்ளை திரவியமென்னும் மூவித ஆசையான ஈஷணாத்திரயங்க ளெனதல்ல வென்றுபோனாலும் இந்தத் தேகமானது நான் அல்ல வென்பதெப்படி?

விடை:—தேகமு முனதல்ல; நீ ஒருவரிடத்தி லிரவல் வாங்கினது.

வினா:—அஃதெப்படி?

விடை:—நெடுங்காலமாய்ப் பிறப்பிறப்புகளாகிய துக்கங்களிற்பட்டு* திரியக்காதி † தாவரங்களாய்ப் பிறந்துழுந்து

---

* திரியக்-விலங்கு (மிருகம்).

† தாவரம்- மரஞ், செடி, கொடி முதலியவை.

அந்தப் பிரயாசையெல்லாங் கிஞ்சித்து (சிறிது) விவேகத்தினலறிந்து; நீ ஈசுவரனைநோக்கி இந்தச் * சன்ம சாபல்லியமாய்க் கரையேறும்படி எனக்கொரு மானிடசரீரங்கொடுத்தருளுமென்று பிறவிகள்தோறும் வேண்டினபடியால் ஈசுவரன் கிருபைகூர்ந்து நீ இந்தமானிட சரீரத்தைப்பெற்று நம்மைவேண்டி † நிஷ்காமிய தவஞ்செய்து நமது திருவடிச்சுகத்தைப் பெறுவாயென்றிரவலாகக் கொடுத்தருளினர்.

வினு:—அப்படியானல் அந்தக் காரணத்தை ஒருவருமேனறியவில்லை?

விடை:—‡ கருப்பாசயத்திற் கட்டுண்டிருந்ததினலும், பிறக்குங்கால் பிரசூதவாயுவு முரித்துத் தள்ளுவதினலும், யோனித்துவார நெருக்கமுதலியவற்ரு லுண்டான வருத்தங்களாலும் முன்னுள்ள நினைவுகளெல்லாம் இந்தச் சீவன் மறந்து பஞ்சபூத பௌதிகமாகிய இரவலான இச்சரீரத்தையுர் தானென்று சத்திய புத்தி பண்ணிக் கொண்டபடியால் ஒருவருக்குங் காரணந் தோற்றவில்லை.

வினு:—ஆனலிரவ லென்பதற்கு உவமானமெப்படி?

விடை:—ஒரு புருஷன் ஒரு தொழில் செய்யக் கருதி அடுத்த வீட்டுக்காரனிடத்தில் ஒரு கத்தியை யிரவலாக வாங்கிவந்து, உடனே அந்தக் கத்தியின்மேல் வைத்த ¶ பிரி

---

* சன்ம சாபல்லியமாய்—பிறப்பின்பயனை யடைந்ததாய்.

† நிஷ்காமிய தவம்—பயனை யிச்சியாது செய்யும் தபசு.

‡ கருப்பாசயம் - கருப்பப்பை.

¶ ஒன்றை விரும்புதல் - பிரியம்; விரும்பியதை யடையப் பிரயத்தினப்படுதல் - மோதம்; அதனையடைதல் - பிரமோதம்.

யமோதப் பிரமோதங்களினு லிரவலென்பது மறந்து, சொந்தம்போல வைத்துக்கொண்டு அதனுல் தானினைத்த கருமத்தை நிறைவேற்றிக் கொள்ளாம லிருந்துவிட்டான். அப்படியிருக்கச் சில நாளைக்குப் பிறகு கத்தி கொடுத்தவன் சடுதியில் (விரைவில்) வந்து என் கத்தியைக் கொடுவென்று கேட்க, இவன் அவனுடைய கத்தியென்பதுந் தானிரவல் வாங்கிவந்ததும் மறந்து வழக்குப் பேசுமளவில், அவன் கோபங்கொண்டு இவனையடித்து வருத்திக் கத்தியைப்பிடுங்கிக்கொண்டு போவானே யல்லாமல் கத்தியைவிட்டுப் போக மாட்டான். அதுபோல நீயும் ஈசுவரனிடத்தில் அனந்த ஜன்மங்கடோறும் வருந்திக்கேட்டு இரவலாக வாங்கிவந்த இந்தச் சரீரத்தை இப்போது பட்ட பிறவி மூர்ச்சையினுல் மறந்து யானெனதென்று சத்திய புத்தி பண்ணிக்கொண்டிருக்கிறுய், இனி நியமப்படி இரவல்கொடுத்தவர்வந்து பறித்துக்கொண்டு போய்விடுவார். அப்போது முன்போலத் திரியக்காதி தாவரங்களாய்ப் பிறந்துழுத்து ஐயையோ! நாம் முன்சரீர மிருக்கும்போதே நல்ல தவத்தைப் பண்ணி மோட்ச மடையாமற் போனேமேயென்று புலம்பி நிற்க வேண்டுமேயல்லாமல் வேறில்லை.

வினு:—ஆனுல் முன்போலவே யிரவல் வாங்கிவந்து மறவாமல் தவஞ்செய்து மோட்சத்தைப் பெறக்கூடாதோ?

விடை:—திரும்பவும் இந்தமானிடசரீரம் பெறுவதரிது.

வினு:—அரிதென்பது எப்படி?

விடை:—முன் கத்தியை யிரவல்வாங்கி வந்துதான் நினைத்தகருமமும் முடிக்காமல் கத்தி கொடுத்தவன் வந்து கேட்டவிடத்தில் தன் சொந்தமென்று வழக்கிட்டதையும் மறந்து பின்னும் அவனிடத்திற் போய்க்கேட்டால் புரளிக்கார னென்றடித்துத் தள்ளிவிடுவானே யன்றி ஒருபோதுங் கத்தி யிரவல் கொடுக்கமாட்டான். அதுபோல ஈசுவரனிரவலாகக் கொடுத்த தேகத்தை நீ யானெனதென் றபிமானித்து அறியாமையினால் பொய் கொலை களவு கட்காமமாகிய பஞ்சமா பாதகங்களையே முயன்றுசெய்து வழக்கிட்டுநின்றதால் இனி ஒருகாலு மிந்தச் சரீரங் கிடைக்கமாட்டாது. ஆதலாலிந்தச் சரீரமும் விவேகமு மிருக்கும் பொழுதே யிரவலுடைமை யென்றறிந்து தேகாதிப் பிரபஞ்சங்களிலுள்ள வபிமானமெல்லாம் விட்டு நிஷ்காமிய தவம்பண்ணி மோட்சத்தைப்பெற வேண்டுமென்று அறிவாயாக.

வினா:—ஆனால் யானென தென்னும் அபிமான மில்லாவிட்டால் விவகாரங்களெல்லாம் தூங்கினவன் கைப்பொருள் நழுவினாற்போல நழுவிவிடுமே யன்றித் திடமாய் நடக்கமாட்டா, ஆகையால் அபிமான மிருக்கட்டுமே? அதனால் ஆனி (கெடுதி) யென்ன?

விடை:—ஓர் கிரகஸ்தனான பிராமணன் தன்கிரஹணி (மனைவி)யோடு கங்கையாத்திரை போகக்கருதி, மறுவளவிற் (பக்கத்துவீட்டில்) குடியிருந்த ஓரேழைப் பிராமணனை யழைத்து, நாங்கள் காசி யாத்திரைபோய் வருமளவும் நீ குடிக் கூலியின்றிக் குடும்பத்துடன் எங்கள் வீட்டில் குடியி

ருந்துகொண்டு எங்கள் வீடுவாசல் மாடுமனை முதலான சகலபண்ட பதார்த்தங்களையும் பதனமாகக் காப்பாற்றி நாங்கள் வந்தவுடன் எங்களிடத்தில் ஒப்புவித்தால் நான் மாதம் ஒன்றுக்கு ஒரு வராகன் சம்பளந் தருவேனென்றுசொல்லி, அந்த ஏழைப் பிராமணனைக் குடி வைத்துவிட்டு, யாத்திரை போய்க், காசிமுதல் கன்னியாகுமரி வரையிலுள்ள மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையே தரிசித்துக்கொண்டு, சில நாட் கழித்தபின் தன்வீட்டுக்குத் தன் கிரஹணியோடு வந்து சேர்ந்தான். அந்தப் பிராமணனைப் பார்த்து குடியிருந்த ஏழைப் பிராமணன் நீங்களாரென்று கேட்க, நாங்களுன்னை இந்த வீட்டிற் குடிவைத்துவிட்டுக் காசியாத்திரை போனவர்களல்லவா? இப்போது நாங்கள் சீவந்தராய் வந்துசேர்ந்தோமாதலால் எங்கள் வீடுவாசல் முதலியவெல்லாம் ஒப்பித்துவிட்டு உன் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போவென்று சொல்ல, அந்த வசனத்தைக்கேட்டு கோபங்கொண்டு வீடாவதேது? வாசலாவதேது? குடிக்கூலிக்கு வைத்துப்போவதாவதேது? உனக்கேதாவது பயித்தியம் பிடித்ததோ வென்று கூவி நீ முன்புதானே இந்த வீடுவாசல்களை விற்பனை செய்துவிட்டுப் போயினையே? அதற்கு விக்கிரயசாதன மிருக்கிறதென்று அபிமானித்து வழக்குப்பேச, அதுகேட்ட காசிவாசியும் நியாயஸ்தலத்திற்போய்க் கூகூவென்று முறையிட, அம்முறையிடுதலைக் கேட்ட நியாயாதிபதிகள் வஞ்சகனை ஏழைப் பிராமணனைப்பிடித்துவரச்சொல்லி விசாரிக்க, அவன் அந்த நியாயாதிபதிகளைப் பார்த்து இவர்கள் யாத்திரைபோகிறபோது விற்றுவிட்டுப் போனார்களேயன்றி என்

ஊக் குடிவைத்துப் போகவில்லையென்று பொய்ச்சாதன மொன்றெடுத்துக் காட்ட, அதுகண்ட நியாயாதிபதிகள் இதைச்சாட்சிமூலமாக அறியவேண்டுமென்று அடுத்த வீட்டிலுள்ளவர்களையழைப்பித்து நீங்களிந்தச்சேதி யறிவீர்களாவென்று கேட்க, அவர்கள் நியாயாதிபதிகளைப் பார்த்து இவனைக் குடிவைத்துப் போனதேயல்லாமல் வீடுவாசல்களை விற்றுப்போக வில்லையென்று சொன்னார்கள். அதுகேட்ட நியாயாதிபதிகள் அந்தக் கபடப் பிராமணனைப் பிடித்துக் காவல்பண்ணி ஒருவன் சொத்துகளை யபகரிக்கும்படி பொய்ச்சாதன (பொய்ப்பத்திரம்) மேற்படுத்தின படியால் உனக்கு நூறுபொன் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த அபராதம் கொடுக்குமளவும் நீ காவலிலிருந் தூழியஞ் செய்ய வேண்டும்; நீ அவன் சொத்துக்களெல்லா மபகரித்துக் கொண்டபடியால் உன்சொத்துக்களெல்லாம் ஏலம் போடுவித்து வட்டிக்காகச் சேர்க்கப்படுமென்று நியாயந் தீர்த்தார்கள். அதுபோலத் தேகாதிப் பிரபஞ்ச விவகாரத்தில் ஒருவனுக்கு யானெனதென்னு மபிமான மேலிடுமாகில் அவன் முதலாகிய மோட்ச பலமுங்கெட்டு வட்டியாகிய நித்திய சுவானுபவமும் போய்ச் சதா துக்கத்திலேயே மூழ்கிக் கிடப்பன்.

வினா:—ஆனால் அபிமான நீங்கும் வழியெப்படி?

விடை:—சரீர முதலாயுள்ள வகப்பற்றையும் ஈஷணாத்திரயங்களான புறப்பற்றையு மன்னியமென்றறிந்து, அவைகளில் நானெனதென்று வரு மபிமானங்களைவிட்டு, இவை

களை நமக்குக் கூட்டிவைத்த வினையானது நியமப்படி பிரித்துவிடு மென்பதிற் சந்தேகமில்லை இவையெல்லாம் கனவிற் கண்ட பொருள்போ லாகுமென்று கருதி அவற்றில் ஆகாமிய (இனிப்பலத்திற்குக் காரணமாகிய வினை) மெழுவொட்டாமல் பிரமத்தியானத்தி லனுதினமும் பழகுவதே அபிமான நீங்கும்வழி.

வினா:—அபிமான மற்றனுபவிப்ப தெப்படி?

விடை:—புளியம் பழத்தினோடுபோலுந் தாமரையிலையிற் றண்ணீர்போலும் சேற்றிற்பிள்ளை பூச்சிபோலும் யானென தென்னும் பற்றுகளிற் பற்றியும் பற்றாதிருந்து சற்குரு சாஸ்திர முன்னிலையில் சிரவணாதிகளை யவசியஞ் செய்யவேண்டியது சித்தம்.

வைராக்கியப் பிரகரணம் முற்றிற்று.

---

## இரண்டாவது

# * முமூட்சுப்பிரகரணம்.

---

### அவதாரிகை.

முற்பிரகரணத்தால் பிரபஞ்ச வைராக்கியந் தோன்றித் தேகாதிப் பிரபஞ்சங்க ளனித்தியமென்றும், தேகியொருவனே நித்தியமென்றும், ஒருவாற்றானுணர்ந்த சீஷனுக்கு

---

* மோட்சத்தில் அத்தியந்த பிரியமுமுள்ளவன் முமூட்சு எனப்படுவான்.

மோட்சதாக (மோட்சத்தில் விருப்ப) முண்டாகும்படி மேல் முமுட்சுப் பிரகரணங் கூறுகின்றார்.

சற்குரு சாத்தி ரத்தாற் † சவணமா திகளுண் டாக
நற்றுணை சகாய மான வனுபந்த நான்கு முண்டாய்
முற்படு சாத னத்தின் மோட்சதா கத்தி னாலே [டான்.
சிற்பர குருவைத் தேடித் திகைத்திடு வோன்முன் கண்

கண்டன னுசான் பாதங் கருத்துற வணங்கி யெந்தாய், பண்டைமா யையினுன் மூடும் பஞ்சகோ சத்தை நீக்கித், தொண்டனேற் குபதே சந்தான் சொல்லுமென் றவனை வைத்தங், குண்டெனுந் தீக்கை செய்தங் கொருப்படுஞ் சுத்தஞ் செய்தான். (உ)

வினா:—சற்குரு சாஸ்திர முன்னிலையிற் சிரவணாதிகளுண்டாவதற்குமுன்பு செய்காரியம் யாது?

விடை:—அனுபந்த சதுஷ்டயங்களை யனுசரிக்கவேண்டும்.

வினா:—அனுபந்த சதுஷ்டயமாவதென்ன?

விடை:—அதிகாரி, விஷயம், சம்பந்தம், பிரயோசனமென்பனவாம். இவை சாஸ்திராரம்பத்திற்குப் பல மாதலாலிந்த நான்கும் அவசியம் வேண்டும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சாஸ்திராரம்பஞ் செய்கிற புருஷனுக்குப் பல லக்ஷணமா யிருப்பதே பிரயோசனம். அப்படி பிரயோசன

† சவணம் – சிரவணம் (கேட்டல்).

மில்லாவிட்டால் மூடனுக்குக்கூட வொன்றிலும் பிரவிர்த்தி வரமாட்டாது.

வினா:—இந்தச் சாஸ்திரத்திற் கதிகாரியார்?

விடை:—சாதன சதுஷ்டய சம்பத்தியுடையவனும் யுத்திசாமர்த்தியனும் வித்துவானும் மேதாவியுமா யிருக்கிற புருஷனே யதிகாரி.

வினா:—விஷயமாவதென்ன?

விடை:—சீவப்பிர மைக்கமாயிருக்கிற சைதன்னியமே விஷயம். இன்னும் எந்தச் சொரூபத்திற் சகலவேத வுபநிஷதார்த்தங்களுங் கூடியிருக்குமோ அதுவே விஷயமென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—சம்பந்தமாவது யாது?

விடை:—இப்போது சொன்ன சீவப்பிர மைக்கமாயிருக்கிற வஸ்துவுக்கும் அந்த வஸ்துவைப் பிரமேயமா (அறியப்படுவதா)கச் சொல்லுஞ் சாஸ்திரத்திற்கும் போதபோத்திய (அறிவித்தல் அறிவிக்கப்படுதல்) லக்ஷணமாயிருப்பதே சம்பந்தம்.

வினா:—பிரயோசனமாவது யாது?

விடை:—பிரத்தியேகான்மாவும்(கூடஸ்தனும்)பிரமமும் ஐக்கியானுபவம் பெறுவதே யானந்தம். அவ்வானந்தானுபவத்தினாற் சகல சம்சாரபந்தங் (கட்டு) களு மொழிந்துநிற்பதே பிரயோசனம். எவனொருவனுக்குச் சாதனசதுஷ்டயம் பொருந்தி யிருக்கின்றதோ அவனுக்கே இந்தப் பிரயோசன

முஞ்சித்திக்கும்; நான்குசாதனத்திலொன்று குறைந்தாலுஞ் சித்திக்காது. இந்நான்கு சாதனமுமுடையவனே வேதாந்த விசாரத்திற் கதிகாரியாவன்.

வினு:—இந்தச் சாதன சதுஷ்டய மெப்போது சம்பாதிக்கவேண்டும்?

விடை:—சிரவணத்திற்கு முன்பே சம்பாதித்துக்கொண்டு பின்பு சிரவணத்தி லிறங்கவேண்டும். இல்லாவிட்டால் ஞானமுண்டாக மாட்டாது.

வினு:—சாதன சதுஷ்டயமாவதென்ன?

விடை:—நித்தியா நித்தியவஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதிசட்க சம்பத்தி, முமுட்சுத்துவம் என்பனவாம்.

வினு:—இந்நான்கு சாதனங்களில் நித்தியா நித்திய வஸ்து விவேகம் ஒன்றிருந்தாற் போதாதா? நான்கு சாதனமுஞ் சம்பாதிக்க வேண்டுமென்பதேன்?

விடை:—இவ்வொன்று போதாது. இந்த லோகத்திற் சாஸ்திரக்கியான முள்ளவர்களுக்கு நித்தியா நித்தியவஸ்து விவேக முண்டாயிருந்தும், அவர்கள் விஷயாசத்தி (விஷயங்களிற் பிரியம்) யுடையவர்களாய்க் காமிய கன்மங்களைத் தானே செய்துவருகிறார்கள். ஆகையினு லவர்களுக்கு மதிகாரத்துவங் காணேம். ஆதலா லிரண்டாஞ் சாதனமும் வேண்டும்.

வினு:—அப்படியானல் வேதாந்த விசாரத்திற் கதிகாரிக் கிவ்விரண்டு சாதனமும் போதுமே?

விடை:—போதாது. சில ரிஷீசுவரர்களுக்கு இவ்விரண்டு சாதனங்களு முண்டாயிருந்தும், அவர்களும் கோபதாப மேலிட்டுப் பிறரைச் சபிக்கின்றமையால் அவர்கட்கு மதி காரத்துவங் காணேம். ஆதலால் மூன்றுஞ் சாதனமும் வேண்டும்.

வினு:—அப்படியானுல் அதிகாரிக்கு இம்மூன்று சாதன மும் போதுமே ?

விடை:—போதாது. சடைமுடி தரித்துக் கிருஷ்ணுசலங் (மான்தோல்) கக்கத்தி (அக்குளி) லிடுக்கிக்கொண்டு யோகீ சுவரரென்னும் பெயரை யுடையவர்களாய்ச் சமுசாரத்தி னின்றும் புறப்பட்டு விரத்தர்களாய் உபசாந்தர்களா யிருக் கும் பெரியோர்களுக்கு இம்மூன்று சாதனங்களு முண் டாயிருந்தும், அவர்கள் சிரவணமென்ருல் எழுந்துபோய் விடுகிறபடியால் அவர்கட்கு மதிகாரத்துவங் காணேம். ஆத லால் நான்காஞ்சாதனமும் வேண்டும். இந்நான்கு சாதனமு முடையவனே யதிகாரி, அவனுக்கே முத்தி, அதிலொன்று குறைவா யிருந்தாலும் முத்தி யுண்டாகாது.

வினு:—நித்தியாநித்தியவஸ்து விவேகத்தின் இலட்சண மென்ன ?

விடை:—பிரமமே நித்தியம், தேகாதிப்பிரபஞ்சமெல்லா மநித்தியமென்று சுருதி யுத்தி அனுபவங்களாற் கண்ட றிவது.

வினு:—அநித்திய மென்பதனைச் சுருதியா (வேதத்தா) லறிவதெப்படி ?

விடை:—பிரளய காலத்தில் தேகாதிப் பிரபஞ்சமான சகலமும் பிருதிவியி லொடுங்கி, அந்தப் பிருதிவியும் அதற்குப் பத்துக்கொண்ட அப்புவி லொடுங்கி, அப்புவும் அதற்குப் பத்துகொண்ட தேயுவிலொடுங்கித், தேயுவும் அதற்குப் பத்துகொண்ட வாயுவிலொடுங்கி, வாயுவும் அதற்குப் பத்துகொண்ட ஆகாயத்திலொடுங்கி, ஆகாசமும் அஞ்ஞானத்திலொடுங்கி, அஞ்ஞானமும் பிரமத்தி லொடுங்குமென்று சுருதி கூறுவதைக் கண்டறிவதேயாம்.

வினு:—யுத்தியா லறிவதெப்படி?

விடை:—பஞ்சபூதங்களே தடித்துப் பௌதிகமாய் நாள்தோறும் நசிக்கின்றனவென்று யுக்தியாற் கண்டறிவதேயாம்.

வினு:—அனுபவத்தா லறிவதெப்படி?

விடை:—சாக்கிரத்திருந்த * பாகியமான நாமரூபப் பிரபஞ்சங்கள் சொப்பனமான † அந்தர்மனோ ‡ சங்கற்பத்திலில்லை, சொப்பனத்திருந்த அந்தர்மனோ சங்கற்பங்கள் சுழுத்தியான அவித்தையிலில்லை, சுழுத்தியிலிருந்த அறியாமையும் ஆனந்தமுஞ் சாக்கிர சொப்பனங்களி லில்லையென்றனுபவத்தாற் கண்டறிவதேயாம்

வினு:—இனி, பிரமம் நித்தியமென்பதனைச் சுருதியா லறிவதெப்படி?

விடை:—பிரளய காலத்திற் பஞ்சபூதமும் அப்பூதங்களின் காரணமான அஞ்ஞானமும் பிரமத்தி லொடுங்கப்

* பாகியம்—வெளி. † அந்தர்—உள். ‡ சங்கற்பம்—நினைப்பு.

பிரமமாத்திரம் சேடித்திருக்கு (மிகுந்திருக்கு) மென்று சுருதி கூறுவதை யறிவதேயாம்.

வினு:—யுத்தியாலறிவதெப்படி ?

விடை:—இந்தப் பூதபௌதிகங்களெல்லாம் நாள்தோறு நசித்து மீண்டும் உற்பத்தியாகிறதற்குக் காரணமான பிரம மொன்றிருக்குமென் றுத்தியா லறிவதேயாம்.

வினு:—அனுபவத்தா லறிவதெப்படி ?

விடை:—நித்தியத்துவமான பிரமமே கற்பித வடிவத் தால பூதபௌதிகங்களாகத் தோற்றுகிறதென் றனுபவத் தாற் கண்டறிவதேயாம். இதுவே முதற் சாதனம்,

வினு:—இகமுத்திரார்த்த பலபோக விராகத்தின் இலட் சணமென்ன ?

விடை:—இகத்தி (இம்மையி)ற் கிட்டிய தாரபுத்திர தனதானியாதிகளிலும் இராஜபோகத்திலும் பரத்தி (மறு மையி)ற்கிட்டிய தேவமாதர்களிடத்தும் அமிர்தாதி போகங் களினிடத்தும் மலமூத்திர வாந்தி யசனங் (சோறு) களி லெப்படி ஒருவருக்குமாசை பிறவாதோ அப்படியே நிராசை பிறந்திருக்க வேண்டுமென்று சுருதி யுத்தி யனுபவங்களாற் கண்டறிவது.

வினு:—இகலோக போகங்கள் அசுத்தமென்பதனைச் சுருதியாலறிவதெப்படி ?

விடை:—தார (மனைவி) புத்திராதிகளுடைய சரீரங்க ளெல்லாம் எச்சில் தீட்டு இரத்தம் மாமிசம் மலம் மூத்திரங்

களென்னு மிவைகளால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்று சுருதி கூறுவதைக் கண்டறிவதேயாம்.

வினா:—யுக்தியா லறிவ தெப்படி ?

விடை:—அத்திக்கனி பார்வைக்குச் சுத்தமாகவும் பிட்டுப்பார்த்தால் அசுத்தமான கிருமிகள் (புழுக்கள்) நிறைந்து அசங்கியமாகவு மிருப்பதுபோல, தாரபுத்திராதியரும் பார்வைக்குச் சுத்தமான ரூபலாவண்ணியமாகவும் விசாரிக்குமளவில் உள்ளே மலமூத்திராதி துர்க்கந்தங்கள் நிறைந்து அசுத்தமாகவு மிருப்பதினால் இவர்களைத் தொட்டாலு முடனே சுத்தி செய்துகொள்ள வேண்டுமென் றுத்தியாற் கண்டறிவதேயாம்.

வினா:—அனுபவத்தா லறிவதெப்படி

விடை:—அவர்களுக்கு வியாதி பீடைக (வருத்தங்க) ணேரிட்டவிடத்தும் அவர்களிடத்து எச்சில் தீட்டு மலம் சீழ் இரத்தம் மாமிசங்கள் காணப்பட்ட விடத்தும் அவர்களைத் தொட அசங்கியமா யிருப்பதினாலும் அவர்களிறந்துபோன விடத்தும் அவர்களுடலை அரை நாழிகையாவது வீட்டில் வைக்காமல் சூதக (தீட்டு) மென்றுடனே யெடுத்துக் கொண்டுபோய் மயானத்திற்போட்டு வருதலினாலும் அசுத்தமென்று அனுபவத்தாற் கண்டறிவதேயாம்.

வினா:—திரவிய மசுத்த மென்பதைச் சுருதியா லறிவதெப்படி ?

விடை:—திரவியந் தேடுங்காலத்தில் சுத்தமின்றி அசுத்தமான தொழில்களிலும் முயலும்படி மன முண்டாகுமென்று சுருதி கூறுவதைக் கண்டறிவதேயாம்.

வினா:—யுத்தியாலறிவதெப்படி?

விடை:—திரவியங் கிடைத்தகாலத்தும் மனமானது மனைவிமக்கள் கிரக பூமிகளைத் தேடுகின்ற பாசபந்தத்திற்கட்டுண்டழுந்தி நிற்குமென்று யுக்தியாற் கண்டறிவதேயாம்.

வினா:—அனுபவத்தா லறிவதெப்படி?

விடை:—மனம் திரவிய மதிகரித்தவிடத்து ஆசை க்ரோத லோபமதங்களால் மூடப்பட்டு முன் பின் தோற்றாது அஞ்ஞானாந்தகார கூபத்தில் (இருட்டுக் கிணற்றில்) விழுந்து பல விகாரங்களடைவதை யனுபவத்தாற் கண்டறிவதேயாம்.

வினா:—பரலோக போகங்கள் அசுத்தமென்பதைச் சுருதியாலறிவதெப்படி?

விடை:—மானிட சரீரத்திற் பொருந்துந் தாபத்திரயங்கள் தேவசரீரங்களுக்கு முண்டென்று சுருதி கூறுவதைக் கண்டறிவதேயாம்.

வினா:—யுத்தியாலறிவதெப்படி?

விடை:—தேவபோகத்திலும் மனுஷபோகத்தைப் போன்று துக்க முண்டென்று யுக்தியாற் கண்டறிவதேயாம்.

வினா:—அனுபவத்தா லறிவதெப்படி?

விடை:—தேவர்களும் புண்ணிய முடிந்த விடத்தில் அதோமுக (கீழ்முக)ப்பட்டுத் தலைகீழாய்ப் பூமியில் விழுகிறபடியால் அத்தேவபோகமும் அசுத்தமென்று அனுபவத்தால் கண்டறிவதேயாம்; இதுவே யிரண்டாஞ் சாதனம்.

வினா:—சமாதிஷட்க சம்பத்தி யாவதென்ன ?

விடை:—சமம், தமம், உபரதி, திதீட்சை, சமாதானம், சிரத்தையென் றறுவகைகளாம்.

வினா:—சமமாவதென்ன ?

விடை:—மனமானது இறந்தகாலத்திற் கழிந்த பொருளையும் எதிர்காலத்தில் வரும்பொருளையுங் குறித்துச் சிந்தியாநிற்கும். அம்மனத்தை அவற்றைச் சிந்திக்கவொட்டாதபடி நிறுத்தினால் அது நிகழ்காலத்திலுள்ள பொருள்களில் மமதை (எனதெனுந்தன்மை) கொள்ளும்; இப்படி மமதை கொண்ட பொருளுக்கொரு விக்கினம் (தடை) நேரிட்டால் உடனே துக்கம்வரும். ஆதலால் அவைகளி லொன்றையும் நினைக்கவொட்டாதபடி மனோநிக்கிரகம் பண்ணுவதே(மனத்தைத் தடுப்பதே) சமம்.

வினா:—தமமாவதென்ன ?

விடை:—ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை விஷயங்களிற் செல்லவொட்டாமற் றடுப்பதே தமம்.

வினா:—உபரதியாவதென்ன ?

விடை:—பலன்களை நாடிக் கன்மங்களை செய்தால் மீண்டும் பிறந்து அக்கன்ம பலன்களை யனுபவிக்கவேண்டிவரும். ஆதலால் அவை சுமையென்று தள்ளிவிட்டுத் தான் செய்யும் சகல கன்மங்களிலும் பலனை நாடாது ஈசுரார்ப்பணமாகச் செய்வதேயுபரதி.

வினா:—திதீட்சையாவதென்ன ?

விடை:—சுகதுக்கங்கள் வந்தபோது அவைகள்தேகேந்திரியாதி யந்தக்கரணங்களுக்குச் சுபாவமென்று சமனாகக் கண்டு,தன்னையொருவர் வருத்தியவிடத்தில் அவர்களைத்தண்டிக்கு மதிகார வல்லபந் தனக்குண்டா யிருந்தும் பொறுத்திருக்கின்றதே திதீட்சை.

வினா:—சமாதானமாவதென்ன?

விடை:—பெரியோர்களிடத்திலிருந்து சிரவணஞ் செய்யுங்காலத்தில் இந்திரிய அந்தக்கரணங்களை அந்தர்பாகிய (உள்வெளி) விஷயங்களிற்போய் விழவொட்டாமற்றடுத்துச் சிரவணத்தி னிறுத்துவதே சமாதானம். இந்தச் சமாதானமில்லாவிட்டால் உபயப்பிரஷ்டனாவன்.

வினா:—சிரத்தையாவதென்ன ?

விடை:—குருவினிடத்தும் வேதாந்த சாஸ்திரத்தினிடத்தும் ஈசுவரனிடத்தும் நியமமாய் பயபக்தி விசுவாசமுற்றுச் சித்த சுத்தியுண்டாகி யிருப்பதே சிரத்தை. இதுவே மூன்றுஞ்சாதனம்.

வினா:—முமூட்சுத்துவ மாவதென்ன ?

விடை:—இந்த ஜனன மரண ரூபமான சம்சாரப் பிரவாகத்திலடிபட்டு, ஆதியாத்மீக ஆதி பௌதீக ஆதி தெய்வீகமென்னுந் தாபத்திரயங்களால் (மூன்றக்கினிகளால்) வருந்தி, இந்தச் சம்சார துக்கத்திலொரு நிமிஷமாகிலுமிருக்கப்படாதென்று மகா பயங்கொண்டு, இந்தத் துக்கத்தை எந்தப்பெரியோர்கள் போக்குவார்களோ சற்குருவாயிருக்கிற

மகாத்மாக்களெங்கே யிருப்பார்களோவென்று சுட்ட சட்டி கைவிட்டதுபோலச் சகல போகங்களையும் கைவிட்டுத்துறந்து புறப்பட்டு, மகா தீவிரதரபக்குவத்துடன் பகலெல்லாமஆசிரியரெங்குளரோவென்று தேடியும் இராமுழுதும் நித்திரை வராமல் துக்கமேலிட்டு வேர்த்தன் முதலிய எண்குணங்களுடன் தேசாந்தரங்களிலும் வனாந்தரங்களிலும் பர்வதாந்தரங்களிலுந் தேடியலைந்து திரிகின்றதே முமூட்சுத்துவம். இதுவே நான்காஞ் சாதனம்.

வினா:—இப்படியுள்ள முமூட்சுவுக்குக் குரு தரிசனமெப்படி கிடைக்கும்?

விடை:—இம்முமூட்சு அனேக ஜன்மங்களிற் செய்துள்ள நிஷ்காமிய புண்ணிய பலத்தினால் அவாங்மனோகோசரமாய் (வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாமல்) இருக்கின்ற பிரமந்தானே கிருபை கூர்ந்து ஆலி (மழை) யாலாங்கட்டி (பனிக்கட்டி) யாய்த் தடித்ததுபோல மானிடச்சட்டை சாத்தி பாற்கடல் பெருகி வந்ததுபோல இவன் தாகந் தணிக்கும் பொருட்டு ஒரு குருமூர்த்தமா யெழுந்தருளி வரும்.

வினா:—அங்ஙனம் வந்த குருவைக் கண்டிவன் செய்காரியம் யாது?

விடை:—அங்ஙனம் வந்தவுடன் சரீரமுழுதும் நெருப்பு பற்றிக்கொண்டு ஜலந் தேடுகிறவனுக்குமுன் கங்காநதி யெதிர்ப்பட்டதுபோலும் மகாதரித்திரனுக்குமுன் உலவாக்கிழி (எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழி) எதிர்ப்பட்டது

போலும் மகா சந்தோஷகரமாய்க்கண்டு, * சற்பாவங்கொண்டு அடியற்ற மரம்போல அவரது பாதகமலங்களில் விழுந்து, திரிகரண (மனோவாக்குக்காயம்) சுத்தியாய் ஏகாங்க துவிதாங்க திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து, இரண்டு கைகளாலும் பாதத்தைப்பற்றிக்கொண்டு, சுவாமி! அடியேன் நெடுங்காலமாய் ஜனன மரணமென்னும் பாலைவனத்திற் புக்கு, மாயா மோகமென்னு மிருளினால் மறைப்புண்டு, பஞ்சகோசங்களென்னும் பாசவலையிற் சிக்கிக்கொண்டு, தாபத்திரயங்களால் தகிக்கப்பட்டு நிற்கிறேன். ஆதலால் கிருபா மூர்த்தியாகிய தேவரீர் அவைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்படி கிருபாகடாட்சம் வைத்து என் மனவெப்பம் நீங்கிக் குளிர்ச்சியாகும்படி அனுக்கிரகஞ் செய்தருளுமென்று விண்ணப்பஞ் செய்வதாம்.

வினா:—அங்ஙனஞ்செய்த காலையி லாசிரியர் செய் காரியம் யாது.

விடை:—அப்படி சரணாகதி (அடைக்கலம்) யடைந்த சிஷனைச் சமீபத்திலிருக்க வைத்துத், தமதுபரிபூரண திருவ்ஷ்டியினாற் பார்த்து, அவனைப் பயப்படாதே யென்றபயாஸ்தங் கொடுத்து, அவனை ஒருபோதும் அகங்கார மதயானை வந்தடாமலும் மாயா மோகம் பற்றாமலும் சித்தமென்னும் நாயின்பரிசம் படாமலும் நிசானந்தானுபூதி யுண்டாகும்படி வேதாந்த விசாரமென்னுஞ் சிம்மாசனத்தில் தாமெழுந்தரு

* சற்பாவம் - குருவைக் கடவுளாகக் கருதுதல்.

ளியிருந்து, முற்சொல்லிய அகங்காராதி மிருகங்கள் அந்தத் தொனியின் லீடங்கும்படி செய்து, பிறகு நிச்சயாதமகமான சூட்சும புத்தியுள்ள சீஷன் மஸ்தகத்தில் (தலையில்) அஸ்தத்தை (கையை) வைத்துப் பிரமோபதேசமான ஞான தீக்ஷை செய்தருளுவார்.

வினு:—தீக்ஷை யென்பதற் கருத்தமென்ன?

விடை:—தீக்ஷை யென்பது தீயென்றும் க்ஷையென்று மிரண்டுறுப்பினதாம்: அவற்றுள் தீ என்பது அகக்கரணமான மனம் அகங்காரம் சித்தம் என்னும் மூன்றும் நிற்கப் புத்தியே அவயவத்தேகாவதான (ஆத்மாவைத் தேகத்தோடொருமைப்பாடாகப் பாவித்து) நிச்சயம் பண்ணுவது. அஃதெப்படியென்றால், பாம்பானது ரூபதேஜசான கண்களால் மந்திரங்களாகிய சத்தத்தைக் கிரகிக்கப்போகாதென்றறியாமல் அந்த மந்திரசத்தத்தை கிரகித்து அதன்வசத்திற் கட்டுப்பட்டதுபோலப்புத்தியும் தான் ஞானதேஜசென்றறியாமல் அவயவத்தேகாவதான நிச்சயபுத்தி பண்ணுமென்று போதிப்பது. க்ஷையென்பது சகலகன்மங்களையும் நசிப்பித்து ஆகாசம்போலே நின்மலமாக்குவது. இந்தப்படி நிலேத்ததே பிரமோபதேசமான ஞான தீக்ஷையென்றறிய வேண்டியது சித்தம்.

வேர்த்தன் முதலிய வெண்குணங்களென்றதற்குப் பிரமாணம்.

ஒழிவிலொடுக்கம்.

வேர்க்குங்கண் ணீர்த்ததும்புங் கம்பிக்கு மெய்நடுங்கும்
வார்த்தைத் தழுவு மனம்பதறுங் - கார்க்கதமாய்க்

காந்து முமோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்த குணங்களிவை யெட்டு.

ஏகாங்க துவிதாங்க திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்கம் நமஸ்கார மென்பதற்குப் பிரமாணம்.

சிவபுண்ணியத் தெளிவு.

சிரமேகாங்கம் வலக்கரத்தைச் சிரத்திற்குவித்தல் துவிதாங்கஞ், சிரமேல் * வாமகரத்தினையுஞ் சேர்த்தல் திரியாங்கமதாகுஞ், சிரநீள் கரஞ் † சானுக்கணிலந் தீண்டிற் பஞ்சாங் கமதாகுஞ், சிரமோவாய்கா துங்கசானுசெகத்திற் படிதலட்டாங்கம்.

இரண்டாவது
முமுட்சுப்பிரகரணம் முற்றிற்று.

---

## மூன்றாவது
# உற்பத்திப்பிரகரணம்.

---

அவதாரிகை.

முற்பிரகரணங்களிரண்டினாலு மோட்சதாகம் பிறந்து, சற்குரு லாபமுண்டாகிச் சிரவணத்திற்குரிமை பெற்ற சிஷ

---

* வாமகரம்—இடதுகை.

† சானு—முழந்தாள்.

னுக்குமேல் * அபரோட்சாத் மானுபவ † சமாதி ஞான முண்டாகும் பொருட்டு உற்பத்திப் பிரகரணங் கூறுகின்றார்.

‡ சுத்தமாம் பிரமந் தன்னிற் றோற்று ¶ மாயையின் குணத்
பற்றுரு வீசன் சீவன் பஞசபூ தங்க ளுண்டாய் [தாற்
மற்றுமாம் பூதந் தானே மருவிச்சூக் குமங்க ளாகி
நித்தனுந் தூல பஞ்சீ கரணமாய் நிகழுங் காணே.

அசிப்தம்.

வினா:—அகண்ட பரிபூரண சொரூப $ வியாபகத்தில் ஜகஜீவபரந் தோற்றியதெப்படி?

விடை:—சுத்தப்பிரமமாகிய சர்வசாட்சியினிடத்து அக்கினியிற் சூடுபோல் அபின்னமாக ஒரு சிற்சத்தியுண்டு. அச்சத்தி || அதீதப்பிரமத்திலடங்கி நிற்கும்போது அவ்வகண்ட சொரூப வியாபகத்திற்குச் சுத்தப்பிரம மென்றுபெயர். அ

* அபரோட்சத்தின் வடிவம் இது கடம் இது படம் என்றாற் போல்வது.

† "ஆங்கனங் குறித்த வம்முதற் பொருளொடு, தான்பிற னாகாத்த கையது சமாதி" என்று தொல்காப்பிய வுரையிற் காட்டப்பட்டிருக்கின்றது.

‡ சுத்தம்—கலப்பின்மை.

¶ உள்ளதுபோற்றோன்றி விசாரணையிற் றனக்கெனவடிவின்றி யொழிவது மாயையாம்.

$ காலத்திலும் தேசத்திலும் முடிவில்லாதது வியாபக மெனப்படும்.

|| அதீதம் - மனத்திற்கும் வாக்கிற்கும் அப்பாற்பட்டிருத்தல்.

படி யபின்னமான சிற்சத்தி * பின்னமா விசிரிம்பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும்போது அதற்குப் பெயர் பராசத்தி யென்றாயிற்று. அப்பராசத்தியாகிய மகாகாரண சரீரத்துடன் கூடி அகண்டாதீத ஸ்தானமாகிய துரியாவஸ்தைக் கபிமானியாயிருந்து தற்பிரகாசமாய் விளங்குகையால் பரை வியாபகத்திற்குள்ளான சுத்தப் பிரமத்திற்குப் பரப்பிரமமென்றும் குருவென்றும் சிவமென்றும் பெயர் வந்தன. இதனைச் சாமவேத மகாவாக்கியமான தத்துவமசி வாக்கியம்சொல்லும். இச்சுத்தப் பிரமமே அசிபதார்த்தமான சிவதுரியம். இப்படி † அவயவரகிதமா யிருக்கின்ற பராசத்தியினிடத்தில் பிரம சந்நிதான விசேஷத்தால் சத்துவம் ரஜசு தமசென்னும் § அவிகிர்த திரிகுணங்களுண்டாயின.

வினா:—அக்குணங்களுக்கு நாமம் யாது?

விடை:—சத்துவத்திற்கு ஆனந்தரூப சத்தியென்றும், ரஜசுக்குச் சித்ரூபசத்தியென்றும், தமசுக்குச் சத்ரூபசத்தியென்றும் பெயர்.

வினா:—அந்தப் பரப்பிரமம் சத்துவத்திற் பிரதிபலித்தபோது நாமம்யாது?

விடை:—ஆனந்தரூப சத்தியாகிய காரண சரீரத்துடன் கூடி உபசாந்த ஸ்தானமாகிய சர்வானந்த சுழுத்தியவஸ்தைக் கபிமானியாயிருந்து சர்வமூர்த் தானாய் விளங்குகிறோ

---

* கற்பனையில் வேறுபட்டதாக வெளிப்பட்டு.

† உறுப்புகளில்லாதிருக்கின்ற.

§ அவிகிருதம் – மாறுதலில்லாதது.

மென்பது மறந்து * உபசமனமா யதீதப்பட்டு நிற்பதால் அப்பரப்பிரமத்திற்குப் பரமானந்தரென்றும் பெயராம். இதுவே அசிபதார்த்தமான சிவசுழுத்தி.

வினா:—பரமானந்தர் ரஜசிற் பிரதிபலித்தபோது நாமம் யாது?

விடை:—சித்ரூபசத்தியாகிய சூட்சுமசரீரத்துடன் கூடி, † விஸ்வக்கிராச ஸ்தானமாகிய சர்வப்பிரகாச சொப்பனவஸ்தைக் கபிமானியாயிருந்து சகல புவன சராசரப் பிரபஞ்சங்களையும் விழுங்கித் தானே ஜகசொரூபமாகப் பிரகாசித்து நிற்பதால் அப்பரமானந்தருக்குத் தேஜோமயரென்றும் பிரஜாபத்தியரென்றும் பெயராம். இதுவே அசிபதார்த்தமான சிவசொப்பனம்.

வினா:—தேஜோமயர் தமசிற் பிரதிபலித்தபோது நாமம் யாது?

விடை:—சத்ரூப சத்தியாகிய ஸ்தூலசரீரத்துடன்கூடிச், சம்பூரணஸ்தானமாகிய சர்வவியாபக ஜாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து சர்வசராசரப் பிரபஞ்சங்களுள்ளுந் தானே தானாய் விளங்கி நிற்பதால் அந்தத் தேஜோமயருக்குப் பரிபூரணரென்றும் சிற்சொலிதையென்றும் பெயராம். இதுவே அசிபதார்த்தமான சிவசாக்கிரம்.

**அசிபதம் முற்றிற்று.**

---

* உபசமனம் - அடங்கியிருத்தல்.

† விஸ்வக்கிராசம் - உலகத்தை யுட்கொண்டிருத்தல்.

## தற்பதம்.

வினா:—அந்தப் பரிபூரணப் பிரமசந்நிதானத்திற் ‡சேஷ்டித்தது யாது?

விடை:—¶ சுத்தியில் ரசிதப்பிராந்தி தோன்றியதுபோல அந்தப் பரிபூரணப் பிரமசந்நிதானத்தில் மூலப்பிரகிருதி யென்றொரு சத்தி விவர்த்தமாகச் சேஷ்டித்தது. அந்தச் சத்தியைப் பரிபூரணர் வியாபித்திருந்தபடியால் அந்த மூலப்பிரகிருதியில் பிரமசந்நிதான விசேஷத்தால் சத்துவம் ரஜசு தமசென்னும் விகிர்த திரிகுணங்களுண்டாயின.

வினா:—அவைகளி னுமம் யாது?

விடை:—அத்திரி (மூன்று) குணங்களும் முறையே மாயை யென்றும் அவித்தை யென்றும் பிரகிருதி யென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள் மாயையினிடத்து நிருமலமான கண்ணுடியிற் சூரியன் பிரதிபலித்ததுபோலப் பரிபூரணப் பிரமம் சலட்சணமாகப் பிரதிபலிக்கும். அந்தப் பிரதிவிம்பசைதன்னியத்திற்கு ஈசுவரனென்று பெயர். அந்த மாயையாகிய மகாகாரண சரீரத்துடன்கூடிப் பிரமாண்டஸ்தானமாகிய துரியாவஸ்தைக் கபிமானியாயிருந்து சகல சராசரப் பிரபஞ்சத்துடனுங் கலந்து நிற்பதால் அப்பரிபூரணப் பிரமத்திற்கு ஈசுவர சாட்சியாகிய பிரமமென்றும் சர்வஞ்ஞரென்றும் பெயராம். இதற்கு ஞானம்—சத்தி; சகுண ஐசுவரிய

‡ சேஷ்டித்தல் - தொழிற்படுதல்.

¶ கிளிஞ்சலில் வெள்ளியென்னும் மயக்கம்.

சம்பன்னத்துவம்-போகம்; * ஓங்காரம்-அட்சரம். இவ்வட்சரத்திற்சகலமுமடங்கியிருக்கையால் இதனை †யதிஷ்டித்திருந்த பிரம சைதன்னியத்திற்கு மகாத்மாவென்று மொருபெயராயிற்று. இதுவே தற்பதார்த்தமான பரதுரியம்.

வினு:—அப்படியானுல் இது மும்மூர்த்திகளா யானதெப்படி?

விடை:—சத்துவகுண மாயையில் சத்துவம் ரஜசுதமசென்னு முக்குணங்க ளுண்டாயின. அவற்றுள் தாமதகுணப்பிரதானமாய் அவ்வியாகிருதமாகிய காரண சரீரத்துடன் கூடி அக்கினி ஸ்தானமான சுழுத்தியவஸ்தைக் கபிமானியாயிருந்து சகல பிரபஞ்சங்களையும் சங்காரம்பண்ணி நிற்பதால் அந்த அபிமானிக்கு அவ்வியாகிருதரென்றும் உருத்திரரென்றும் பெயராம். இதற்குத் ‡ திரோதாயி-சத்தி; சர்வசங்காரம்-போகம்; மகரம்-அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கியிருக்கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த ஈசுவரனுக்குச் சுத்தாத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தற்பதார்த்தமான பரசுழுத்தி. சத்துவகுணப் பிரதானமாக இரணியகருப்பமாகிய சூட்சும சரீரத்துடன் கூடிச், சந்திரஸ்தானமான சொப்பனுவஸ்தைக் கபிமானியா யிருந்து, சகலப் பிரபஞ்சங்களையு மிரட்சித்து நிற்கையால் அவ்வபிமானிக்கு இரணியகருப்பரென்றும் விஷ்ணுவென்றும் பெயராம்.

---

* ஓங்காரம் - பிரணவம்.

† அதிஷ்டித்து - ஆக்கிரமித்து (ஏறி).

‡ திரோதாயி - ஆவரணம் (மறைப்பு).

இதற்கு இச்சை-சத்தி; ¶ சர்வபாவகர்த்துருத்வம்-போகம்; உகாரம்-அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கி யிருக்கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த ஈசுவரனுக்குச் சூத்திராத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தற்பதார்த்தமான பரசொப்பனம். இராசதகுணப் பிரதானமாக விராட்டாகிய ஸ்தூலசரீரத்துடன் கூடிச், சூரியஸ்தானமான ஜாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து, சகல சராசரப் பிரபஞ்சங்களையும் சிருஷ்டிபண்ணி நிற்பதால் அவ்வபிமானிக்கு விராட்டென்றும் பிரமாவென்றும் பெயராம். இதற்குக் கிரியை-சத்தி; § சர்வகர்த்துருத்வம்-போகம்; அகாரம்-அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கி யிருக்கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த விசுவரனுக்குச் சர்வபூதாத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தற்பதார்த்தமான பரசாக்கிரம்.

தற்பத முற்றிற்று.

---

## தொம்பதம்.

வின:—இராசதகுண அவித்தையின் காரியமெப்படி?

விடை:—அவித்தையினிடத்து மலினசலத்திற் சூரியன் பிரதிபலித்ததுபோலப் பிரமசைதன்னியம் பிரதிபலிக்கும். அந்தப் பிரதிபலனத்திற்குச் சீவனென்றுபெயர். அவ்வவித்

---

¶ சர்வபாவ கர்த்துருத்துவம் - பாவ (இருப்பு) பதார்த்த மனைத்திற்கும் கர்த்தாவா யிருக்குந்தன்மை.

§ சர்வகர்த்துருத்துவம் - யாவற்றிற்கும் கர்த்தாவா யிருக்குந்தன்மை.

தையாகிய மகர்காரண சரீரத்துடன் கூடி, லலாட (நெற்றி) ஸ்தானமாகிய துரியாவஸ்தைக் கபிமானியாயிருந்து, அவஸ்த்தாத்திரய விலக்ஷண (வேறு) ஞானசொரூபியா யிருக்கிறபடியால் அப்பிரம சைதன்னியத்திற்குச் சீவசாட்சியாகிய கூடஸ்த ரென்றும் பிரத்தியேகாத்மா வென்றும் பெயராம். இதற்கு ஞானம் - சத்தி; ஆனந்தபரவசம் - போகம்; ஓங்காரம் - அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கி நிற்கையால் இதனை யதிஷ்ட்டித்திருந்த வாத்மாவுக்கு நின்மலாத்மாவென்றுமொரு பெயர் வந்தது. இதுவே தொம் பதார்த்தமான சீவதுரியம்.

வினா:—ஆனால் இது மூவகையான்மாக்களா யானதெப்படி?

விடை:—இராசதகுண அவித்தையில் சத்வரஜசு தமசென்னுமுக்குணங்க ளுண்டாயின, அவற்றுள் தாமதகுணப் பிரதானமாய் ஆனந்தமயகோசமாகிய காரணசரீரத்துடன் கூடி, இருதயஸ்தானமான சுழுத்தியவஸ்தைக் கபிமானியா யிருந்து, சுழுத்தி சுகத்தை யனுபவித்திருத்தலால் அவ்வபிமானிக்குப் பிராஞ்ஞ னென்றும் பாரமார்த்திக னென்றும், அபரிச்சின்னனென்றும் பெயராம் இதற்குத் திரோதாயி - சத்தி; ஆனந்தம் - போகம், மகார அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கியிருக்கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்குப் பரமாத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தொம்பதார்த்தமான சீவசுழுத்தி.

சத்துவகுணப் பிரதானமாகப் பிராணாதி கோசத்திரயங்களாகிய சூட்சும சரீரத்துடன் கூடிக், கண்டஸ்தான

மான சொப்பனவஸ்தைக் கபிமானியாயிருந்து, சொப்பனப் பிரபஞ்சங்களிற் கூடியுங் கூடாதிருத்தலால் அவ்வபிமானிக் குத் தைசதனென்றும், பிரதிபாசிகனென்றும், சொப்பன கற்பிதனென்றும் பெயராம். இதற்கு இச்சை-சத்தி; அயுக் தம்-போகம்; (ஏனென்றால்பேதாபேதமின்றியனுபவிப்பன்.) உகாரம்-அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கி யிருக் கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்கு அந்த ராத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தொம்பதார் த்தமான சீவசொப்பனம்.

இராசதகுணப் பிரதானமாக அன்னமயகோசமாகிய ஸ்தூலசரீரத்துடன் கூடி, நேத்திரஸ்தானமான ஜாக்கிரா வஸ்தைக் கபிமானியாயிருந்து, பிரபஞ்ச விவகாரங்களில் முயன்று நிற்பதால் அவ்வபிமானிக்கு விஸ்வனென்றும், விவகாரிகனென்றும், கிஞ்சிக்ஞ (சிற்றறிவ)னென்றும், சிதா பாச (சித்துப்போலிருப்பவன். அஃதாவது சித்துப்போலி) னென்றும் பெயராம். இதற்குக் கிரியை-சத்தி; லோகாபி மானத்தினால் நல்லது பொல்லாதென்றறிந் தனுபவிப்பது பற்றி யுக்தர்-போகம்; அகாரம்-அட்சரம். இவ்வட்சரத்தி லித்தனையு மடங்கியிருக்கிறபடியால் இதனை யதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்குச் சீவாத்மாவென்று மொரு பெயர்வந்தது. இதுவே தொம்பதார்த்தமான சீவசாக்கிரம்.

தொம்பதம் முற்றிற்று.

வின:—தாமதகுணப் பிரகிருதியின் காரிய மெப்படி?

விடை:—பிரகிருதியினிடத்து ஆவரண (மறைப்பு) விட்சேப (வெளிப்படல்) மென்றிரண்டு சத்திகளுண்டு. அவற்றுள் ஆவரணமானது தத்துவஞானிகளையு மீசுவரனையுந்தவிர மற்றைச் சீவர்களுக்கெல்லாம் சரீரத்திரயம், சீவன், சாட்சி சைதன்னியம் இவைகளின்வேற்றுமை தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும். இவ்வாவரணம் நீங்குவதேமுத்தி. தமோகுணப் பிரதானமான விக்ஷேபசத்தியே மகா காரணப் பிரபஞ்சமாய் நின்றது. விக்ஷேபசத்தியும் சத்வ ரஜசு தமசென்னு முக்குணசமமாகி நிற்கும். அவற்றுள் தமசு பிரதானமாகும்போது காரணப் பிரபஞ்சமும், சத்வம் பிரதானமாகும்போது சூட்சுமப் பிரபஞ்சமும், ரஜசு பிரதான மாகும்போது ஸ்தூலப்பிரபஞ்சமு முண்டாயின.

வின:—அதற்கு விவர மெப்படி?

விடை:—சத்துவகுண மாயையிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் நிருமலசலத்திற் பிரதிபிம்பித்த சூரியன்போல் ஏகராகியும் சர்வஞ்ஞராகியு மிருப்பர். இராசதகுண வவித்தையிற் பிரதிபிம்பித்த சீவர்கள் அவித்தையு மனேக மாகையால் மலினகடசலத்திற் பிரதிபிம்பித்த அனேகஞ் சூரியர்போல் அனேகராகியுங் கிஞ்சிக்கியராகியுமிருப்பார்கள். அங்ஙனம் அவித்தையாய்ப் பிரதிபிம்பரான சீவர்களுக்குச் சர்வக்கியரான ஈசுவரன் கிருபைகூர்ந்து சரீரத்திரயங்கள் கொடுத்து முத்தியடைவிக்கும்படி கருதி, தமோகுணமான பிரகிருதியை இரண்டு பங்காக்கி முதற் பங்கில் ஆவரணசத்தி

யையும் இரண்டாம் பங்கில் விக்ஷேபசத்தியையு முண்டாக்கினர். அப்பிரகிருதியி னறிவே மகா காரணசரீரம். அதிற் பிரதிபித்த சீவனே பிராக்ஞன். அதினறியாமையே ஆனந்த மயகோசமான காரணசரீரம். இப்படிப்பட்ட வாவரணசத்தியானது சீவதுரியத்திருந்த கூடத்தரையும் ஈசுவரனையுந் தவிர மற்றைச் சீவர்களுக்கெல்லாம் ஸ்தூலசூட்சுமகாரண சரீர பேதங்களையு மவற்றின் அபிமானிகளையுஞ் சாட்சிசைதன்னியங்களையு மொன்றுக்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும், அதனால் மறைபட்ட சீவர்க ளிந்த விருபத்தொன்பது தத்துவங்களையும் தானென் றபிமானிப்பர்கள். அவ்வபிமானத்தை அகங்காரக் கிரந்தி (முடிச்சு) யென்றுஞ் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லுவார்கள்.

வினு:—ஆனல் முத்தி கூடுவதெப்படி?

விடை:—சற்குரு கடாட்சத்தினு லாவரணநீங்கி இருபத்தொன்பது தத்துவங்களிலு மொன்றுக்கொன்றுள்ள பேதங்களைக் கண்டறிவதே முத்திகூடு முபாயம்.

வினு:—ஆனல் விக்ஷேபசத்தியின் காரியம் யாது?

விடை:—விக்ஷேபசத்தியும் சத்வ ரஜசு தமசென்னும் திரிகுண சகிதமாயிருக்கும். அந்தச் சத்தியில் சத்ததன்மாத்திரையான வாகாசமும், ஆகாசத்தில் பரிசதன்மாத்திரையான வாயுவும், வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும், தேயுவில் ரசதன்மாத்திரையான அப்பும், அப்புவில் கந்த தன்மாத்திரையான பிருதிவியும் உண்டாயின. இந்தப் பஞ்ச

தன்மாத்திரைகள் அபஞ்சீகிருத பஞ்சபூதங்க ளென்றும் சூட்சுமபூதங்களென்றும் சொல்லப்படும். இந்தச் சூட்சும பூதங்களினின்றும் சூட்சுமசரீரங்களும் ஸ்தூலசரீரங்களும் உண்டாயின.

வினு:—எப்படி யுண்டாயின?

விடை:—இந்த ஆகாச முதலான சூட்சுமபூதங்களில் முக்குணமுந் தொடர்ந்துநிற்கும். அவற்றுள் சத்துவாம்சத் தில் பூதத்திற் கொவ்வொரு மாத்திரை யெடுத்துச் சமஷ் டியா யொன்றாகக் கூட்டினது அந்தக்கரணங்களாம்.

வினு:—அந்தக்கரணத்தி லாகாசங் கூடினதற் கடையா ளம் யாது?

விடை:—அந்தக்கரணமு மாகாசம்போல் சகல சத்தத் திற்கு மிடங்கொடுத்துத் தரிப்பதே யடையாளம். அப்படி தரிக்கின்ற விருத்திக்குத் தேஜசான அறிவென்று பெயர்.

வினு:—வாயுவி னமிசங் கூடினதற் கடையாளம் யாது?

விடை:—வாயுவைப்போ லலைகின்றதே யடையாளம். இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர்.

வினு:—தேயுவி னமிசங் கூடினதற் கடையாளம் யாது?

விடை:—தேயுவைப்போல விடயங்களை இன்னதின்ன தென்று விளக்கிவைக்கின்றதே யடையாளம். இப்படி விள க்கிவைக்கின்ற விருத்திக்குப் புத்தியென்று பெயர்.

வினு:—அப்புவி னமிசங் கூடினதற் கடையாளம் யாது?

விடை:—அப்புவைப்போல் சகல விடயங்களிலும் பற்றி நிற்கிறதே யடையாளம். இப்படி பற்றி நிற்கும் விருத்திக்குச் சித்தமென்று பெயர்.

வினு:—பிருதிவி னமிசங் கூடினதற் கடையாளம் யாது?

விடை:—பிருதிவியைப்போல் சகல விடயங்களிலும் கடினமா யபிமானித்திருப்பதே யடையாளம். இப்படி யபிமானித் திருக்கும் விருத்திக்கு அகங்காரமென்று பெயர். இப்படியே அந்தச் சூட்சுமபூதங்களின் சத்துவாமிசத்தில் பூதத்திற் கொவ்வொரு மாத்திரையையெடுத்து வியஷ்டியாய்த் தனித்தனியே வைத்தது ஞானேந்திரியங்களாம்.

வினு:—ஞானேந்திரியங்களின் குணம் யாது?

விடை:—சுரோத்திரம் ஆகாசத்தினமிசமாகையால்ஆகாசகுணமான சத்தமாத்திர மறியும். தொக்குவாயுவி னமிசமாகையால் வாயுவின்குணமான பரிசமாத்திரமறியும். சட்சு தேயுவி னமிசமாகையால் தேயுவின் குணமான ரூபமாத்திர மறியும். சிங்குவை அப்புவினமிசமாகையால் அப்புவின்குணமான ரசமாத்திர மறியும். கிராணம் பிருதிவியி னமிசமாகையால் பிருதிவியின் குணமான கந்தமாத்திர மறியும். இவ்வைந்திந்திரியங்களு மொன்றோடொன்று கூடாதபடியினுல் இதர பூதங்களைக் கிரகித்தறியமாட்டா அந்தக்கரணத்தில் ஐந்துமாத்திரையு மொன்ருய்க் கூடினதுகொண்டு அஃது ஐந்திந்திரியத்திலும் ஐந்துவிடயங்களையுமறிகின்றது. இந்தச் சத்துவாமிச சமஷ்டியினு லுண்டான அந்தக்கரணம் ஐந்து, வியஷ்டியினு லுண்டான ஞானேந்திரியம் ஐந்து,

ஆகப்பத்தும் ஞானசாதனமாகையால் அறிதற்கருவிகளாம். இப்படியே அந்தச் சூட்சுமபூதங்களின் இராசதாமிசத்திற் பூதத்திற் கொவ்வொரு மாத்திரையெடுத்துச் சமஷ்டியா யொன்ருகக் கூட்டினது பிராணுதி பஞ்சவாயுக்களாம்.

வினு:—பிராணுதி பஞ்சவாயுக்களின் குணம் யாது?

விடை:—வியானவாயு ஆகாசத்தி னமிச மாகையால் ஆகாசம்போல் சர்வ சரீரமும் வியாபித்திருக்கும். பிராண வாயு வாயுவி னமிசமாகையால் வாயுவைப்போ லிருதய ஸ்தானத்திலிருந்து நாசிகாபரியந்த மலைந்து நிற்கும் அபா னவாயு அக்கினியி னமிசமாகையால் அக்கினியைப்போல் ஜாடராக்கினியாக ஜொலித்துக் குதஸ்தானத்தினின்று அன் னபானுதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவி னமி சமாகையா லப்புவைப்போலச் சரீரநடுவான நாபிஸ்தான த்தினின்று அன்னபானுதிகளைச் சகல நாடிகளினு நிரப்பி நிற்கும். உதானவாயு பிருதிவியி னமிசமாகையால் பிரு திவியைப்போலக் கடினமாகக் கண்டத்தினிற்கும்.

வினு:—இந்தப் பஞ்ச வாயுக்க ளல்லாமல் வேறு வாயுக் களுமுண்டோ?

விடை:—வாந்திபண்ணுகிறது நாகனென்றும், இமை த்து விழிக்கின்றது கூர்மனென்றும், தும்முகிறது கிரிகர னென்றும், கொட்டாவிகொள்ளுகிறது தேவதத்தனென் றும், வீங்குகிறது தனஞ்செயனென்றும் வேறு ஐந்துவாயுக் கள்உண்டென்று சிலர் சொல்லுவார்கள். இவ்வைந்தும் பிரா வாயுவின் தொழிலேயன்றி வேறல்ல. அந்தச் சூட்சுமபூதங்

களி னிராசதாமிசத்தில் பூதத்திற் கொவ்வொரு மாத்திரை யெடுத்து வியஷ்டியாய்த் தனித்தனியே வைத்தது கன்மேந் திரியங்களாம்.

வினு:—கன்மேந்திரியங்களின் குணம் யாது?

விடை:—வாக்கு ஆகாசத்தி னமிசமாகையால் ஆகாசத் தினிடமாய் நின்று வசனிக்கும். பாணி வாயுவி னமிசமாகை யால் வாயுவி னிடமாய் நின்று ஏற்றலிடுதல் செய்யும். பாதம் அக்கினியி னமிசமாகையால் அக்கினியினிடமாய் நின்று நடக்கும். உபஸ்தம் அப்புவி னமிசமாகையால் அப்புவினிடமாய் நின்று ஆனந்திக்கும். பாயுரு பிருதிவியி னமிசமாகையால் பிருதிவியினிடமாய் நின்று மலவிசர்க்கம் பண்ணும். இவ் வைந்து மொன்றேடொன்று கூடாதபடியினல் வேறு தொழில் செய்யமாட்டா. வாயுவில் ஐந்துமாத்திரையு மொன் ருய்க்கூடினதுகொண்டு அது கன்மேந்திரிய மைந்தினுலு மைந்து தொழில் செய்கின்றது. இந்த இராசத சமஷ்டியி லுண்டான வாயுக்களைந்தும் இராசத வியஷ்டியி லுண்டான. கன்மேந்திரிய மைந்தும் ஆகப் பத்தும் கிரியாசாதன மாகை யால் தொழிற்கருவிகளாம். இவ்விருபது தத்துவங்களே சூட்சுமசரீரம். இதனைமாயாப்பிரதிபிம்பரான ஈசுவரன் அவி த்தையாய்ப் பிரதிபிம்பரானசீவர்களுக்குச் சிருஷ்டிதோறும் ஒவ்வொரு சூட்சும சரீரங் கொடுத்துவருவர். இப்படி சூட் சும சரீரம் பெற்றுக்கொள்ளாத சீவர்களுக்கு மறு சிருஷ்டி யிற் கொடுத்தருளுவார். இந்தச் சூட்சுமசரீரவபிமான சீவ னுக்குத் தைசதனென்றுபேர். இப்படியே பஞ்சபூதங்களின்

சத்துவாமிசமும் இராசதாமிசமுங் கழியத் தாமதாமிசமாத் திர மிஞ்சிநின்றது ; இதுவே சூட்சுமசரீர வுற்பத்தி.

வினா:—ஸ்தூலசரீர வுற்பத்தி யெப்படி ?

விடை:—மிஞ்சிநின்ற தாமதாமிசத்திலுள்ள ஐந்துபூதங்களையு மொன்றிரண்டாகப் பகுத்து, முதற்பாதி யைந்தையு மொன்றை நான்காக்கி, இரண்டாம் பாதி ஐந்துடனே தன்னமிசத்துடன் கூட்டாமல் மற்ற நான்கு பூதத்துடனும் பூதத்திற் கரைக்காலரைக்கால் மாத்திரையாகக் கொடுப்பதே பஞ்சீகரணம்.

வினா:—இப்படி பஞ்சீகரணப்படுத்தியதற்குப் பிரயோசனம் யாது ?

விடை:—பஞ்சீகரித்த ஸ்தூலபூதங்களில் ஆகாசத்திற் பரிசரூப ரசகந்தங்களாகிய நாற்குணமும் வியாப்பியம் (அடங்கியிருத்தல்) ஆகையால் அதிரிசியமாய்ப்போக, நிசகுணமான சத்தம் திரிசியமாகும். வாயுவில் ரூபரசகந்தங்களாகிய முக்குணமும் வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போகக், காரணகுணமான சத்தமும் நிசகுணமான பரிசமும் திரிசயமாகும். தேயுவில் ரசகந்தங்களாகிய இருகுணமும் வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போகக், காரணகுணமான சத்தபரிசங்களும் நிசகுணமான ரூபமும் திரிசியமாகும். அப்புவில் கந்தகுணம் வியாப்பியமாகையால் அதிரிசயமாய்ப்போகக் காரணகுணமான சத்தபரிசரூபங்களும் நிசகுணமான ரசமும் திரிசியமாகும். பிருதிவியில் காரணகுணமான சத்தபரி

சரூப ரசங்களும் நிசகுணமான கந்தமும் திரிசயமாகும். இதுவே ஸ்தூல பஞ்ச பூதங்களாம்.

வினு:—இந்த ஸ்தூபூதங்களில் எவை யுண்டாயின?

விடை:—ஆறு தத்துவமாய் நால்வகை யோனியாய் எழுவகைப் பிறவிகளாயுள்ள ஸ்தூலசரீரங்க ளுண்டாயின.

வினு:—ஆறுதத்துவ மாவதென்ன?

விடை:—சர்மம், உதிரம், மாமிசம், சுனாயு, அஸ்தி, மச்சை என்னும ஆறும்.

வினு:—நால்வகை யோனியாவதென்ன?

விடை:—சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பீசம் என்னும் நான்காம்.

வினு:—எழுவகைப் பிறவிகளாவதென்ன?

விடை:—தேவர், மக்கள், புள், விலங்கு, நிலத்திலூர்வன, ஜலத்திலூர்வன, ஸ்தாவரம் என்னும் ஏழாம். இவை எண்பத்துநான்குலட்ச பேதங்களா யிருக்கும். ஈசுவரன் சீவர்களுக்கிந்த ஸ்தூலசரீரத்தை யுண்டுபண்ணினார். இந்த வியஷ்டி ஸ்தூலசரீரத்தை யபிமானித்த சீவனுக்கு விசுவனென்றும், சமஷ்டி ஸ்தூல விராட்டை யபிமானித்த ஈசுவரனுக்குப் பிரமனென்றும் பெயர். வியஷ்டி சூட்சும சரீரத்தை யபிமானித்த சீவனுக்குத் தைசதனென்றும், சமஷ்டி சூட்சும இரணியகர்ப்பசரீரத்தையபிமானித்த ஈசுவரனுக்கு விஷ்ணுவென்றும் பெயர். வியஷ்டி காரணசரீரத்தை யபிமானித்த சீவனுக்குப் பிராக்ஞனென்றும், சமஷ்டி காரண

அவ்வியாகிருத சரீரத்தை யபிமானித்த ஈசுவரனுக்கு ருத்திரனென்றும் பெயர். இவைகளே சீவேசுரசரீரத்திரயங்களுண்டாயின மார்க்கமென்று சொல்லப்படும். இனி விசாரஞானத்தினுல் சரீரத்திரயங்களையும் லயப்படுத்தி சாட்சியாகிய தன்னை யுள்ளபடி யறியவேண்டியது.

வின:—சற்குரு சாஸ்திர முன்னிலையில் சீவாதி சரீரத்திரயங்களை விசாரிக்கிற புருஷனர் ?

விடை:—ஈசுவரன் இயல்பாகவே தனது சொரூபத்தில் மயக்கமில்லாதவனு யிருத்தலால் சீவாதி சரீரத் திரயங்களை விசாரிப்பதற்கு அவசியமில்லை. அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்சம், அபரோட்சம், துக்கநிவிர்த்தி, தடையற்ற ஆநந்தமென்னும் சப்தாவஸ்தையும் சீவனுக்கே உரித்தாயிருத்தலால் அவனே விசாரிக்கின்ற புருஷன்.

வின:—அவ்விசாரணையின் வகை யெப்படி ?

விடை:—சீவனுக்கு வாச்சியார்த்த லட்சியார்த்தமான அசுத்த சுத்தங்களையும் ஈசுவரனுக்கு வாச்சியார்த்த லட்சியார்த்தமான அசுத்த சுத்தங்களையும் பகுத்தறிகிறதேயாம்.

வின:—சீவனுக்கு வாச்சியார்த்தமான வசுத்தம் யாது?

விடை:—ஸ்தூலசரீரத்தில் ஞானேந்திரியபஞ்சகம் ஒன்று, கன்மேந்திரிய பஞ்சகம் ஒன்று, இவற்றைப் பகுத்தறிகிற அந்தக்கரணங்கள் நான்கு, இவைக்கெல்லாஞ் சேர்க்கை கொடுப்பதான பிராணுதிபஞ்சகம் ஒன்று, இவ்வேழுமே காரியவுபாதி. இவ்வேழுபாதிகளையுந் தானென்று சீவனபிமானித்ததே தொம்பத வசுத்தம்.

வினு:—சீவனுக்கு லட்சியார்த்தமான சுத்தம் யாது?

விடை:—இவ்வேழுபாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச் சாட்சியா யிருப்பதே தொம்பத சுத்தம்.

வினு:—ஈசுவரனுக்கு வாச்சியார்த்தமானவசுத்தம்யாது?

விடை:—சர்வஞ்ஞன், சர்வகாரணன், சர்வேந்திரியாமி, சர்வேசுரன், சர்வசிருஷ்டி, சர்வஸ்திதி, சர்வசங்காரன் என்னும் இவ்வேழுங் காரணவுபாதி. இவ்வேழுபாதிகளையுந் தானென்று ஈசுவர னபிமானித்ததே தற்பதவசுத்தம்.

வினு:—சர்வஞ்ஞனென்று லென்ன?

விடை:—சகலப்பிரபஞ்சங்களிலும் வியாபகமான செயல்களெல்லாம் அறிந்து நிற்பது.

வினு:—சர்வகாரண னென்றுலென்ன?

விடை:—சர்வசகங்களு மழிந்தவிடத்துந் தானழிவற்று நித்தியனு யிருப்பது.

வினு:—சர்வேந்திரியாமி யென்றுலென்ன?

விடை:—சர்வஜக விலாசமாகிய தேகேந்திரியாதிகளுக்கு முள்ளீடாய் நிறைந்து நிற்பது.

வினு:—சர்வேசுர னென்று லென்ன?

விடை:—சகலப் பிரபஞ்சங்களுக்குங் கர்த்தாவாய் விளங்கி நிற்பது.

வினு:—சர்வ சிருஷ்டி யென்றுலென்ன?

விடை:—சர்வசராசரப் பிரபஞ்சங்களையுஞ் சிருஷ்டித்து நிற்பது.

வினா:—சர்வஸ்திதி யென்று லென்ன?

விடை:—சர்வஜகங்களையும் பரிபாலனம்பண்ணி நிற்பது.

வினா:—சர்வ சங்காரனென்று லென்ன?

விடை:—சர்வஜக விலாசங்களையுந் தனக்குள் ளொடுக்கி நிற்பது.

வினா:—ஈசுவரனுக்கு லட்சியார்த்தமான சுத்தம் யாது?

விடை:—இவ்வேழுபாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச் சாட்சி சைதன்னியமா யிருப்பதே தற்பத சுத்தம்.

வினா:—தீர்ந்த நிலையாவதென்ன?

விடை:—தொம்பத சுத்தமான சீவதுரியமும் தற்பத சுத்தமான பரதுரியமும் ஐக்கியமான சிவதுரியத்தை யறிந்து நிற்பதே தீர்ந்தநிலை. மேலும் தற்பத தொம்பத வசுத்தத்தை முக்கியப் பொருளென்றும் தற்பத தொம்பத சுத்தத்தை இலக்கியப் பொருளென்றுஞ் சில நூல்கள் சொல்லும்.

வினா:—இதற்கு லட்சணவாக்கிய மெப்படி?

விடை:—விட்ட லட்சணைக்குச் சம்சர்க்க வாக்கியமென்றும், விடாத லட்சணைக்கு விசிஷ்டவாக்கியமென்றும், விட்டுவிடாத லட்சணைக்கு அகண்ட வாக்கியமென்றும் வாக்கியத்திரயங்களுண்டு, இவ்வாக்கியார்த்தப்படி சிந்தித்து அதனுலுண்டாகு மனுபவத்தைச் சொல்லுவாயாக வென்றனுக்கிரகஞ்செய்து ஆசிரியர் மவுனானந்தமா யிருந்தவளவில்,

சீஷன், அகமுகப்பட்டுச், சொரூபசமாதி கூடி, அபரோக்ஷ ஆத்மானந்த வனுபூதியைப்பெற்று, அடங்காமகிழ்ச்சியுடன் எழுந்துநின்று, அவ்வாசிரியருக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங் கள்செய்து அஞ்சலியஸ்தனாய் நிற்க, அவ்வாசிரியரும் தமது பரிபூரண திருஷ்டியினால் சற்சீடனைப் பார்த்து, ஆதரணை பண்ணி, அவனை யருகிலழைத்து, சுவானுபவம் வினவுகின்ற னர். (அம்முறை வருமாறு)

வினா:—அப்பா உனது சுவானுபவத்தைக் கூறுக?

விடை:—சுவாமீ! சீவோபாதியான காரியவுபாதி யேழு டன்கூடி நின்ற ஸ்தூலதேகத்தை யபிமானித்தவன் விசுவ னென்றும், இதுவே சீவசாக்கிரமென்றுங்கண்டேன்; இந்த வேழுபாதியி லிருவகை யிந்திரியமான விரண்டுபாதி நீங்கிக் கரணம் நாலும் பிராணாதியொன்றுமான ஐந்துபாதியோடுங் கூடின சூட்சுமதேகத்தை யபிமானித்தவன் தைசதனென் றும், இதுவே சீவசொப்பனமென்றுங் கண்டேன்; இவ்வை ந்துபாதியில் கரணம் நாலும் நீங்கி பிராணாதியாகிய ஒரு உபாதியுடனின்ற காரண சரீரத்தை யபிமானித்தவன் பிரா க்ஞனென்றும், இதுவே சீவ சுழுத்தியென்றுங் கண்டேன்; இவ்வேழுபாதிகளுமிறந்து சீவசாட்சி மாத்திரமாய்ச் சேடி த்துநின்ற சீவதுரியமுங் கண்டேன்; துரியமாகிய போதமு மிறந்து விஸ்வரூபமான சர்வசாட்சியாயிருக்கும் பரசாக்கிர முங் கண்டேன்; சங்கிலித் தொடர்பாகச் சகல பிரபஞ்சங் களையும் வேறாகக்கண்ட வறிவு மாத்திரமே தானாயிருக்கும் பரசொப்பனமுங் கண்டேன்; காண்பானுங் காட்சியும் விடு

பட்டுச் சர்வமுந் தோன்றும லிருக்கும் பரசுழுத்தியுங் கண்டேன்; அந்தச் சுழுத்தியை யறிந்த வறிவாகிய பரதுரியமுங் கண்டேன்; கூடஸ்தரும் பிரமமு மொன்றென் றுணர்ந்த சிவசாக்கிரமுங் கண்டேன்; அறுதியாய்ச் சகல சகத்துந் தானுயிருந்ததும் இருந்தோமென்னும் வாசனையும் விடுபட்டிருந்து சாட்சியே தானென்றுணர்ந்த சிவசொப்பனமுங் கண்டேன்; காணப்பட்ட ஜகமெல்லா மறிவு ரூபமென்றறிந்து அவ்வறிவும் விடுபட்டு மனோலயமாகு மிடமாகிய சிவசுழுத்தியுங் கண்டேன்; இந்தச் சுழுத்தியை யறிந்த வறிவாகிய சர்வசாட்சியே தானாகக் கண்டனுபவிக்கும் சிவதுரியமுங் கண்டேன்; இந்தத் துரியமே சச்சிதானந்தமென்றும், விடுபட்ட பரையே மகாகாரண சரீரமென்றும், இந்தத்துரியமு மிறந்தவிடம் அதீதமாகிய சுத்தப் பிரமமென்றுங்கண்டேன் என்று விண்ணப்பஞ் செய்த சிஷனை ஆசிரியர் ஆதரணை செய்து அப்பா! சகல வேத வுபநிடதார்த்தங்களிற் கூறப்படும் பொருளும் நம்முடைய வனுபவமு மிதுவே யாதலால் இதிற் சந்தேக விபரீதம் வராமல், தேகபதன (விழும்) பரியந்தமும் அனுசந்தானம் பண்ணி, முடிவில் விதேக கைவல்யத்தைப் பெறுவாயாக வென்றருளினர்.

மூன்றவது உற்பத்திப் பிரகரணம் முற்றிற்று.

---

## நான்காவது.

# திதிப்பிரகரணம்.

### அவதாரிகை.

முற்பிரகரணங்கள் மூன்றினாலுஞ் சமாதியில் அபரோட்ச ஆத்மானந்த வனுபவம் பெற்றுத் தேகாதிப் பிரபஞ்சங்களனைத்துஞ் சொப்பனத்திற் கண்டபொருள் போலாகச் சுவானுபூதி மாத்திரமாய் விளங்குஞ் சீஷனுக்கு மேல் சகல விவகாரங்களுஞ் சுழுத்திபோலாகச் சத்தா மாத்திரமான பிரமானந் தானுபவ சாட்சாத்காரமுதயமாகும் பொருட்டுத் திதிப்பிரகரணங் கூறுகின்றார்.

### கவி.

நிகழுசாத் திகமாய் நின்றே யிராசதந் தமத்தை நீக்கித் [லும்
திகழுஞ்சாத் திகத்தாற் செய்யு மிகத்தொழில் செய்திட் டோ
புகழுமா சுணந்தான் சட்டை போக்கல்போ லாசா பாசத்
துகளற நழுவி மேலாங் குணங்களைத் தொடர்ந்து நிற்பார்.
தொடர்பறுச் சமாதி தன்னைத் தொடர்பவ ரிருவ ராகும்
படர்வுறு நாம ரூப பவபந்தத் துறவை விட்டுத்
திடமுறச் சதா சமாதி செய்பவ னொருவ னந்த [ன்
மடமையோ டிருந்து முள்ளின் மதித்திடாச் சமாதி செய்வா

வினா:—சொரூப சமாதியினின்றுஞ் சச்சிதானந்த சுவானுபூதி மாத்திரமாக வெளிப்பட்ட சீவன்முத்தர்கள் திரும்பவும் விவகாரம் பண்ணுவார்களோ?

விடை:—பண்ணுவார்கள் அதனாலானி (கெடுதி) இல்லை.

வினா:—அஃது எப்படி?

விடை:—சீவன் முத்தர்கள் புனர் ஜன்மத்துக் கேதுவா (மறுபிறவிக்குக் காரணமா) யிருக்கின்ற ரஜோதமோ குணங்களை விடுத்து முத்திக் கேதுவாகிய சத்துவகுணமாத்திரமாயிருந்து வர்த்தமான(நிகழ்)காலத்தில் நேரிடு மனேகந் தொழில்களைச் செய்தாலும் அதனால் வரும் விகாரங்களொன்று மவர்களைத் தகிக்க(வருத்த)மாட்டாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—சூரியாஸ்தமனமாக அந்தகாரமான இராத்திரி வந்தபோதிலும் பொற்றாமரையானது சற்றாகிலும் வாய்குவியாது, மற்றைத் தாமரைகளெல்லாம் வாய்குவிந்து விடும்; அதுபோல, அறிஞர்களும் மாயாகாரியமான நாமரூபப் பிரபஞ்ச விவகாரங்களிற் கூடியுங்கூடாது சுகதுக்க விலட்சண (வேறு)ராகி எவ்விடத்திலும் அகண்ட வியாபக சின்மாத்திரமாய் நிறைந்து இதமகிதங் (நன்மை தீமை) களில் சமதிருஷ்டியுடையவர்களாயிருப்பார்கள். அவர்களையே நல்வழியினடப்பவர்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா:—அப்படியானவர்களொருவரோடுங் கூடாரோ?

விடை:—சாந்தி, விசாரம், சந்தோஷம், சாதுசங்கமென்னுஞ் சற்புருஷர்களுடனே கூடி, அவற்றினையே யாபரணமாகக்கொண் டிருப்பார்கள்.

வினா:—அவர்கள் தமக்குக் கிடையாத போகங்களி லிச்சைகொள்ளாரோ?

விடை:—சமுத்திரமானது தனக்குள்ள கரையைக் கடவாமலு மேலொன்றை நாடாமலுமிருப்பதுபோலச், சீவன் முத்தர்களுந் தமக்குள்ள போகத்தைப் பொசிப்பதன்றி வேறு போகங்களை யிச்சித்து நாடமாட்டார்கள்.

வினா:—ஆதித்தன்போல இச்சாயத்தினமின்றி நிகழ் காலத்துவரும் தொழில்களைப் பற்றியும் பற்றாத மனத்தோ டிருந்து நடத்திவருங்காலத்து அந்தச்சீவன் முத்தர்களிருக் குந் தன்மை எவ்வாறிருக்கும்?

விடை:—விடப்படாமை, விடப்படல், விசாரம், தெளிவு, வருந்தல், திருந்தல், திருத்தங் கூடுதல், யோசித்தல், தீர்த் தல், பார்த்தல், நிச்சயித்தலாகிய தன்மைகளுடனே யிருப் பார்கள்.

வினா:—விடப்படாமை யாது?

விடை:—துயரமற்ற சுகநிலையிலிருக்கிற பெரியோர்களு டைய சற்சங்கம்.

வினா:—விடப்படல் யாது?

விடை:—ரஜோதமோ குணங்களைப் பொருந்திய துஷ் டர்களுடைய துச்சங்கம்.

வினா:—விசாரம் யாது?

விடை:—யானருலகமாரென்று பகுத்தறிவது.

வினா:—தெளிவாவது யாது?

விடை:—குருவினாலும் சாஸ்திரத்தினாலும் அறிவினாலுந் தீர்ந்த நிலை.

வினா:—வருந்தலாவது யாது?

விடை:—தன்னையறியும் வழியில் வருந்துவது.

வினா:—திருந்தலாவது யாது?

விடை:—சகல கன்மங்களையும் யானெனதென் றெழுந்தாமற் செய்வது.

வினா:—திருத்தங் கூடுதல் யாது?

விடை:—நல்லோர்களாகிய மெய்ஞ்ஞானவான்களோடு கூடுவது.

வினா:—யோசித்தல் யாது?

விடை:—சர்வமுந் தானெனக் கருதுவது.

வினா:—தீர்த்தல் யாது?

விடை:—சரீரத்தில் வருஞ் * சோக † தாபங்கள்.

வினா:—பார்த்தல் யாது?

விடை:—சர்வசராசரப் பிரபஞ்சங்களினு முள்ளீடாய் நிறைந்து வியாபகப்பட் டிருக்குந் தனது சொரூபத்தையே கண்டு நிற்பது.

---

* இஷ்டவஸ்து தன்னைவிட்டுப் பிரிந்தகாலத்து அது மீண்டுங் கிடைத்தற் குரியதாகாமையை யுணர்தல் சோகமெனப்படும்.

† தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவு மென மூவகையால் வரும் பிறவித்துன்பங்கள் தாபங்கள் எனப்படும்.

வினு:—நிச்சயித்தல் யாது?

விடை:—பிரமாதிஸ்தம்ப (தூண்) பரியந்தமு நிறைந்துள்ளது சித்தென்றும் அவைகளெல்லாந் தன் வியாபகமேயென்றும் நிச்சயிப்பது. இப்படிப்பட்ட தன்மைகளோடு சீவன் முத்தர்க ளிருப்பார்கள்.

வினு:—சத்துவப் பிறவி எதினுல் வரும்?

விடை:—அது முற்பிறவிகளிற் செய்த ‡ தபோபல முயற்சியினுல் வந்து பொருந்துமேயன்றி வேறொரு கருமத்தினுலும் வரமாட்டாது. ஆகையால் சத்துவகுணமே மோட்சத்தைக் கொடுக்கும்; மற்ற இரண்டுகுணமுமாயா காரியமான ஜனன மரண சம்சார துக்கத்தைக் கொடுக்கும்.

வினு:—இந்தச் சத்துவகுணத்தை எவர்களடைந் திருப்பார்கள்?

விடை:—இனிப்பிறவாத முடிந்த பிறப்பை யுடையவர்களடைந்திருப்பார்கள்.

வினு:—ரஜோதமோ குணங்களை எவர்கள் கொண்டிருப்பார்கள்?

விடை:—மண்டபத்தைத் தூண்கள் தாங்குவதுபோல மற்றைச் சீவர்களியாவரும் அவ்விரு குணமயப்பட்டு ஜனன மரண வடிவ சம்சார துக்கத்தைத் தாங்கி நிற்பார்கள். ஆகையால் சத்துவத்தைக் கைப்பற்றி ராசத தாமதங்களைக்

‡ மனம் இந்திரியங்களின்வழி போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களில் உண்டிசுருக்கல் முதலாயின தவம் எனப்படும்.

கைவிட்டவர்கள் சனனமரணப் பிரவாகத்தினின்று கரையேறினவர்களாவர்.

வினா:—எப்படி கைவிடுவார்கள்?

விடை:—சத்துவத்தை மேற்கொண்டு ராசத தாமதங்களையு மவைகளால் வரும் பாசபந்தங்களையும் பாம்பானது தோலுரிப்பதுபோல நழுகவிடுவார்கள்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சர்வமுந் தானாய் விளங்குகிறபடியால் தான் வேறு உலகம் வேறென்னுந் துவிதமயக்கமொழிந்து, பிரமமாகிய சித்தினிடத்துண்டானநாமரூப * கற்பனைகளெல்லாம் சமுத்திரசலமே அலையாதிகளாகக் காணப்படுதல்போல் மித்தையேயல்லாமற்சத்தியமல்ல, சோக † மோகங்களும் பிறப்பிறப்புகளும் பிறப்பிறப்பிற் றபிக்கிறவர்களுமில்லை; வந்ததும்போனதும் நினைத்ததுமாகிய வொன்றுமில்லை; ஏகமாகியு மனேகமாகியும் என்றைக்கு முள்ளபொருளே எவ்விடத்திலும் சர்வவியாபகமாய் வியாபித்துச் சத்தாமாத்திரமாய் விளங்குவதென்று சஞ்சலரகிதமான யூகபுத்தியினா லறிந்து, சகல துக்கங்களும் விடுபட்டுச் சத்துவமாத்திரமாய் மிஞ்சியிருப்பார்கள்.

வினா:—இன்னுமெப்படி யிருப்பார்கள்?

---

* மயக்ககாலத்தில் சத்தியமாகக் காணப்பட்டுத் தெளிந்தகாலத்தில் அசத்தியமா யொழிவது கற்பனையெனப்படும்.

† மோகம்—விபரீதபுத்தி.

விடை:—சொரூப வியாபகத்தில் நின்று பூரணசந்திரப் பிரகாசம்போற் சாந்தி யடைந்து மவுனானந்தமாய் மணிப் பிரபை ஒளிபோற் றெளிந்து நிருமலமாய் நிகழ்காலத்து வரும் விவகாரங்களைச் சமதிருஷ்டியாய்க் கண்டு பற்றியும் பற்றுதலின்றிச் செய்து இது நமக்கு ஆமென்னும் விருப்பும் ஆகாதென்னும் வெறுப்புமற்று உதாசீனமாத்திரமா யிருப்பார்கள்.

வினா:—சத்துவகுணத்தினால் மாத்திரம் ஞான மெளிதி லுண்டா மென்பதெப்படி ?

விடை:—உத்தமமான மூங்கிலில் விழுந்த பனித்துளி கள் முத்துக்களானதுபோலச், சத்துவ குணத்திற் சன் மித்தவர்களே மேலோர் நல்லோர் மித்திரர் தெளிந்தோர் அநித்தியங்களைத் துறந்த நித்தியமுத்தர் ஞானிகளென் னும் விசிஷ்ட (கூடிய) நாமங்களைப் பெறுவார்கள். அவர்க ளுக்கே ஞானமு மெளிதில் வரும்.

வினா:—அவர்கள் பற்றியும் பற்றாது தொழில் செய்வ தெப்படி ?

விடை:—சூரியன் இச்சையின்றிக் கிரணங்களாற் பிரகா சித்திருக்க, அவனது சந்நிதான பலத்தினால் கணம் நாழிகை சாமம் நாள் நட்சத்திரம் வாரம் பக்ஷம் மாசம் ருது அயனம் வருஷ முதலானவைகள் தோன்றுவதுபோல், சீவன் முத் தர்களும் செல்காலம் வருகாலங்களிலுள்ள பொருள்களைச் சிந்தியாமல் நிகழ்காலத்துவருங் கருமத்தைமாத்திரம் தமது சுவானுபூதியாகக் கண்டு விவகரிப்பார்கள்.

வினு:—இப்படி விசாரஞான பலத்தினுல் துவித புத்தி நீங்கி அத்துவிதானந்த சொரூப மாத்திரமான ஞானிகளைக் கர்மமாதிகள் தொடர்ந்து வருத்தாவோ?

விடை:—இருப்புச்சட்டை தரித்த புருஷனை ஆயுதங்கள் வருத்தாவாறுபோல், சின்மாத்திரமாய் விளங்கும் ஞானியையும் கர்மமாதிகள் தொடர்ந்து வருததாவென்பதே துணிவு.

வினு:—மோகமாகிய வற்சநாபி (வசநாபி)க்கொடி முளைப்பதற்கு மூலமாகியும் சோகமாகிய சர்ப்பமிருந் தாசாஞமிடமாகியு முள்ளதேகத்தை நானென்னுஞ் சத்தியபுத்தி பண்ணுவிக்கு மஞ்ஞானமானது ஏகமாகியும் நித்தியமாகியு மிருக்கிற சொரூப சுபாவந் தோன்றின மாத்திரத்தில் வேரோடு நாசமாமென்று கூறிய சுருதியுத்திப் பிரமாணங்க ளிருக்கச், சீவன்முத்தர்கள் நான் போனேன் வந்தேன் தூங்கினேன் விழித்தேனென்று சொல்லலாமோ?

விடை:—அவர்களப்படி சொன்னுலும் கமலபத்திரோதகம்(தாமரையிலையினீர்)போற் பற்றற்றேயிருப்பார்கள்; அவர்கள் சித்தஞ் சென்ற விடமெல்லாஞ் சிதானந்தமாய் ரமித்திருக்கும்; அதனுல் அவர்களுக்கு வாதை (கெடுதி) யில்லை. அப்படியின்றி நாமரூபங்களிற் சித்தமானது பறந்துபோய் விழுமானுல் அதனுல் மனமுங் கெடாது, பந்தமும்போகாது; ஆதலால் காணும் பொருளே யில்லையென்ற சர்வமுஞ் சித்தாய்க் கண்டால் மனமென்பதும் போய்விடும். அதுவே மோட்சமாகும்.

வினு:—ஆனல் பிரபஞ்ச விவகாரத்தைஞானிகளெப்படி கண்டிருப்பார்கள் ?

விடை:—நானுமில்லை ஈதென்னும் விடயமு மில்லையென்றும், உருவமில்லாத வெளிபோல் தான் பரிபூரண சொரூபமென்றும், தனது சொரூபவியாபகத்தில் காணப்பட்ட நாமரூபங்கள் விளங்குகின்றன வென்றும், தனது சச்சிதானந்த சொரூபத்தையன்றி நாமரூபத்திற் காதாரமில்லையென்றும், சச்சிதானந்த மூன்றும் சொரூபசம்பந்தம் நாமரூபமிரண்டு மாயாசம்பந்தமென்றுங் கண்டு மாயாசம்பந்தத்தை விட்டுச் சர்வமும் சத்தாமாத்திரமான சொரூபமேயென்று திடமாய்ப் பார்த்திருப்பார்கள். அங்ஙனமான பெரியோர்கள் ஆசையாகிய கட்டெல்லாம் அசங்கற்பமா (சங்கற்பமில்லாமையா)கிய வாளாலறுத்து, நானென்னுந் தேகபாவனையை நானென்னுத ஈட்டியினுற் குத்தி, எல்லா மிறந்த (நாமரூபமின்றிய) சொரூப சுபாவமே தானென்று பாவித்த பாவனையினுல் ஜனனமரணமில்லாத முத்தி சொரூபமாவார்கள்.

வினு:—இந்தச் சீவன்முத்தர்கள் ஏகதேசமாய் சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் அந்தச் சுகத்தில் ரமித்து துக்கத்தில் வருந்தியு மிரார்களோ ?

விடை:—அப்படி யிரார்கள். சுகம், பயம், கோபம், துக்கம், பொறுமை முதலியவைகள் வந்தவிடத்து மிவைகளை ஒரு பொருளாய்க் காணுது, சத்தாமாத்திரமாய்க் கண்டு, சுழுத்திபோல்விஸ்ராந்தி(இளைப்பாறுதல்)யடைந்து, *சொரூ

---

* சொரூபபாவனை—சச்சிதாநந்த வடிவப் பிரமத்தை யிடைவிடாது ஒற்றுமையுறப் பாவித்தல்.

பபாவனை நீங்காதிருப்பார்கள். இதுவே சீவசாக்கிரம். இந்தச் சாக்கிரத்தினின்று ஒருநிமிஷமாகிலும் பிரியாதவர்களே சீவன் முத்தர்கள்.

வினு:—சகல வாசனைகளுஞ் சுழுத்திபோலாக விஸ்ராந்தியாய்த் தெளிந்த பூரணதிருஷ்டி யிமைக்காமல் சீவன் முத்தியடைந்த பெரியோர்கள் திரும்பவும் இந்த வுலகத்தில் வசிப்பார்களோ?

விடை:—மாயாமயமான ஆசாபாசங்க ளற்றுச் சகல வாசனைகளு நீங்கி அகத்திற் சின்மாத்திரமாகியும் புறத்தில் சகல ஆசாரக்கிரியைகள் செய்துமிருப்பார்கள். அன்றியும், புறத்தொழில்கள் ஆரம்பித்துச் செய்கிறவர்கள்போற் காட்டி அகத்திலொரு தொழிலுஞ் செய்யாதவர்களாய் *அகங்காரரகிதராய் திடசித்தரா யிருப்பார்கள். அல்லாமலும் ஆகாசம்போ லருவமாய் ஆவரண (மறைப்பு) நீங்கிச், சகல நாமரூப அடையாளங்களும் விடுபட்டு, வேண்டியவண்ணமுலகத்தின்கண் † விளையாடுவார்கள்.

வினு:—இப்படி சத்துவகுணத்தோ டிருந்துஞ் சன்மமில்லையென்பதெப்படி?

விடை:—வறுத்தவிதையானது உணவிற்குதவியாகு மல்லாமல் முளைப்பதற்குக் காரணமாகாததுபோற், சத்துவகுண

---

* அகங்காரரகிதர்—தேகாதிகளை நான் என்று கொள்ளுந் தன்மை யில்லாதவர்.

† விளையாடல்—பற்றின்றிச் செய்தல்.

மும் சுத்தவாசனைக்கு உதவியாய்ச் சீவன் முத்தர்களிடத் திருக்கிறபடியால் சன்மத்திற்குக் காரணமாகுதலில்லை.

வினு:—சுத்த வாசனையாவது யாது?

விடை:—சத்துவத்தை விடாமல் ஒன்றான ஆத்மத் தியான மாத்திரமாய் * நிருவிகற்பமா யிருப்பதே சுத்த வாசனை. இது சுகமாத்திரமா யிருப்பதால் இதில் சதாகால மும் சுழுத்திபோல் லயப்பட் டிருப்பவர்களே சதாசமாதி யடைந்திருப்பவர்களாம்.

வினு:—சொரூபசமாதி யடைந்தவர்க ளெத்தனைவிதமா யிருப்பார்கள்?

விடை:—இரண்டுவிதமா யிருப்பார்கள்.

வினு:—இரண்டுவிதமா யிருத்தல் எப்படி?

விடை:—‡ நாமரூபவிவகாரத் தொழில்களோடுங் கூடிச் சமாதி செய்பவர்களும், † அவைகளிற் பயனில்லையென்று துறந்து ஏகாந்தமாய் தனியிடத்திருந்து சமாதிசெய்பவர்க்

---

* நிருவிகற்பம்—சங்கற்பமில்லாதிருத்தல்.

‡ சமதிருஷ்டி—இந்திரியங்களுக்கு விஷயமாவதைக் காரிய வடிவமாய் நோக்காது காரணவடிவமாய்ப் பார்த்தல். ஞானங் காரணவடிவமாயும் நாம ரூபவடிவப் பிரபஞ்சம் காரியவடிவமாயு மிருத்தலால் இந்திரியங்களுக்கு விஷயமாவதை நாம ரூபவடிவமாய்க் காணுது ஞான வடிவமாய்க் காண்டலென்றபடி.

† நிஷ்டை—மனம் வாக்குக் காயங்கள் அசைவின்றி யிருத்தல்.

ளுமா யிருப்பார்கள். அங்ஙனமாஞலும் இவர்களுக்கும் மோட்சபலமொன்றேயாகும்.

வினு:—அஃதெப்படி ?

விடை:—இரண்டுபேரிதயங்களுஞ் சீதள மாத்திரமா யிருக்கும்; அச்சீதளமே அவர்களநந்த ஜன்மங்களிற் செய் துள்ள தபோபலமென்று சொல்லுவார்கள். அவ்வனுபூதியிற் சதாகாலமுஞ் சுகித்திருப்பவனுடைய மனமானது ஏகதேச காரியங்களிற் பிரவேசித்துச் சலனமடைந்தாலும் அதனுல் வருங் கவலைகளால் அவனுக்கொரு ஆனிவிருத்தியு(கெடுதி யுண்டாதலு) மில்லை, அவன் சமதிருஷ்டியாயிருந்து உன்மத் தன்போலும் கூத்தாடி பாசாங் கடிப்பதுபோலும் ஒருவருந் தமுமின்றிச் சுகசமாதியிலிருப்பன். ஆதலா லறிஞர்கள் விவ காரங்களைச் செய்தாலும் அவைகளினின்று நீங்கிச்சதா நிஷ் டராய்ச் சொரூப சமாதியி லிருந்தாலும் இவருக்கு மோட்ச பலஞ் சமமா யிருக்குமன்றி உயர்வுதாழ்வு இல்லையென்று சுருதி ஸ்மிருதிகள் சொல்லுகின்றன.

வினு:—விவகார நீங்கிச் சதாநிஷ்டரா யிருப்பவர்கள் எவ்விடத்தில் வசிப்பவர்கள் ?

விடை:—அங்ஙனமான பரமயோகிகள்(ஞானநிஷ்டையி லிருப்பவர்கள்) தூங்கினுலும் விழித்தாலும் விவகாரங்கள் செய்தாலும் செய்யாதிருந்தாலும் சதா அந்தர் (உள்) முக திருஷ்டியா யிருப்பதால், வீடு நாடு காடுகளெல்லாஞ் சம மாய்க் கண்டிருப்பதினு லவர்களுள்ளம் சீதளமாகவே யிருக் கும். அதனுல் ஜகத்தோற்றரவும் அதிசீதளமான சொரூப

மாகவே யிருக்கும். இப்படிப்பட்ட அந்தர்முக நிஷ்டை யில்லாதவர்கள் வனங்களிற் குகைகளி லாசனங் கட்டிக் கொண்டிருந்தபோதிலும் மனம்பகிர்(வெளி)முகப்பட்டிருப் பதினால் அந்த வனங்கள் குகைகளெல்லாம் வீடுநாடுகளா கவே தோற்றிக் கொண்டிருக்கும். ஆகையினால் தொழில் களைச் செய்தாலும் அவைகளை நீத்து (விட்டு)ச் சுகமாதியி லிருந்தாலும் அந்தர்முக திருஷ்டியையுடைய அறிஞர்களின் மனம்விஸ்ராந்தி யடைந்து, அதி சீதளமாய் சொரூப சமாதி யிற்றானே சுகித்திருக்கும். அவர்களுக்குச் சுருதி (வேதம்) மயக்கமு மில்லையென்று சுருதி ஸ்மிருதிகளிற் சொல்லப்படு கின்றது சித்தம்.

நான்காவது உற்பத்திப்பிரகரண முற்றிற்று.

---

## ஐந்தாவது.

# *உபசாந்திப் பிரகரணம்.

---

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் நான்கினாலும் சொரூபசமாதியடை ந்து நிஷ்டாபரனை சீஷனுக்கு மேல் சென்றவிடமெல்லாஞ் சிதானந்தாகார (வடிவம்) மிக்குச் சகசானந் தானுபவமுத யமாகும் பொருட்டு உபசாந்திப் பிரகரணங் கூறுகின்றார்.

---

* உபசாந்தி—விவகார விருத்தியின்றிச் சத்துவகுணமாத்திரமா யிருத்தல்.

கவி.

வானுதா மனுட யோனி வந்திட லரிது வந்து
மானவே தங்கள் கற்ப தரிதது வந்துற் றாலு
ஞானசா தகங்க ளெய்த லரிதது நண்ணி னாலு
மீனவஞ் ஞான மின்றி யிருத்தலிங் கரிது காணே.

விபரீத சம்ச யங்கள் வினவியே தீர்ந்திட் டாலு
மபரோட்சந் தனிலஞ் ஞான மகன்றிடா திருக்கு மென்னிற்
றவமெனுங் குரு வந்தாலுஞ் சாஸ்திரங் களினு நீங்காத்
துவந்துவ முடையோனான்மதுரோகியென் றறையும் வேதம்.

வினு:—சகல சந்தேக விபரீதங்களும் விடுபட்டுப் பிரபஞ்ச விவகாரங்க ளனைத்துஞ் சுழுத்திபோலாகச் சதாநிஷ்டர்களாய் விஸ்ராந்தி பெற்றிருக்கும் அறிஞர்களது மனத்தில் ஒருவேளை ஏகதேசமாய்க் கன்மவசத்தினால் சமதிருஷ்டி நீங்கி அஞ்ஞானம்ச அசம்பாவந் தோற்றுமானால் அவர்களுக்குக் கதியில்லையோ?

விடை:—அங்ஙனமான பெரியோர்க ளுள்ளத்தில் அசம்பாவனை வரக்கணக்(காரியம்)கில்லை அவர்களுக்குக் கன்மமுமில்லை. அப்படியின்றி ஒருபோது ஏகதேசத்தி லுண்டாகுமானா லவர்களுக்குக் கதியுமில்லை.

வினு:—அஃதெப்படி?

விடை:—இந்தப் பூமியின்கண் உற்பவிக்குங் காலத்தில் மானிடயோனியிற் பிறப்பதரிது; பிறந்தாலும் வேதாத்தியாயனத்திற்குரிய பிரமகுலத்திற் பிறப்பதரிது; பிறந்தாலும்

ஊமை செவிடு குருடு நீக்கிப் பிறப்பதரிது; பிறந்தாலும் பேடு நீக்கிப் பிறப்பதரிது; பிறந்தாலும் வித்தியாப்பியாசம் பண்ணுவதரிது; பண்ணினும் வேதாத்தியாயனம் பண்ணுவதரிது; பண்ணினும் அவ்வேதத்தில் நிருமிதமான (நியமித்துள்ள) கன்மங்களைச் செய்வதரிது.

வினா:—அந்தக் கருமங்கள் எவை?

விடை:—அவை: நித்தியம், நைமித்தியம், காமியம், நிஷேதம், பிராயச்சித்தம் என ஐந்துவகையா யிருக்கும்.

வினா:—நித்தியகன்மமாவது யாது?

விடை:—அது ஸ்நான பான சந்தியாவந்தன ஜப ஹோம தேவ தர்ப்பண வைவசுவதேவ பசுவந்தன முதலானவைகளாம்.

வினா:—*நைமித்திய கன்மமாவது யாது?

விடை:—அது: சங்கிராந்தி, பர்வம், அர்த்தோதயம், மஹோதய முதலிய புண்ணிய தினங்களில் நீராடல் முதலானவைகளாம்.

வினா:—காமிய கன்மமாவது யாது?

விடை:—அது: அசுவமேத ராஜசூய பவுண்டரீக முதலான யாகங்களைச் செய்தல், சோமவார விரதமாதிகளைச் செய்தலாம்.

வினா:—நிஷேத கன்மமாவது யாது?

---

* ஒருநிமித்தம்பற்றிச் செய்வது நைமித்தியகன்ம மெனப்படும்.

விடை:—அது: பிறனில் விழையாமை, கள்ளாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை முதலிய நியமங்களைக் கொண்டிருத்தலாம்.

வினு:—பிராயச்சித்த கன்மமாவது யாது?

விடை:—அது: சாந்திராயணம், கிரிச்சிரம், சலபக்ஷணம், வாயுபட்சணம், தீர்த்தயாத்திரை முதலான கருமங்களைச் செய்தலாம்.

வினு:—இந்தக் கன்மங்களினுல் வரும் பயனென்னே?

விடை:—தேகமிருக்குமட்டும் நித்திய நைமித்திக கன்மங்களைச் செய்துவந்தால் பாவம் ஒழியும்; காமிய கன்மத்தைச் செய்துவந்தால் உத்தமலோக முண்டாகும்; நிஷேத கன்மத்தைச் செய்துவந்தால் நீசலோக மடையப்படும்; பிராயச்சித்த கன்மத்தைச் செய்துவந்தால் சஞ்சிதம் விடுபடும். நிஷேத கன்மமொழிந்த மற்றைய கன்மங்களால் முத்திவருமென்று சிலர் சொல்லுவார்கள். அதுமுத்தியல்ல.

வினு:—அஃதெப்படி?

விடை:—காமிய கன்மத்தினுல் ஞானம் வரமட்டாது; உத்தமலோகத்தின் பலமாத்திரம்வரும்; அதனையடைந்தாலு மீண்டும் ஜனனமரணம் வருமே யல்லாமல் முத்திவராது; பிராயச்சித்த கன்மத்தைச் செய்துவந்தால் அது புருஷனுக்குக் கன்மத்தி லதிகாரத்தை யுண்டுபண்ணி பிரத்தியவாயத்தை(பாவத்தை)ப்போக்கா நிற்கும். ஆகையால் இவை நேரே ஞானசாதன மன்ரும்; மற்றைய நித்திய நைமித்திகமான இரண்டு கன்மங்களும் மேவிதப்பட்டிருக்கும்.

வினா:—அஃதெவ்வாறு?

விடை:—அவை: சத்துவகன்மம், இராசதகன்மம், தாமதகன்மமென மூவகையாம். அவற்றுள் இராசத தாமத கன்மங்கள் ஜனன மரண துக்கத்தை விருத்தியாக்கும். அவற்றாலும் ஞானம் வராது. சத்துவ கன்ம மாத்திரமே சித்த சுத்தி யுண்டாக்குவதினால் ஞானசாதனமாம். இப்படி கன்மத்தினால் ஏகதேசமாக வுண்டாகுஞ் சித்த சுத்தியைக் குறித்து அதனைச் சிலர் ஞானபரம்பரை யென்று சொல்லுவார்கள். ஆனாலும் இந்தச் சத்துவகன்மஞ் செய்யும்போதும் ஈசுவரார்ப்பணமாகச் செய்யவேண்டும்.

இதற் குதாரணம் பிரபோத சந்திரோதயம்.

"பறவைவரிச் சிறையிரண்டாற் பணிவிசும்பிற், படர்வதுபோற் பயனெண்ணாமல், இறைவனுக்கர்ப் பிதமாக்கியெழுதருவே தாகமங்க ளியம்பா நின்ற, பெறலருநற் கருமமுமே லகண்டசச்சி தானந்த பிரம ஞானத், துறுதியுமா மிரண்டாலு முயிர்களின்ப வீடுபுகுந் துறையு மென்றான்" என்று முன்னோர் வாக்கிய மிருப்பதினால் நிஷ்காமியமாகச் செய்யுஞ் சத்துவ கன்மமுஞ் சித்த சுத்திக்குக் காரணமேயல்லாமல் மோட்சத்திற்குக் காரணமல்ல.

இதற்குதாரணம் ஞானசித்தி.

"சுவரை மண்ணறக் கழுவினு ருண்டெனில் சுக்கிலவழி தன்னைத், தவிரு ஞானம்விட் டருச்சனை முதலிய தவங்களிற் பிறப்பற்றா, ருவரி சூழ்நிலத் துதித்திடு மாந்தரி லுண்டெனு முரையந்தோ, கருவ மையறி வகற்றிடுங் குருபரன் கழலடைந் தவரல்லால்"

என்று கூறியதினால் நிஷ்காமிய கன்மத்தினாற் சித்த சுத்தியும் அதனால் சற்குரு லாபமும் அதனால் சிரவணாதிக் கிய்மு முறையே முண்டாக அதனால் ஞானமுண்டாகும்.

இதற்குதாரணம் பிரபோதசந்திரோதயம்

"ஆற்றும் பயன்வேண்டாக்கரும மந்தக்கரண சுத்தி தரும், போற்றுஞ் சுத்தி தரும் போதம் போதம் பிரமநா னென்னு, மூற்றந் தருநா னுதித்தலுமே யுயர்வான் மதிநீர்த் துளக்கமெனத், தோற்றந்தரு மாயையிற் றன்னைத் துளக்க மின்றிக் காணுவனால்" என்பதாம்.

வினா:—ஈசுரார்ப்பணஞ் செய்வதினால் சித்தசுத்தி வரு மானால் ஞானம் எதினால் வரும்?

விடை:—சற்குரு சத்சாத்திரவாயிலாகவரும்.

இதற்குதாரணம் சிவஞானசித்தியார்.

"ஞானநூ றனையோத லோதுவித்த னற்பொருளைக் கேட்பித்த றான்கேட்ட னன்று, வீனமிலாப் பொருளதனைச் சிந்தித் தலைந்து மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை, யூனமிலாக் கன்மங்க டபஞ்செபந் தியான மொன்றுக் கொன் றுயருமிவை யூட்டுவது போக, மானமையான் மே லான ஞானத்தா லரனை யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம்." என்றும்,

அபரோட்சாத்மானுபவ தீபிகை.

சித்தியே வேண்டு மென்ற திடமுளோன் விசாரம் பண்ண
ஷேற்றமில் பரிதி யிந்தோ டக்கினிப் பிரகா சங்கண்

மற்றவை விடப்ப தார்த்த ஞானமில் லாது போல
நத்திய விசார ஞான மவைவிட்டான் ஞான முண்டோ.

என்றுங் கூறுவதால் விசாரஞான முண்டாகும்பொருட்டுச் சகல கன்மங்களையும் ஈசுரார்ப்பணமாகச் செய்ய வேண்டும். அந்தப் பலத்தினால் சிவமே கிருபைகூர்ந்து சீவ காருண்ணியம் ஈசுரபத்தி பாசவைராக்கியம் பிரமஞானமென்னு நான்குமே ஒரு திருமேனியாகக் கொண்டருளிய சற்குருலாபமுண்டாம், அதனால் சிரவணமுண்டாம், அதனால் மனனமுண்டாம், அதனால் நிதித்தியாசனமுண்டாம், அதனால் விவேகஞானமுண்டாம், அதனால் தன்னையும் (சீவனையும்) தலைவனையும் (கூடஸ்தனையும்) பகுத்தறியவரும்.

இதற்குதாரணம் கைவல்லிய நவநீதம்.

"வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால் நேமிப் பிரமையிற் றிரிவன் போத
மாராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே."

"தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேற்
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகி லுனக்கொரு கேடு மில்லை
யென்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே."

சிவபோகசாரம்.

"தன்னை யறியார் தலைவன் றனையறியார்
முன்னை வினையின் முடிவறியார் பின்னைக்

குருக்க ளென்று பேரிட்டுக் கொள்வார்களேயோ தெருக்களிலே நின்று சிலர்." என்பவைகளாம்.

வினா:—தன்னையறியும் விதமெப்படி?

விடை:—பிரபஞ்சத்திற் சப்தாதி விடயங்களை யறியும் செவியாதி இந்திரியவறிவெல்லாம் சீவன்தானே யனுபவிப்பதாக அறியாமையினாற் கொள்ளுமிடத்து, இந்தப்பொறிவழியாற்காணும் நாமரூபங்களெல்லாம் இந்திரியங்கட்குத்தோற்றுமேயன்றிச் சிதாபாசனென சீவனுக்கில்லையென்பது அனுபவமாகும். எப்படியென்றால் நற்சத்தந் துர்ச்சத்தங்களென்றறிவது சுரோத்திரேந்திரிய வறிவல்லாமல் சீவவறிவல்ல.

வினா:—அஃதெப்படி?

விடை:—செவிடர்களுக்குஞ் சீவனிருக்கிற படியினால் அவர்களும் சத்தத்தை யறியவேண்டும். அப்படி யறியாத படியினால் சத்தத்தை யறிகிறவறிவு சுரோத்திரேந்திரியமே. அதனைச் சீவ னறியாமையினால் தன்பேரிலாரோபித்து (ஏற்றி)க்கொண்டு நானே சத்தமறிகிறவ னென்றதல்லாமல் சீவனுக்கு இந்தப் பின்னவறிவுகாலத் திரயத்திலுமில்லை. தொக்கிந்திரியத்தால் அறிவதான பரிசமுஞ் சீவனை யறிவதானால் திமிர்நோய்கொண்டவர்க ளிடத்துஞ் சீவனிருக்கிறபடியினால் அவர்களும் சீதோஷ்ண (குளிர்ச்சி சூடு) பரிசத்தை யறியவேண்டும். அப்படியறியாமையினால் பரிசத்தையறிகிற வறிவு தொக்கிந்திரியமே. அதனைச் சீவ னறியாமையினால் தன்பேரி லாரோபித்துக்கொண்டு நானே பரிச மறிகிறவ னென்றதல்லாமல் சீவனுக்குப் பின்னவறிவு காலத்திரயத்

திலுமில்லை. சேத்திரேந்திரியத்தால் அறிவதான ரூபமும் சீவனே யறிவதானால் குருடர்களுக்குஞ் சீவ னிருக்கிறபடியால் அவர்களும் பஞ்சவன்னங் (நிறம்) களை யறியவேண்டும். அப்படி யறியாமையினால் ரூபத்தை யறிகிறவறிவு நேத்திரேந்திரியமே. அதனைச் சீவ னறியாமையினால் தன்பேரி லாரோபித்துக்கொண்டு நானே ரூப மறிகிறவ னென்றதல்லாமல் சீவனுக்குப் பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை. சிங்குவேந்திரியத்தால் அறிவதான ரசமும் சீவனே யறிவதானால் பித்தாதி தோஷம் பிறந்தவர்களிடத்துஞ் சீவனிருக்கிறபடியினால் அவர்களும் ஷட் (ஆறு) வகை ருசிகளைப் பகுத்தறியவேண்டும். அப்படி யறியாமையினால் ரசத்தையறிகிறவறிவு சிங்குவேந்திரியமே. அதனைச் சீவ னறியாமையினால் தன்பேரி லாரோபித்துக்கொண்டு நானே ருசி யறிகிறவ னென்றதல்லாமல் சீவனுக்குப் பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை. கிராணேந்திரியத்தால் அறிவதான கந்தமும் சீவனே யறிவதானால் மூக்கிந்திரிய மில்லாதவர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அவர்களும் நற்கந்த துர்க்கந்தங்களைப் பகுத்தறிய வேண்டும். அப்படி யறியாமையினால் கந்தத்தை யறிகிற வறிவு கிராணேந்திரியமே. அதனைச் சீவ னறியாமையினால் தன்பேரி லாரோபித்துக்கொண்டு நானே வாசனை யறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்குப் பின்னவறிவு காலத்திரயத்திலுமில்லை. ஆதலால் இவ்விந்திரிய வறிவுகளையெல்லாம் தன்னிடத்தி லாரோபித்துக்கொண்ட ஆவிரண (மறைப்பு) முழுதும் ஞானதிருஷ்டியினால் விடுபட்டு இந்தப் பொறிவழிகளா லார்ச்சிக்கப்பட்ட (சம்பாதிக்கப்பட்ட)

புண்ணியபாவங்கள் தனக்கில்லையென்று கண்டு நிரிந்திரியனாய், நிர்த்தேகனாயிருக்குங் கூடஸ்த சொரூபமே தானென்பதனை விசாரித்தறியவேண்டும். இந்தப்படியே வசனாதி விடயங்களாகத் தோற்றும் கன்மேந்திரியத் தொழிலெல்லாம் சீவன் தன்னிடத்தி லாரோபித்துக் கொண்டதல்லாமல் வாஸ்தவத்தில் அவனுக்கில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஊமைகளுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அவர்களும் வசனிக்கவேண்டும், அப்படி காணாமையால் வசனிப்பது வாக்கிந்திரியமே. கையில்லாத மூடவனுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அவர்களும் ஏற்றலிடுதல் செய்யவேண்டும்; அப்படி காணாமையால் ஏற்றலிடுதல் செய்வது பாணீந்திரியமே. காலில்லாத முடவருக்குஞ் சீவனிருக்கிறபடியால் அவர்களும் நடக்கவேண்டும். அப்படி காணாமையால் நடப்பது பாதேந்திரியமே. லிங்க (ஆண்குறி) லேபன மில்லாதவர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அவர்களும் போகிக்கவேண்டும்; அப்படி காணாமையால் போகிப்பது உபஸ்தேந்திரியமே. பலங்குறைந்து குதஞ் சுருங்கலானவர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியினால் அவர்களும் மலவிசர்க்கஞ் செய்யவேண்டும்; அப்படி காணாமையால் மலவிசர்க்கஞ் செய்வது பாயுரிந்திரியமே. ஆதலால் இந்தக் கன்மேந்திரியத் தொழில்களை யெல்லாந் தனதாகக்கொண்ட ஆவரணம் விடுபட்டு இவைகளா லார்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களெல்லாந் தனக்கில்லையென்று ஞானதிருஷ்டியாற் கண்டு

அசங்க (கூட்டமற்றவனாகிய) கூடஸ்தசொரூபமே தானென்பதனை விசாரித்தறியவேண்டும். இந்தப்படியே பஞ்சகோசங்களையுஞ் சீவன் தானென்று ஆரோபி (கற்பி) த்தமாய்க் கொண்டதல்லாமல் வாஸ்தவத்தில் அவனுக்கில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—பருத்தேனிளைத்தே னென்பது ஆறுதத்துவமான அன்னமயகோச தாதாத்மிய(ஒற்றுமை)மன்றிச் சீவனுக்கில்லை; உசுவாசித்தேன் நிசுவாசித்தேனென்பது பிராணமயகோசதாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை; சங்கற்பித்தேன் விகற்பித்தேனென்பது மனோமயகோச தாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை; நான் கர்த்தாபோக்தா வென்பது விஞ்ஞானமயகோச தாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை; நான் அஞ்ஞானி மூடனென்பது ஆனந்தமயகோச தாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—என் சரீரமென்னும்போது தான் வேறு சரீரம் வேறென்றும், என் இந்திரிய மென்னும்போது தான் வேறு இந்திரியம் வேறென்றும், என் பிராணனென்னும்போது தான் வேறு பிராணன் வேறென்றும், என் மனமென்னும் போது தான் வேறு மனம் வேறென்றும், என் புத்தி யென்னும்போது தான் வேறு புத்தி வேறென்றும், என் சித்தமென்னும்போது தான் வேறு சித்தம் வேறென்றும், என் அகங்கார மென்னும்போது தான் வேறு அகங்காரம் வேறென்றும், என் அஞ்ஞான மென்னும்போது தான்

வேறு அஞ்ஞானம் வேறென்றும் வருகிற அனுபவத்தினால் தனக்கன்னியமாகக் கண்டு அவைகள் சாட்சியாகிய தன்னிடத்தில் ஆரோபிதமாய் விவகார தசையில்மாத்திர மிருக்கின்றனவென்பதனை விசாரித்தறியவேண்டும்.

வினா:—இப்படியறிந்தவர்களுக்கு ஆரோபிதமில்லையோ?

விடை:—இப்படி சாட்சிமாத்திரமா யிருப்பவர்களுக்குச் சத்தத்தை யறிவதாகிய சுரோத்திரமும், பரிசத்தை யறிவதாகிய தொக்கும், ரூபத்தை யறிவதாகிய சட்சுவும், ரசத்தை யறிவதாகிய சிங்குவையும், கந்தத்தையறிவதாகிய கிராணமும், வசனிப்பதாகிய வாக்கும், ஏற்றலிடுதலாகிய பாணியும், கமனம் பண்ணுவதாகிய பாதமும், ஆனந்திப்பதாகிய வுபஸ்தமும், மலவிசர்க்கம் பண்ணுவதாகியபாயுரும், உச்வாச நிசுவாசம் பண்ணுவதாகிய பிராணாதிவாயுக்களும், சங்கற்ப விகற்பஞ் செய்வதாகிய மனமும், நிச்சயிப்பதாகிய புத்தியும், அஞ்ஞானமாகிய அவித்தையும் பின்னமின்றி யபின்னமான அறிவு சொரூபமாய்க் கண்டிருப்பதால் விசாரித் தறிந்தவர்களுக் காரோபிதமேயில்லை. இப்படி ஒரு விகாரமின்றி நிருவிகாரமா யிருக்க, * அவாந்தர கற்பனையான மனமயக்கத்தினாற் ஜனன மரணங்களு முண்டானவைபோற் றோற்றியன.

வினா:—அப்படியானால் ஜனனமரண நரகசொர்க்கங்களனுபவித்ததார்?

* அவாந்தர கற்பனை—முன்னும் பின்னும் தொடர்ந்திருக்காது ஒருகாலத்தில் ஆரோபிதமா யிருப்பது.

விடை:—கன்மகாண்டத்தில் விதியாகச் சொன்ன புண்ணிய கன்மங்களைத் தேகேந்திரியங்கள் செய்து அதற்குத் தக்க தேவபோகங்களையும் தேகேந்திரியங்களே யனுபவித்தன. நிஷேத(விலக்கு) மாகச் சொன்ன பாவகன்மங்களைத் தேகேந்திரியங்கள் செய்து அதற்குத் தக்க † திரியக்காதி ஸ்தாவர சரீரங்களெடுத்துத் துக்கரூபமான நரகங்களையுந் தேகேந்திரி யாதிகளே யனுபவித்தன. இந்தத் தேகேந்திரியாதிகளையே தானென்றும் இவைகளா லார்ச்சிக்கப்படும் புண்ணிய பாப கன்மங்களைத் தனதென்றும் ‡ அத்தியாசமாகக் கொண்ட வபிமான தோஷத்தினால் அளவிறந்தஜனன மரணங்களுண்டாயின. தீர்க்கமாய் விசாரித்தறியுமிடத்தில் சகலகன்மமும் இந்தத் தேகேந்திரியாதிகளுக்கே யல்லாமல் ஏகமாய் நித்தியமா யிருக்கின்ற தானாகிய கூடஸ்தருக்கில்லையென் றறிவதே வேதாந்த சித்தாந்தம். இதற்குதாரணம் வாசிட்டம்.

"தெரித்தறியும் பொருளைக்கச் சீவவறி வதுவாகச் செப்ப லாகும், விரித்த புலன னுபவித்து மனுபவியாமனமதுவாய் விளம்பலாகும், புரித்தவுணர் வொளிநெஞ்ச முலகிவற்றி னறிவதுவாய்ப் புகலலாகும், பரித்ததொழில் செய்யினுங்கற் போலிருக்கு நிலையதுவாய்ப் பகர லாகும்."

என்றும்,

"முடிவுகன வஞ்ஞானமில்லாநீ டியிலதுவா மும்மையாகி, யடர்தரு ஞாதுருஞான ஞேயமெழுந் தொடுங்குமிட

† திரியக்—பசுபட்சிமுதலானவை.

‡ அத்தியாசம்—ஒன்றில் மற்றொன்று தோன்றுவது.

மதுவே யாகுந், திடவிசும்பன் ருயிருந்தும் விசும்பான நிலை யதுவாஞ் • சித்தம் புத்தி, படர்மனம்போய்த் தாபரவுள் ளஃறிவுபெறி லொப்பாமப் பரம ரூபம்"

என்றும், உபநிடதம்.

"தோற்றுமசத் தறிந்தகலத் தொடர்பகலு மேதெனின்த் தூல தேக, மாற்றுதொறுந் தொழிலகலு மிந்திரியச் செயலகன்றால் வைய நீங்கு, மேற்றுமனோ லயத்திலறும்வி டயமவித்தையைநீங்கி லியாவு நீங்கும், போற்றுமிந்தச் சீவ வறி விழந்தவிடம் புகல்பரிபூ ரணம தாமே"

என்றும், மெய்ம்மொழி

"ஓசைகேட் டிடுக செவியறு சுவையு முண்ணநா வுடல முறறிக, வாசமூக் குயிர்ப்ப வுருவுகண் காண மற்றுமெக் கருமமுஞ் செய்க, வாசுடைப் புலன்க ளனுபவித் திடினு மப் பின்மூழ் கிடினுமம் புயத்தின், பாசடை நீரிற் பற்றிலா ததுபோற் பற்றிலார் பரமயோ கிகளே."

என்றும், பூரணப் பிரகாசம்.

"உடம்புட னிருந்தே யுடம்பிலா வுண்மை யுணர்ந்தவ னுளத்தொரு காலும், விடம்படு காமம் வெகுளிமே வாது விளம்பிடும் பொருளெலாம் விளக்கு மிடம்படு மிதயா காச மற்றிதுவே யிறப்பொடு பிறப்பிலா தென்றுந், திடம்படும் பிரமமாவது மான்மா வரிவதுந் தேகிகட் கெல்லாம்."

என்றும், சிவஞானசித்தியார்.

"சாக்கிரத்தி லதீதத்தைப் பொருந்தின்மற் றவரே சகலசங்க முடனிருந்துஞ் சங்கமிலா தவர்தம், பாக்கியத்தை

யின்னதெனப் பகர்வதுவென்னுயிரின் பற்றறுத்திட்டிம்மை யிலே பற்றற்றிங் கிருப்பா, ராக்கிமுடி கவித்துக்கொண் டரி வையர்க ளுடனே யனுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற்றி ருப்பர், நோக்கியிதுபுரியாதோர் புறப்பற்று லுண்ணுழைவர் பிறப்பி னில்வினைக ளுங்கிடாவே"

என்றும்,

"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி வளர்ந்த வனை யறியாது மயங்கி நிற்பப், பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையுடன் தானாக்கிப் பேணு மாபோற், றுன்னியவைம் புலவேடர் சுழலிற்பட்டுத் துணை வனையு மறியாது துயருறுந் தொல் லுயிரை, மன்னு மருட் குருவாகி வந்தவரி னீக்கி மலமகற்றித் தானாக்கி மலரடிக் கீழ் வைப்பன்"

என்றும், சொரூபசாரம்.

"நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போங்
கனவின் மனக்கூத்தைக் காண்போ—நினைவில்
சுழுத்தியிலே யில்லாத சூனியக் கூத்தாடி
விழுப்பொருளாய் நாமிருப்போமே"

என்றும், தத்துவராயர் ஞானவினோதன் கலம்பகம்.

"அலராயின செய்யு மைம்புலன்கா ளெம்மா றுபகையாங்
கலகாள் பலகுணங் காண்மலங்காள் கரணங்களென்னும்
பலகாளருட் சொரூ பானந்த னுர்பவ ளத்திருவாய்
மலரா தளவுமன்றோவுங்க ளோடெங்கள் வாழ்வுகளே"

என்றும்,

போதரத்னுகரம்.

"கற்பிதப் பொருள்கடம்மைக் கடவுளாய்க் கருதித் தொல்லை
யுற்பவந் தன்னி னின்றே யுழைத்தன னெண்ணில் காலந்
தற்பரம் பொருளாய் வந்த தம்பிரான் றுடோ மாதே
யற்புதக் கனவிற் பொன்னுற் பூண்செயக் கருதி னேனே"

என்றும், அவிரோதவுந்தியார்

"அநுஞ திக் கோரொன்று லேம்புல னுலு
மிசையுமேற் கேடெமக் குந்தீபற
வெங்ஙன மெய்துமென் றுந்தீபற"

என்றும், தத்துவராயர் அமிர்தசாரம்

"சிந்தா குலமனிதர் சீசீ செவிமுதலா
மைந்தாலு மீடழிய வல்லாரோ—வைந்திலொரு
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வண்டிவைகள்
கேட்கைமுத லோரொன்றின் கேடு" என்றும்,

திருவாய்மொழி.

"ஆவி திகைக்க வைவர் குமைக்குஞ் சிற்றின்பப்
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ
தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னங் குறுகாதோ" என்றும்,

திருவாசகம்.

"அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி யழிந்த வென்
னை, விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத் தொண்டர்க்

கல்லாற், றொடறீகரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக், கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே" என்றும்,

கந்தரனுபூதி.

"கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய்விழி நாசியொடுஞ் செவியா
மைவாய்வழி செல்லு மவாவினையே" என்றும்,

நாலடியார்.

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையார்
விலங்காது வீடு பெறும்" என்றும்,

சிவஞானசித்தியார்.

"ஒருபுல னுகரும் போதங் கொன்றிலை யொன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வருந்திடு மெல்லா மாயு
மொருபொழு துணரி லுண்டா மில்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மென்றே"
என்றும்,

தேவாரம்.

"வென்றிலேன் புலன்க ளைந்தும் வென்றவர் வளாகந் தன்னுட், சென்றிலே னாதலாலே செந்நெறி யதற்குஞ் சேயே, னின்றுளே துளும்பு கின்றே னீசனே னீசனேயோ, வின்றுளே னாளையில்லை யென்செய்வான் றோன்றினேனே" என்றும்,

"படுகுழி பவ்வத் தன்ன பண்டியைப் பெய்த வாற்றாற்
கெடுவதிம் மாயவாழ்க்கை காண்டொறுங் கேது கின்றேன்
முடுகுவ ரிதனு ளைவர் மூர்க்கரே யவர்க ளோடு
மடியனேன் வாழ மாட்டே னரூர்மூ லட்ட னரே" என்றும்,

"புள்ளுவ ரைவர் கள்வர் புனத்திடை மறைந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யிவர்க டம்மை மூக்கணுன் பாத நீழ
லுள்ளிட் மறைந்து நின்றங் குணர்வினு லெய்தலாமே"
என்றும்,

"பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யெனச் சுடர் வெண்மழு வேந்திய
கையனைக் கச்சி யேகம்ப மேவிய
வைய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே" என்றும்,

"மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்தம் மார்ப்பை யவிழ்தர
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே" என்றும்,

திருவாசகம்.

"மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த் தாள், வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத் தே, யூறுபட் டேமன்னு முத்தர கோச மங்கைக் கரசே, நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே" என்றும்,

"இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா
யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வோர்க்குச்
சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த மணிகொ டில்லை கண்டேனே"

என்றும்,

பரிபூரணப் பிரகாசம்.

"பந்தப் புரங்க ளொருமூன்றும் பரம னிடையே யிருப்பதெனிற், றொந்தப் புருஷ னொருகாலு நசியா னாத னாற்றுஞ்சா, னந்தப் பரம னேயவன்றா னறியா மையினா லப்பரனைப், பந்தப் படுமோர் சீவனெனப் பார்ப்பான் பவத்தே பதைக்கின்றான்" என்றும்,

சொரூபசாரம்.

"கண்ணலாற் காட்சியுண்டோ காதலாற் கேட்பதுண்டோ
விண்ணலா லேதும் விளைந்த துண்டோ—வெண்ணுங்காற்
கானலா றோடிவரக் கண்டதுபோற் றோற்றுகினுந்
தானலா துண்டோ சகம்" என்றும்,

"போகம் புவனம் பொருந்து மிடமெங்குந்
தேகங் கரணந் திரியுமே யாகிலது
தன்னை நீயென்று தயங்காதே நெஞ்சமே
நின்னைநீ கண்டறிந்து நில்" என்றும்,

திருமந்திரம்.

"சீவனென்றுஞ் சிவனென்றும் வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலார்

சிவ ஞார்சிவ ஞானை யறிந்தபின்
சிவ ஞார்சிவ ஞாகி யிருப்பரே" என்றும்,
"கடைய வொழிந்திட் டிருந்த கலன்மர
மடைய விழுங்கி யதுவான வாறுபோ
லுடலி லொழிந்திட் டிருந்த சிவமுயி
ரடைய விழுங்கி யதுவான வாறே" என்றும்,
"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றார்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னைவிட் டென்னை யினிது ணர்ந்தேனே"

என்றும்,

"எல்லா மறிவ தறிவு தனைவிட்டே
யெல்லா மறிந்து மிலாபமிங் கொன்றில்லை
யெல்லா மறிந்த வறிவினை யானென்னி
லெல்லா மறிந்த விறையென்ன லாமே" என்றும்,

பொன்வண்ணத் தந்தாதி.

"ஒழித்தேன் பிறப்பினை யூர்ந்தே னுவசை யோங்கிற் றுள்
மிழித்தே னுடம்பினை யேலேன் பிறரிடை யிம்மனையும் [ள
பழித்தேன் பழியே விளக்கும்பஞ் சேந்தியக் குஞ்சரமுந்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தே னினிமிகத் தெள்ளியனே"

என்றும்,

திருவம்மானை.

"மெய்யான தொன்றுமே மெய்ம்மைகா ணம்மானை
மெய்யன்றி மற்றெல்லா மித்தைகா ணம்மானை"

என்றும் கூறியிருத்தலாமென்க.

வினா:—இன்னுமெப்படி?

விடை:—சச்சிதானந்த சொரூபமாகியும் அகண்டத்துவ (கண்டிக்கப்படாதது) மாகியும், அபரிச் சின்னத்துவ (அளவிடப்படாதது) மாகியும், சர்வவியாபகமாகியும், காலபரிச்சேத தேச பரிச்சேத வஸ்துபரிச்சேத ரகிதமாகியும் (கால தேச வஸ்துக்களால் முடிவில்லாததாகியும்) நிராமய (நோயில்லாதது) மாகியு மிருப்பதே ஆத்ம சொரூபமென்று சுருதி ஸ்மிருதிகளும் உபநிஷத்து மகா வாக்கியங்களும் குருவாக்கியமுஞ் சொல்லுகின்றன.

வினா:—சத்தென்பதெப்படி?

விடை:—முற்பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகளின்படி இந்தச் சரீரம் வந்ததென்று சொல்லுகையாலும், இப்போது செய்கின்ற வினைக்கீடா யினிமேற் பிறவி வருமென்பது சர்வானுபவமாய்க் கண்டிருப்பதினாலும், இப்படி திரிகாலங்களிலு முண்டான சரீரமாத்திர மழியத் தான் நித்தியமாயழிவற்றிருப்பதினாலும் ஆத்மா சத்தென்பதாயிற்று.

வினா:—சித்தென்ப தெப்படி?

விடை:—பாலியாவஸ்தை முதல் நடந்துவரும் விவகாரங்களிற் சிறிது மறந்திருந்தாலும் மற்ற விருத்தாந்தமெல்லாம் அமாவாசை யிருளும், மேகாந்தகாரமும் மழை நிசியுங் கூடியகாலத்திலும் மூலைவீட்டில் முக்காடிட்டுக் கண்களைமூடிக்கவிழ்ந்து படுத்திருக்கிற புருஷனுக்கும் சூரிய சந்திராக்கினிமின்மினி நட்சத்திர நேத்திரசாதனங்களொறுஞ்

யின்றி யிருந்தும் இன்னதிது இன்ன திது என்று பகுத்தறியப் படுகிறதினால் ஆத்மா சித்தென்பதாயிற்று.

வினா:—ஆனந்தமென்பதெப்படி;

விடை:—தனதானிய தாரபுத்திரர்களால் வருஞ்சுகங் தன்னை நெடுநாளாய் ஒருகால்போலப் பலகாலுமனுபவித்தும் அவைகளால் வருஞ்சுகமெல்லாந் துக்கமாய்க் கைவிட்டுச் சுழுத்திச் சுகத்தையே சதாநாடுகிறபடியால் ஆத்மா ஆனந்தமென்பதாயிற்று.

இதற்குதாரணம் கைவல்யநவநீதம்.

"சென்மாந் தரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல்கால மிவனுண்டலோ, கன்மானு பவநரக சொர்க்க மெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ, வுன்மாத யாதனை வுடல்கடவு ளுடன்மனுட வுடன்மாறி மாறி யழியுந், தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு சத்தென்ப தொக்கு மகனே" என்றும்,

"இருளாக மூடுஞ் சுழுத்தியி லிராத்திரியி லிரவிசுடரற்ற பொழுது, மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தாகுமே, பெருவாழ்வு மிக்கதானேதன் னிடத்தினிற் பெயராத பிரிய மதனு, லருகாத பிரியஞ் சுகத்தில்வரு மாதலா லானந்த மாமைந்தனே" என்றும்,

"சத்தேசித் தாருமப லெனிலசத்தா மசத்தானுற் சாட்சி யெங்கே, சித்தேசத் தாருமய லெனிற் சடமஞ் சடநீ

களுக்குத் திதியு மில்லை, யொத்தேதோன் றியசத்துஞ் சித்து நல்ல சுகமாகு மூகத்துக்கோர், வித்தேயன் னியமாகிற் சட மசத்தாஞ் சுகானுபவம் விளைந்திடாதே" என்றும்,

"வியாத சத்துமுன்னம் விளங்குவது தன்னாலோ வே றொன்றாலோ, வாயால்வே றெனிலதுவு மசத்தோசத் தே வசத்தேன் மலடிமைந்தன், பேயாகா ரியஞ்செயுமோ வசத் தெனவிப் படியதையும் பிரித்துச்சொன்ன, லோயாத வவத் தையாங் குதர்க்கவிகற் பங்களைவிட் டொழிந்திடாயே"

என்றும் கூறுதலாமென்க. ஒரு சரீரத்தைக் குறித்து அதற்குள்ளிருப்பவன் கண்டமாகியும் பரிச்சின்னமாகியும் ஒரு தேகவியாபகமாத்திமாகியு மிருப்பதுபோ லாகாமல் அகண்டமாகியும் அபரிச்சின்னமாகியும் சர்வத்தினுள்ளும் புறமும் வியாபித்துச் சர்வவியாபகமாகியு மிருக்கின்ற தலை வனுகிய பிரம சொரூபத்தையும் விசாரித்தறிய வேண்டி யது.

வின:—அஃதெப்படி?

விடை:—அகண்ட பரிபூரண வியாபகமாகியும், அபரிச்சி ன்னமாகியும், காலதேசவஸ்து பரிச்சேத ரகிதமாகியு மிருப் பதே பிரமசொரூபமென்று சுருதி ஸ்மிருதியாதிகள் சொல் லுகின்றன.

வின:—ஆகாசத்திற்கும் இந்தக் குணங்களிருக்கிறபடி யால் அதுவே பிரமமென்று சொல்லலாமே?

விடை:—ஆகாசமானது நான்கு பூதங்களினும் நிறை ந்து சர்வவியாபகமாய் நிரவய (அவயவமில்லாதது)மா யிருத்

தாலும் சிருட்டிகாலத் துண்டாகிப் பிரளயகாலத்திலழிந்து போவதினால் அதற்குக் காலபரிச்சேதமுண்டு.

வினா:—காலமே பிரமமென்று சொல்லலாமே?

விடை:—காலமானது வியாபகமாய் நிரவயமாய் எந்தத்தேசத்திலும் வியாபித்திருந்தாலும் தேசாசாரங்களால் காலக்கிரியைகளும் அதனாலுண்டாகும் பொருள்களும் மாறியழிந்து வருகிறபடியால் காலத்திற்குந் தேசபரிச்சேதமுண்டு.

வினா:—தேசமே பிரமமென்று சொல்லலாமே?

விடை:—தேசமானது எங்கும் வியாபித்திருந்தாலும் ஒரு தேசத்திலுள்ள வஸ்து ஒரு தேசத்தி லில்லாமையினால் தேசத்திற்கும் வஸ்து பரிச்சேதமுண்டு.

வினா:—வஸ்துவே பிரமமென்று சொல்லாமே?

விடை:—வஸ்துவானது வியாபக மின்றிக் கண்டமாய்ப் பரிச்சின்னமாய் அனித்தியமா யிருப்பதினால் அதுவும் பரிச்சேத முடையதே. ஆகையால் காலத்தினால் ஆகாசத்திற்கும் தேசத்தினால் காலத்திற்கும் வஸ்துவினால் தேசத்திற்கும் அழிவுவருகிறபடியால் இவைகள் பிரமசொரூபமாகமாட்டாது.

வினா:—ஆனால் பிரம சொரூபமெத்தன்மையது?

விடை:—தேகேந்திரியாதிகரணங்களும் அவற்றின் தொழில்களுமின்றிக் கால தேச வஸ்து பரிச்சேதரகிதமாய் அகண்டபரிபூரணமாய் அபரிச்சின்னமாய் சின்மாத்திர (அறிவாகார) மாயிருக்கின்ற வியாபகப் பொருளே பிரமசொரூபம்.

வினா:—பிரமத்திற்குத் திரிவிதபரிச்சேதமுமில்லையென்பதேதன்?

விடை:—எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் எந்வஸ்துவிலும் உள்ளும் புறனும் எள்ளிடவிடமின்றிச் சர்வ வியாபகமாய் அறிவறியாமை யற்று ஜகசித்திர படம்போ லும் பர்வதம்போலு மசைவற்று நிஸ்மரணமா (சங்கற்பமின்றியதா) யிருக்கிறபடியால் திரிவித பரிச்சேதமு மில்லை என்பதே துணிவு.

இதற்குதாரணம் மெய்ம்மொழி.

"பொன்னைத்தான் கண்டபேர்கள் பணியெனப்புகலார் போல, மன்னித்தா னுடன்மயக்கு மாயத்தத் துவங்களாய்ந்தே, புன்னைத்தா னறிய வின்ப வுருவுசை தன்ய மாகுந், தன்னைத்தான் கண்ட வர்க்குத் தானென வேறுமுண்டோ" என்றும்,

மூலசித்தி.

"என்றுமெக் காலமெங்கு மியாருளு மிறைவ னீயே
யின்றிமற் றொன்று மின்றி யிருந்தவா றிருக்க விங்ஙன்
பின்றைமற் றுளவாய்ப் பேணி யிதமிகப் பேய்த்தே ரேறிச்
சென்றிடச் செய்த தேயவ் விச்சையென் செப்பிடாயே"

என்றும்,

மகாவாக்கியம்.

"இக்குணங்க ளுடையபரப் பிரமமே நாமானே மெவ்வோ றென்னி,னெக்ககன மாதியெனச் சனிப்புமரிப் பின்மையின் னித்யமானேந், தொக்குடம்பு போலமலத் தின்றுவக்

க தின்மையினுற் சுத்த மானே, முட்கரணம் போனசிக்கு மறிவுபெரு மையிற் புத்த முடைத்து நாமே" என்றும்,

"அகங்கார விருத்தியெனப் பந்தமிலா மையின்முத்த மானே மிந்தச், சகம்போல விளக்கு மிந்திர சாலமிலா திரு கையினுற் சத்யமா னேஞ், சுகங்காணிற் றன்னையலாச் சுக மிலையென்றே பரமா னந்த மானே, மிகுங்கால தேசவஸ்து வெனப்பிரியா வானந்த வேட் நாமே" என்றும்,

தத்துவப்பிரகாசம்.

"முன்னைநற் சுருதி யோதி முடிவுறற் கரிய தாக, வின் னமத் தேவர் மூவ ரெய்துதற் கிடரே மேவத், தன்னையிப் படியே காணத் தானளித் தெனக்கோர் வார்த்தை, சொன் னநற் சொரூபானந்த சோதியைத் தொழுதல் செய்வாம்"

என்றுங் கூறுவதால் இதுவே பிரமாணசித்தம்.

வினு:—ஆத்மா விகாரமின்றி நிர்விகாரியாயிருக்கத் தேத கேந்திரியாதிகள் தொழிற்படுவதானுல் அவைகளு மொரு வஸ்துவென்று துவிதவாதிகள் சங்கிப்பார்களே?

விடை:—காந்தக் கல்லானது அசைவற்றிருக்க அதன் சந்நிதான பலத்தினுல் சடமான வூசி சேஷ்டித்து அக்காந்த த்தைப் பாய்ந்து பிடிப்பதுபோலும் சூரியனிச்சையின்றியி ருக்க அதன் சந்நிதான பலத்தினுல் சடமான சூரியகாந்தக் கல்லி லக்கினி ஜனித்து அதனுல் பாகாதி கிரியைகள் நடப் பதுபோலும் ஆத்மப்பிரகாசத்தினுற் பிரதிபலித்தசாயையா னுது விருத்திரூபமாய்ச்சாக்கிரச் சொப்பனங்களிலுள்ளவிட

யங்களை இந்திரியாதி வழிகளாலறிந்து விவகரிக்கின்றது. சுழுத்தி மூர்ச்சை சமாதிகளில் விருத்தியின்மையால் அறிதலும் விவகாரங்களுமில்லை. ஆத்ம சந்நிதான பலத்தாற்றொழிற்பட்டதன்றி யிந்திரியாதிகள் சடமேயாம்.

இதற்குதாரணம் சசிவன்னபோதம்.

"கடக்குஞ் சரம்பண்ணி யுண்ணின் றொருத்தன் கை பாத கன்னங்கண் மெய்போ லியக்கும், கிடக்கும் நடத்தா விடத்திவ் வுடம்புங் கிடக்கும் மொருத்தன் னடத்தா விடத்தே" என்றும்,

"கிழற்பாவை கண்ணாடி யிற்பாவை கைகா னிமிர்க்கும் முடக்கும் மிவன் செய்யு மெல்லாந், தொழிற்பால தாமிந்த வுடலஞ்செய் தொழிலுஞ் சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே" என்றும்,

கைவல்யநவநீதம்.

"செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்குங் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்குமாபோற், செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்கு மென்முன் செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யு,மெய்கலந்த விந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும் விருத்தி தானய், மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சியேநான் வெயில்போலென் றுரைத்த வனே விபுமா கர்த்தன்" என்றுங் கூறுவதினால் இதுவே பிரமாண்சித்தம்.

வினா:—இந்திரியாதிகள் தொழிற்படாது சடமாயிருந்தாலுந் துவிதமேயன்றி அத்துவிதமல்லவென்று சொல்லுவார்களே?

விடை:—தொண்ணூற்றாறு தத்துவமென்பது சகல மதத்துக்கும் பொதுவென்றும், ஸைவர்களுக்கு (௩௬) வேதாந்திக்கு (உ௮) மாயாவாதிக்கு (உ௫) வயிணவனு க்கு (உ௪) தத்துவங்களென்றும், பின்னும் பதினேழு தத் துவமென்றும், பத்தொன்பது தத்துவமென்றுஞ்சொல்வ தெல்லாம் சொன்மாத்திரமேயன்றிப் பஞ்சதன் மாத்திரை யைத் தவிரக் காலத்திரயத்திலுமில்லை. எப்படியென்றால். சத்தமென்றறிகிறபோது சத்தமும் சத்தமென்றறிந்தவறிவு மாத்திரமன்றிச், சமானவாயுவும் சுரோத்திரேந்திரியமும் வாக்கிந்திரியமும் வசனாதிவிடயங்களுமில்லை. பரிசமென்றறி கிறபோதுபரிசமும் பரிசமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி, மனமும் வியானவாய்வும் தொக்கிந்திரியமும் பாணீந்திரிய மும் தானாதிவிடயங்களுமில்லை. ரூபமென்றறிகிறபோது ரூப மும் ரூபமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி, புத்தியும் உதா னவாயுவும் நேத்திரேந்திரியமும் பாதேந்திரியமும் கமனாதி விடயங்களுமில்லை. ரசமென்றறிகிறபோது ரசமும் ரச மென்றறிந்த வறிவுமாத்திரமன்றிச், சித்தமும் அபானவாயு வும் சிங்குவேந்திரியமும் உபஸ்தேந்திரியமும் ஆனந்த விட யங்களுமில்லை. கந்தமென்றறிகிறபோது கந்தமும் கந்த மென்றறிந்த வறிவுமாத்திரமன்றி, அகங்காரமும் பிராண வாயுவும் கிராணேந்திரியமும் குதேந்திரியமும் மலவிசர்க் காதி விடயங்களுமில்லை. இந்தப்படி தன்மாத்திரைகளைத் தவிர வேறே தத்துவங்களில்லாமையாலும், தன்மாத்திரைக ளைப் பிரத்தியேகம் பிரத்தியேகமாய் (தனித்தனியாகப்) பிரித்துப்பார்க்க அவைகளுந்தனியே ஒன்றைவிட்டொன்

றில்லாமையினுலும், ஐந்து மொன்ருகவே யிருப்பதினுலும், இவைகளுக்குக் காரணமான விட்சேபசத்தியும் விவேகித்த விடத்து (விசாரித்துப் பார்த்தவிடத்து) இல்லாதிருப்பதினுலும் இவைகளெல்லாம் சொன்மாத்திரமேயாம். அந்தவாவரணமும் யூகித்துப் பார்க்குமிடத்து ஒன்றுந் தெரியவில்லையென்றறிந்த வறிவு மாத்திரமாகி அறியேனென்ற ஆவர்ணம் நசித்துவிடுகிறபடியாலும், பின்னுந் தனக்குள்ளே சசல தத்துவங்களுந் தோன்றி வளர்ந்து ஒடுங்குவதென்று கண்டவறிவை நோக்கமகா காரணமான மூலப்பிரகிருதியும் சொன்மாத்திரமா யொழிவதாலும் அவைகளும் பொருளல்ல.

வினு:—அஃதெப்படி?

விடை:—தன்னிடத்தொன்று உண்டானு லல்லவோ இருக்கவேண்டும், இருந்தாலல்லவோ லயிக்கவேண்டும். அப்படி உண்டாகவுமில்லை, வளரவுமில்லை, லயிக்கவுமில்லையென்றறிந்த வறிவுமாத்திரமா யிருப்பதே மூலப்பிரகிருதிரகிதமான பிரம சொரூபம்.

இதற்குதாரணம் தத்துவராத்திநகரம்.

"தத்துவம் பலவெனச் சாற்று வார்சிலர்
பித்தர்க ளெனுமிடம் பேச வேண்டுமோ
வத்துவின் வடிவல தன்றி நின்றபின்
னெத்தனை தத்துவ மின்ன மின்னமே."

என்றும்,

"இந்திய மிருபதோ டிரண் டெனத்
தந்திர மோதுவர் சார்ந்த மேலவர்
இந்தியம் பலவென விசைத்த பேரெலாம்
வந்தது மலினமா மனோவி காரமே.
என்றும்,

"கோடி தத்துவ மென்னிலுங் கோதிலா
நீடு தற்பர நின்றது மற்றவை
யோட்ட சித்தசித் தாகிடு முண்மையிற்
பீடுறப் பல பேசல் பிதற்றலே."
என்றும், போதாமிர்தம்.

"பன்னுவர் பலபல தத்து வங்களை
மன்னிய பரமுண ராத மாந்தர்க
டன்னிலை தனையுணர் கின்ற போதினி
லன்னிய மிதுவென வறைய லாவதே."
என்றும்,

"கோலுமாத் திரைநுரை குமிழி கொள்ளைநீர்
வேலையிற் பிறிதென விளம்ப லாவதோ
சாலுதத் துவம்பல சாற்று மாயினு
மூலநற் சிவமதே முடிவி னுள்ளதே."
என்றும், சிவப்பிரகாசதரிசனம்.

"ஒன்ற தென்றிட லாவது மொன்றற
நின்ற தத்துவ நின்மல போதமே
பின்றை யொன்றுள தென்றல் பெரும்பிழை
யென்று வேத மியம்பிய தல்லவோ."
என்றும், சமயசூடாமணி.

"வடம்படக் கோத்த மணிநுழை நூல்போன் மன்னுயி ராக்கைகட் கெல்லா, மிடம்படக் கோத்து நின்றதங் கொன் றே யெனுமிட மேழைகாள் பாரீர், கடம்பல பேதப் பட்ட மாத் திரமே கடத்தினு ளாகாசம் போலு, முடம்பினி லொ ளியைப் பார்த்தபோ தெல்லா மொருவனே யன்றிவே றுள தோ."

என்றும், சொரூபசாரம்.

"பூதாதி யைந்தும் பொறிபுலன்க ளெல்லாஞ்சித்
தேதாதி யந்தமவை யெல்லாஞ்சித்—தோதரிய
கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்சித்
தற்பமும்வே றில்லாமை யால்."

என்றும்,

"பார்த்த திசையெல்லாம் பரிபூ ரணசொரூபந்
தீர்த்தமெல்லா மானந்த சிற்சொரூபங்—கீர்த்திக்குந்
தோத்திரங்க ளெல்லாஞ் சுகசொரூப நம்மையலால்
வேற்றுருவ மேதாகு மே."

"சிற்சொரூபந் தானே செகசொரூப மானவெலாந்
தற்சொரூப சாரமாய்ச் சாற்றவே—பொற்சொரூப
மச்சுருவம் போல வதுவதுவாய்த் தோற்றுமொரு
சொச்சொரூபந் தானே துணை.

என்றும், வாசிட்டம்.

உவரி நீர்போ லுலகெல்லா மொன்றுன வுணர்வுமாத்தி ரமதுதா னுற்ற புந்தி, கவர்வுறுத லாலலையு நிறையு நீர்தான் கல்லோலத் தாலலையுங் கணக்கே போலச், சிவமுணர்வு

மாத்திரமே பிரமமாதி திகழ்பெயராய்ப் புகல்பொருளைச் செகமென்றெண்ணித், தவமறுபே தையர்காண்ப ரறிவுதானே சற்றசைந்த மாத்திரத்திற் சருக்க முண்டாம்.

என்றும்,

"பெரும்பெரிய வடிவான பிரமமே யாதலாற் பிறி தொன்றில்லை, வரும்பொருளெல் லாம்பிறிவின் கனதையா யிருத்தலிவ் வையமெல்லாங், கரும்புயலே யறிவேயாங் கற் பனைவே றில்லையாற் காணப்பட்ட, வரும்பொருள்க டமிலறி வுண் டாதலினு லறிபொருளா மனைத்து மில்லை."

என்றுங் கூறுவதாலிவைகளே பிரமாணசித்தம்.

வினு:—இப்படி துவிதவஸ்துவின்றித் தானேதானு யிருக்கிற தன்னிடத்தில் துவித பாவனைகளான விபரீதமெப் படியுள்ளதாகத் தோற்றியது?

விடை:—இல்லாதவஞ்ஞானத் தோற்றமான புலன்(இந் திரியம்) வழிகளால் காலத்திரயத்திலுமில்லாத சுத்தமித்தை யான விபரீதபாவனை இல்லாத கானற்சலம்போலுள்ளதாகத் தோற்றியது.

வினு:—உள்ளவஸ்துவி லுள்ளது தோற்றுமே யன்றி இல்லாது தோற்றுதே?

விடை:—உள்ள இரும்பில் இஃது ஆயுதமெனத் தோற் றியதே, இல்லாதவாயுதந் தோற்றுமா உள்ள இரும்புதானே ஆயுதமாகத் தோற்றினது. உள்ள பொன்னில் இஃது ஆப ரணமெனத் தோற்றியதே, இல்லாதவாபரணந் தோற்றுமா.

உள்ள பொன்தானே ஆபரணமாகத் தோற்றினது. உள்ள மண்ணில் இது கடமெனத் தோற்றியதே, இல்லாத கடந் தோற்றுமா உள்ள மண்தானே கடமாகத் தோற்றினது. உள்ள மரத்தில் இது கரி(யானை)பரி (குதிரை)எனத் தோற்றியதே, இல்லாத கரிபரிகள் தோற்றுமா உள்ளமரந்தானே கரிபரிகளாகத் தோற்றினது. உள்ள சமுத்திரத்தில் இஃது அலை நுரை குமிழியெனத் தோற்றியதே, இல்லாத அலை நுரை குமிழி தோற்றுமா உள்ள சமுத்திரந்தானே அலை நுரைகுமிழிகளாகத்தோற்றினது. உள்ள ஆகாசத்தில் இது நீலபீதமெனத் தோற்றியதே, இல்லாத நீல பீதவர்ணங்கள் தோற்றுமா உள்ள ஆகாசந்தானே நீலபீதவர்ணங்களாகத் தோற்றினது. உள்ளகட்டையில் இதுகள்ளனெனத் தோற்றியதே,இல்லாத கள்ளன் தோற்றுவானு உள்ளகட்டைதானே கள்ளனாகத் தோற்றினது. உள்ளபழுதையில் இது பாம்பெனத் தோற்றியதே, இல்லாத பாம்பு தோற்றுமா உள்ள பழுதைதானே பாம்பாகத் தோற்றினது.இந்தத் திருஷ்டாந்தங்களைப் போலச் சச்சிதானந்த சொருபமான தன்னிடத்தில் இது நாமரூபமெனத் தோற்றியது, உள்ள சச்சிதானந்தமே தோற்றினதன்றிக் காலத்திரயத்திலு நாமரூபந் தோற்றவேயில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—இருக்கின்றது சத்து. அந்தச் சத்துத்தானே நாமரூபமாகத் தோற்றியது. அந்த நாமரூபம் சித்தைத் தவிரக்காலத்திரயத்திலுமில்லாமையாலும் சத்தைவிடச் சித்

தென்பது வேறே யில்லாமையாலும் இரண்டாம் வஸ்து வில்லை. அந்தச் சத்துக்குஞ் சித்துக்கு மிடையேயுள்ள ஆனந்தமான சுகம் மனவொருமை யில்லாவிடத்துத் தோற்றமாட்டாது.

இதற்குதாரணம் வாசிட்டம்.

"ஆதலினு லீதொன்றுஞ் செய்த தல்ல வடுத்துள்ளிச் சக மில்லை யறிவு மட்டு, மேதகுசங் கற்பமே வேதா வாகு மெய்யாக வறிவன்றி வேறென் றில்லைச், சேதனமாத் திரத்துதித்த சிருட்டி யந்தச் சேதனமே வடிவென்று செப்ப லாகு, மோதியசெய் வோன்பொசிப்போ னிரண்டு மல்ல வுறுபவந் தீர் பிரமமே யுள்ள வெல்லாம்."

என்றும்,

"பொருகடலிற் றிரைமுதலாய்ப் பிறந்த வெல்லாம் புனலாகி விளங்காமற் புழுதி யாமோ, யொருபொருளாம் பிரமமாத் திரமே யல்லா லுபயமெனுங் கற்பனைப்பே றொன்று மில்லை, யெரியிடத்திற் சூடுமாத் திரமே யல்லா லிரண்டுண்டோ வவ்வகைபோ லென்று மொன்றுஞ், சரியைகிரி யாயோக பதத்தின் முத்தி சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்.

என்றும், அத்துவிதவுண்மை.

"தங்க மொன்றே பணிகளிற் சாற்றும் விதங்கள் வெவ்வேறு, தங்க விலக்க ணமுமன்று தங்கந் தவிர வேறன்று,

தங்க மழியாப் பணியழியிற் சாற்று மிந்தத் தகைமைபோ, லெங்கு நிறைசச் சிதானந்த மிலங்கு மிந்த வுலகமே.

என்றும்,

"தங்க மொன்றே பணதிகளிற் சாற்றும் விதமாய் விளங்குதலி, னங்க முதலாஞ் சகங்களா யறிவே விளங்கு மயலில்லை, இங்கஙனென்றே பங்கொன்று மில்லை யகண்ட வறிவொன்றே, துங்க வறிவு தோன்றளவுந் தோன்று நாம விதரூபம்."

என்றும், கைவல்யநவநீதம்.

கானனீர் கிளிஞ்சல் வெள்ளி கந்தப்ப நகர்க ளூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்திடாயே.

என்றும் பிரமாணங்க ளிருப்பதினால் காலத்திரயத்திலும் மாயை தோற்றமாட்டாதென்பதே துணிவு.

வினா:—மித்தையான நாமரூபங்கள் அகண்ட சச்சிதானந்த சொரூபமாத்திரமா யிருக்க, இந்தச் சனனமரண முதலான தாபத்திரயங்களும் சீவேசுர பேதங்களும் பந்தமோட்சங்களுமுள்ளனவாகத் தோற்றுவதெப்படி?

விடை:—ஆத்மாவே தேகேந்திரியாதிகளென்றும் தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்றும் விபரீதமாகக் கண்டதேயஞ்ஞானம். அவ்வஞ்ஞானத்தினால் ஆத்மாவாகியதன்னை அசத்தாகிய நாமரூபங்களாய்க் கண்டபோதே அத்துவித மறைந்து துவிதபாவந் தோன்றியது.

வினா:—அஃதெப்படி?

விடை:—மேகம் அசைந்தோடச் சந்திரனோடுவது போலும், சலமசைய நிச்சலமான சந்திரனசைவதுபோலும், ஓடமேறிப் போகிறவனுக்குக் கரையினிடத் தசைவற்றிருக்கு மரம் ஓடிவருதல்போலும், பித்தமேறிய கண்ணின் சுழலினால் சுழலாத வீடுவாசல் சுழல்வதுபோலும், கொள்ளிக்கட்டையைச் சுழற்றினால் சூரியவட்டமாய்த் தோற்றுவதுபோலும், காற்றாடிக் கயிறு ஆகாசத்தில் சக்கரமாய்த் தோற்றுவதுபோலும், கானலாறோடச் சலமோடுவதுபோலும், கண்ணாடியினது ரசாரோபத்தினால் சலமிருக்கு மிடஞ் சலமின்மையாகவும் சல மின்றியவிடஞ் சல முள்ளதாகவுந் தோற்றுகிறதுபோலும், ரசக் கண்ணாடிக் கெதிரிருந்த வீடுவாசல்கள் பிற்புறந் தோற்றுவதுபோலும் அஞ்ஞானத்தினால் நாமரூபமான துவிதபாவந் தோற்றியது.

இதற்குதாரணம் அபரோட்சாத்மானுபவதீபிகை.

"ஆன்மா வைத்தான் றேக மென்று மறிந்தார் பொன்னைப் பணியென்றார், மான நிசமுண் டாய்த்தானே மண்ணைக் கடமாய் நிச்சயித்தா, ரான தந்தை படமென்றே யறநிச் சயித்தா ரதுபோலு, மான மூட மதனாலே யான்மாத் தேக மெனவறிந்தார்"

என்றும்,

"அறியு மணியை நெருப்பென்று மறிந்தார் போல முகிலோடச், செறிசந் திரன்றா னோடுதல்போற் சலமே யசையச் சந்திரன்றா, னறிய வசையு தென்றாற்போ லஞ்ஞா

னத்தா லான்மாவைப், பிறியா தேக மாயறிந்தார் பின்ன
மான வவித்தையினுல்"

என்றும்,

"அவித்தையி னுலே யான்மா விடத்தினிற் றேக மென்று
நவிற்றிய வத்தியாச நாமமுண் டாயிற் றென்றே
யவித்தைபோய் விவேகந் தன்னு லறியவே சீவான் மாவுந்
தவித்திடாப் பரமான் மாவு மயிக்கியந் தாவ ரங்கள்"

என்றும் கூறுவதினுலறிக. இப்போதும் ஞானதிருஷ்டி யாய்ப் பார்த்தவிடத்தில் பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கும் பொருளாகிய மூன்றும் பஞ்சப்புலன்களோ டழிந்து ஆதித்தப் பிரகாசத்தினுள் தீபப் பிரகாசமடங்கினது போலும்,சூரியப்பிரகாசத்தினுள் பூதவிருளடங்கிதுபோலும் அறிவாகிய பெருங்கண்ணைமறைத்த ஆணவப்படலம் நீங்கும். அப்போது நாமரூபாத்மக (நாமரூபவடிவ)மான சகல தேகாதிப் பிரபஞ்சங்களுந் தனக்குள் ளொடுங்கித் தானே தானுயெதிர்த்து விளங்கும்.

இதற்குதாரணம் அபரோட்சாத்மானுபவதீபிகை.

"பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கப் படுகிறது, மேற் குமிவைமூன்று மெவ்விடத்தி லில்லையோ, மார்க்கு மவி டத் ததிட்டிதான் பண்ணுவதீ, தார்க்குஞ் சமதிட்டி யாம்". என்று கூறுவதினு லிதுவே பிரமாணம்.

வினு:—சகல பிராரத்தபோகங்க ளிருக்குமென்றும் ஞானம் வந்தாலும் அவைகளைப் புசித்துத் தான் றெலை

க்க வேண்டுமென்றும் சகல சுருதி ஸ்மிருதிகளுஞ் சொல்லுவதன்றி நமக்கு மனுபவமாயிருக்க,வஸ்துத் துவயமில்லையென்றுசொல்லுவதெப்படி?

விடை:—பிராரத்தபோகம் அஞ்ஞான திருஷ்டியினல் அப்பியாசகாலத்திலுண்டு தத்துவ ஞானவுதயத்தி லில்லையென்னும், அப்பியாசிக்கே பிராரத்தமன்றி ஆரூடனுக்கில்லையென்றுஞ் சுருதிஸ்மிருதிகள் சொல்லுகின்றன. நமது அனுபவமு மப்படியேயாம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—விழித்தவனுக்குச் சொப்பன மசத்தானது போல யதார்த்த ஞானத்தில் தேகாதிக ளசத்தாய்ப் போகிறபடியால் ஆரூடனுக்குப் பிராரத்தமில்லை. அவனுக்கு அதீதமாகிய பிரமப்பிரகாசமொன்றுமே யேகமாய் விளங்கும். ஆதலா லந்தச் சொருபமே நீயாறு யென்பதிற் சந்தேக விபரீதங்களின்றி அத்துவித சின்மாத்திரமா யிருப்பாயாக.

இதற்குதாரணம்.

அபரோக்ஷாத்மானுபவ தீபிகை.

"ஞானம்வந் தாலுந் தானே நவில்பிரா ரத்து வத்தைத்
தானது பொசித்துத் தீர வேண்டுமென் கின்ற சாஸ்திரந்
தானுமப் பியாசிக் கன்றித் தத்துவ ஞானிக் கில்லை
யானதத் துவக்கி யான வுதயத்தே பிராரத் தங்கள்"

என்றும்,

உதயத்தே பிராரத் தம்மென் றென்றில்லை தேகந் தானு
மதேயசந் தாகை யாலு மதெப்படி யென்னிற் றன்கே

ளுதயத்தே விழித்த வர்க்குச் சொப்பன மசத்தா னுற்போ,
லுதயத்தே பிராரத் தங்க ளொன்றுமான் மாவுக் கில்லை"
என்றும்,

"இல்லையேற் சென்ம கன்ம மில்லையோ வென்று லான்மா
வல்லையே சன்ம மில்லா ராகையாற் சென்மாந் தத்தின்
வல்லமை பிராரத் தத்தால் வருகின்ற சன்ம மும்போய்
யெல்லையிற் றேகஞ் சென்ம மீர்ச்சுதே யென்றுற் றேகம்"
என்றும்,

"தேகமு முயற்கொம் பைப்போற் றேர்ந்திடி லில்லை கண்டா
யேகமா மாத்து மாவி னிடத்திற்சொப் பனதே கங்க
ளாகவெப் படியா ரோப மாச்சுதோ வதுபோற் போமாற்
றேகமு மாத்து மாவிற் றேறிலா ரோப மாகும்"
என்றும், வாசிட்டம்.

வாசிட்டம்.

"அந்தமற் றொன்றாய் விகற்பமற் றறிவா யழிவிலாப் பழம்பொரு ளிருக்கப், பந்தமுற் றவரார் முத்திபெற் றவரா பாவனை விகற்பமே யனைத்துஞ், சிந்தனை விரிவு பந்தமா மதனைத் தீர்ந்திடன் முத்தியா மனத்தின், றொந்தலீ லையி னுற் றாரமா மணித்துந் தூரமு மண்ணிதாய்த் தோற்றும்"
என்றும்,

"இவையெனு மனைத்துஞ் சிற்கன மாகி யிறப்பிலாப் பிரமமே யென்று, நவையறு மனமாங் கற்பனை யில்லை நாசமும் பிறவியு மென்னு, மவையெலாம் புவன மூன்றினு

மில்லை யறுவகை விகாரமு மில்லைக், கவைபிறு சமமாங் குறி பெறு மறிவு மாத்திரங் காணநின் றுளதால்"

என்றும், அத்துவிதவுண்மை.

"இல்லா மாயை தங்கணிலை யாரு நிற்க வம்மம்ம,பொல் லாப் பிறப்பிற் பட்டதுமாய்ப் பொக்க மிகவுந் தவிர்ந்தது மாய், நல்லா ரிணக்கஞ் சேர்ந்ததுமாய் ஞான விசார முதி த்ததுமா, யெல்லா மாம்வீ டடைந்ததுமா யார்க்குங் காட்டி மறைந்திடுமே"

என்றுங் கூறுவதாலறிக. இப்படி தானாய்விளங்கிய நிலை யிற் கிஞ்சித்தேனும் அசம்பாவனை நேரிடுமானால் அவ்வசம் பாவனையானது குருவினாலுஞ் சாஸ்திரங்களினாலுந் தீர மாட்டாது. இந்த அசம்பாவனையுள்ளவன் சுவானுபவத்தில் நிலைகொள்ளாமல் தவறுகையினால் அவன் ஆத்மத்துரோகி யென்றும் பிரமத் துரோகியென்றுஞ்சொல்லப்படுவன். அன் றியும் இவ்வசம்பாவனையைப் போக்குதற்கு மேலனுபவ முஞ் சாத்திரங்களு மில்லாமையினால் இந்தத்துரோகம் ஒன் றினாலும் அவனுக்கு நீங்கமாட்டாதென்பது சித்தம்.

ஆதலால் அசம்பாவனைக் கிடமாகிய இதர சாஸ்திரங் களைப் பார்க்கலாகாது; பார்த்தபோதிலும் தனது யதார்த்த மாகிய சுவானுபவ திருஷ்டிவிடாமலிருந்து பூர்வபட்சமா யெண்ணிச் சாவதானமாய்ப் பார்த்தறியவேண்டியது.

இதற்குதாரணம் சிவஞான நிலயம்.

"தன்னெஞ்சந் தனக்குச் சான்றது வாகத் தத்துவ நன்குண ராதே, வன்னெஞ்ச ணாகிக் கூடமே புரிவோன் வஞ்சகக் கூற்றினுங் கொடியோன், பன்னுங்கா லவன்றன் றரிசனம் பரிசம் பழுதுறு நிரயமே துவுமாம், புன்னெஞ்சா லவனும் போய்நர கெய்திப் பூமியுள் ளளவுமே ருனல்"
என்றும்,

"ஞானமா மிலிங்கந் தம்முளத் தின்றி ஞானிகள் வேடமே மருவி, யூனமே வளர்த்தங் குண்டிமை தனத்தின் பொருட்டிறு விழிகரு கின்ற,வீனமாஞ் சோர ஞானிக ணிரய் மெய்துவ ரெய்தியாங் குழைத்துத்,தீனமாந் திரியக் கியோனிக டோறுஞ் செனிப்பது மரிப்பது மாவார்"
என்றும், ஞானசித்தி.

"மறைமுதற் கலைக ளியாவையு முணர்ந்து மாசற வுரைத்துமா சொடுங்கான், கறையுறும் விடயக் கருவெனுங் கடலிற் கருத்தழு ததின்விழு மாகி,லறைதரு மவனே கன்மசண்டாள னறிவற விருமையு மிழந்து, பொறியிலி யவனைப் போலும்பா தகரிப் புவியினி லொருவரு மிலையே"
என்றும்,

"சாதிசண் டாளன் கதிபெருந் தருமம் வழுவலிற் கன்மசண்டாள, ரோதிய வழிக ளொன்றினுங் கதிதா னுற்றிடா னென்பதுண் மையதே, நீதியாங் கருமம் விட்டுஞானத்தே நின்றவர் நிலைபிறழ்ந் தவர்போற், றீதுற வொழுகுஞ் சோரமே யென்றுற் றீக்கதி யுறுதலோ திடுமே"
என்றும் ஞானசாரம்.

"வேதவா கமங்கண் மிருதிநூல் புராண மிக்கவெக் கலைகளும் பயின்று, போதமே சொல்லிப் போதமங் குணரார்ப் புலையருங் கழுதையு நிகராங், கோதிலா வாரங் குங்குமம் பளிதங் குலவிய புழுகடைப் பொதிதா, னேதமே சுமந்த கழுதை யிங்கிவனி னேற்றமாம் வஞ்சமின் மையினால்"
என்றும்,

"கீழுறு கரும மேவிய பதத்தோன் கிளர்தவ வேள்வி யாங் கடையின், வாழியங் குயர்ந்தோ னெனமறை வழுத்து மற்றவ னப்பத மழியி, னழிய நரக மலதிலை யெனுமா லதிவன்னச் சிரமமுற் றழிந்தோன், சூழுறும் பதித னுய்வில னவன்பேர் சொல்லினும் பஞ்சபா தகமே"
என்றும், மெய்ம்மொழி.

"கொலைமுதலைம் பாதகமுங் கோதறவே தமையுணர்ந் தோர்க் குண்டெங் கென்னிற், சலமறுசே தனவடிவைச் சடமாய்ப்பார்க் கலிற்கொலைதன் மயக்கங் கள்ளா, மலைமனமா திகளெனதென் றிடல்கள்ள லவைசெய்தே னென்றல் பொய்யாம், நிலையிலுட லுறவின்ப மெனவைம்பா தகமுணர்ந் தோர் நித்தர் சுத்தர்"

என்றும், அமிர்தசாரம்.

"யோகத்தி னுண்மை யுணர்வன்றி யூன்பொருட்டா
லேகத்தி னின்றே மெனவியம்பி—மோகம்
மனத்தவல மாற்றாத வல்வேடர் தம்மை
நினைத்தவருங் காணார் நெறி"

என்றுங் கூறுவதால் * அசம்பாவனை ¶ விபரீத பாவனைகளற்றுத் தானே தானாய்ச் சுயம்பிரகாசமாய்ச் சொச்சொரூபமாய் நின்மலமாய் நித்தியதிருப்தியடைந்து அந்தர்முக நிஷ்டையான சுகசமாதி யுடையவர்களே சதா நிஷ்டர்களாய் விளங்குகின்றவர்கள். இதிற் சம்சயமில்லைசித்தம்.

ஐந்தாவது உபசாந்திப்பிரகரண முற்றிற்று.

## ஆறாவது

# நிருவாணப்பிரகரணம்.

### அவதாரிகை.

முற்பிரகரணங்கள் ஐந்தினாலுஞ் சர்வமுந்தானாய் விளங்கும் உபசமனம் பெற்றுச் சீவன்முத்திசாக்ஷாத்கார துரியானுபவம் நிலைத்துள்ளசிஷனுக்கு மேல் அசிபதலட்சியார்த்த

---

* வேதாந்தத்தில் சீவப் பிரமங்களின் பேதம் சொல்லப்பட்டிருக்கின்றதா? அல்லது அபேதம் சொல்லப்பட்டிருக்கிறதா? என்பது பிரமாணத்திலுள்ள சந்தேகமாம். சீவப்பிரமங்களின் பேதம் உண்மையா? அல்லது அபேதம் உண்மையா? என்பது பிரமேயத்திலுள்ள சந்தேகமாம். இவ்விருவகைச் சந்தேகமும் அசம்பாவனையெனப்படும்.

¶ சீவப்பிரமங்களின் பேதமும் சத்தியம்; தேகாதிப் பிரபஞ்சமும் சத்தியம் என்பது விபரீதபாவனை, விபரீதபாவனை - விபரீத நிச்சயம்.

மான அகண்டானந்த துரியாதீத சுவானுபூதி மாத்திரமாய் ரமித்திருக்கும் விதேகமுத்தி யனுபவஞ் சித்திக்கும் பொருட்டு நிருவாணப் பிரகரணங் கூறுகின்றார்.

கவி.

உள்ளுறு சைவம் பாசு பதங்காளா முகத்தி னோடு
விள்ளுமா விரதம் வாமம் வயிரவ மிவையா றுகுந்
தள்ளுமப் புறத்து லோகா யதன்சமண் புத்த னுகு
மள்ளுமீ மாமி சன்றன் வயிணவன் மாயா வாதி.
வாதமீ ராறி லுள்ள மதங்களின் வகுத்த நூலா
லோதுறிற் பிராந்தி யல்லா லுளப்பிராந் தியைத்தான் றீர்க்கா
தேதினுற் பிராந்தி தானுந் தெளிவிக்கு நூலே தென்னி
லாதியாம் வேதாந் தத்தின் விசாரத்தா லறிவர் தானே.

வினு:—சமய வுண்மையில் நிலைத்துள்ள சமயிகளுக்கு முத்தியின்றோ?

விடை:—சைவம், பாசுபதம், காளாமுகம், மாவிரதம், வாமம், வயிரவம் என்னு மிவ்வாறும் அகச்சமயமென்றும், லோகாயதம், மீமாம்சம், பௌத்தம், சமணம், பாஞ்சராத்திரம், மாயாவாதம் என்னுமிவ்வாறும்புறச்சமய மென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள் உட்சமயத்தில் சைவமானது பேரறிவாகிய சிவனறிவிக்கச் சீவனறிவானென்றும், ஆண்டவனுமடிமையுமாயிருக்கவேண்டுமென்றுஞ் சொல்லும். பாசுபதமானது பரமாணு உபாதான(முதற்காரண) மாய்நிற்க அதன் புணர்ச்சிகாரணமாக உலகம் பண்ணப்பட்டதென்றும், இறை(கடவுள்) நிமித்தகாரணமாய் நிற்குமென்றும், உயிர்க

ளெல்லாமலங்களாற் பிணிப்புண்டு கிடக்குமென்றுஞ் சொல்லுவதன்றி ஆகமத்தின் முறையே சிவனை யொருவடிவத்தில் ஆவாகனம் பண்ணியருச்சித்துப் பிணிப்பா(கட்டா)கியபாசமறுத்து அணுவாகிய சீவன் சிவனாகியபதியைக் கூடுமென்றுஞ் சொல்லும். காளாமுகமும் மாவிரதமுமாகிய விரண்டும் அத்தியந்தஞ் (முற்றுஞ்) சடை முதலான வடையாளங் கொண்டு பத்தியோடுஞ் சிவனை வழிபட்டருச்சித்து நியமங் குலையாதிருந்தால் * வினையுடல் விடும்போது சிவலோகத்தையடையலாம். அதுவே மோட்சமென்றுஞ் சொல்லும். வாமமானது மதுமாமிசங் கொண்டு சத்தி வடிவமாகப்பாவித்து ஸ்திரீகளைப்பூசித்து அவர்கள் சேடமுட்கொண்டு அந்தப்போதையானந்தத்திருப்பதே மோட்சமென்று சொல்லும். வைரவமானது மயானத்திருந்து என்புதரித்து சாம்பற்பூசி யுபவாசமாயிருந்து மாவைரவமென்னு மோமமுண்டாக்கி நரபலிகொடுத்து அந்த நரமாமிசமுமதுவுங் கபாலத்தில் வைத்து ஓமத்திலாகுதிபண்ணி அம்மதுவும் மாமிசமும் மறுநாள் கொள்வதே பாரணமென்றும், இப்படி செய்துமுடிந்ததே நிருவாணவீடென்றுஞ்சொல்லும். மீமாமிசமானது பசுப்படுத்தி(ஆட்டைக்கொன்று)யாகம்பண்ணி அந்தயாகபலத்தினால் தேவர்களாய்ச் சுவர்க்கத்திருப்பதே மோட்சமென்றும், வேதாத்தியயனம் பண்ணுஞ்சத்தமே பிரமமென்றுஞ் சொல்லும். பௌத்தமானது இந்திரியங்களினறிவே ஞான

---

* வினையுடல்—வினையினால்வந்ததாயும், வினையின்பயனை யேற்றுக்கொள்ளுதற்கு ஆதாரமாயும், மேல்வினைவிற்குரிய வினையைச் செய்வதற்குக் கருவியாகியுமுள்ள தேகம்.

மென்றும் பூதாகாசமே யாத்மாவென்றுஞ் சொல்லும். சமணமாவது இந்திரிய நிக்கிரகியாய்க் காமத்திற் புகுதாம லிரவுணவுகளை மறுத்து உடலையொறுத்துச் சிகைபறித்தி ருப்பதே பொன்னெயில்வட்டத் தருகருடன் சேர்வதற்குக் காரணமென்று சொல்லும். பாஞ்சராத்திரமானது ஆதிமூல மானவிஷ்ணுவேதமதுமாயையினுல் உலகுயிரெல்லா முண்டு பண்ணினுரென்றும், அந்தமாயையே யவருக்கு வடிவமென் றும், வாசுதேவர்முதலான நால்வர்களின் சமாராதனைத்தாற் சீவர்கள் பெத்தம்விட்டுப் பரமபதம் பெறுவார்களென்றும் சொல்லும். மாயாவாதமானது நானென்னுமகங்காரியே பிர மம். அவருக்கு ஒருவிகாரமுமில்லை. அவர்சந்நிதானவிசேடத் தால்மாயைசேடித்துநின்று உலகுயிர்களையுண்டு செய்ததென் றும், பந்தமோட்ச மில்லையென்றுஞ் சொல்லும். இந்தப்பன் னிரண்டேயன்றிப் பாஷாண்டம், விரோசனம், சாருவாகம், உபாசகம், க்ஷணிகவாதம், அந்தராளம், ஆகமம், திகம்பரம், பிரபாகரம், தார்க்கீகம், பாட்டம்,சாங்கியம், யோகம்,பாதஞ் சலியம், விஸ்வரூபம், பிரசாபத்தியம், காணுபத்தியம், கௌ மாரகம், பௌராணிகம், கன்மசாஸ்திரம் என்று அனேக மதங்களுமுண்டு. அம்மதவாதிகளெல்லாம் தங்கள் தங்கள் மதாபிமானமே மேற்கொண்டு மந்திரவாதம் ரசவாத முத லிய சாஸ்திரங்களைத் தொடுத்து நின்று பிராந்தர்களா யலைந்து போனுர்களென்று பஞ்சதசப் பிரகரணத்திற் பிர மாணமிருக்கின்றபடியினுல் சமயிகளுக்கு முத்தியில்லை.

வினு:—சீவவாதிகளுடனே ஈசுவரவாதிகளையும் பிராந் தர்களென்று சொல்லலாமோ?

விடை:—சொப்பனத்திற் பிட்சை யெடுக்கிறவனிலும் அரசனுயிருக்கிறவ னதிகமானாலும் விழித்தபிறகு இரண்டு பேரும்பொய்யாதல்போல இருவகைவாதிகளுங்கற்பிதத்தில் தாரதம்மியமா யிருந்தாலும் ஞானம் வந்தவனைக் குறித்து அவ்விருவகைவாதிகளும் பிராந்தர்களென்றேசொல்லவேண்டும்.

வினா:—இப்படி வேதாந்த விசாரத்தினால் வஸ்து ஒன்றேயென்று நிண்ணயம் பண்ணுவதானால் அது மற்ற வாதிகளுக்கெல்லாம் விரோத மல்லவோ?

விடை:—ஒன்றே பொருளென்ற வேதாந்தத்திற்கும் அதனைத்தானே குருடர் யானைகண்டதுபோற் கண்டிருக்கின்ற மதவாதிகளுக்கும் சற்றும் விரோதமில்லை.

வினா:—ஒன்றே பொருளென்னும் வேதாந்தத்தைநோக்க மற்றுள்ள மதங்களெல்லாம் மாயாமயமென்பதற்குப் பிரமாண முண்டோ?

விடை:—முப்பத்திரண்டு உபநிஷத்துமே பிரமாணமென்று பஞ்சதசப் பிரகரணத்தில் நிருபித்திருக்கின்றதே பிரமாணசித்தம்.

வினா:—விசாரஞானத்தினால் வஸ்து நிர்ணயம்பண்ணுவதெப்படி?

விடை:—ஷட்லிங்க தாற்பரியங் கொண்டு வேதாந்த விசாரம்செய்த சிரவண பலத்தினால் வஸ்து நிர்ணயம் செய்யவேண்டும்.

வினு:—அஃதெப்படி ?

விடை:—உபக்கிரமம், உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உற்பத்தி என்றறுவகைகளாம்.

வினு:—உபக்கிரமமாவ தெத்தகையது ?

விடை:—அகண்டபரிபூரண சச்சிதானந்த பிரமத்தினிடத்தில் ரச்சுவிற் சர்ப்பந் தோன்றினதுபோலச் சகல பிரமாண்ட பிண்டங்களாகிய சகத்துண்டாயிற்று, இந்தச்சிருஷ்டிக்குமுன் பிரமஞ் சத்தாமாத்திரமா யிருந்ததென்று பிரதிவாதிக்கப்படுவதே உபக்கிரமம்.

வினு:—உபசங்காரமாவ தெத்தகையது ?

விடை:—உற்பத்தியான சகலசகத்தும் அபவாத (தெளிவு)க் கிரமமாக வொடுங்குகையால் பிரமாண்ட பிண்டங்களொன்னு முபாதியிற் கூடஸ்தருக்கும் பிரமத்துக்குமுள்ள வுபாதிகளை யொழித்து ஏகத்துவ மென்னும் ஐக்கத்தைக் கூறுவதே யுபசங்காரம். இவ்விரண்டு மொரேலிங்கமாம்.

வினு:—அப்பியாசமாவ தெத்தகையது ?

விடை:—பிரத்தியேகான்மாவாகிய நீயே பிரமமென்றென்பது பிரகாரமாக வுபதேசிப்பது. அவ்வுபதேசஞ் சேதனனைக்கூட்டிச் சொல்வதினாலும் சேதனனுக்கே அத்வைத ஆத்தும தத்துவம் போதிப்பதினாலும் அஃதே அப்பியாசம்.

வினு:—அபூர்வதையாவ தெத்தகையது ?

விடை:—அஷ்டப்பிரமாணங்களுள் உபநிஷத் பிரமாணத்தின்ற் பிரத்தியேகாத்மலக்ஷண மறியப்படுவதன்றி மற்றைப் பிரமாணங்களினு லறியப்படாதென்பது.

வினு:—அஷ்டப்பிரமாண மாவதென்ன ?

விடை:—அவை: * பிரத்தியட்சம், அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அனுபலத்தி, ஐதிகம், சம்பவம் என்றெட்டுவகை.

வினு:—அவற்றுள் பிரத்தியட்சப் பிரமாணமாவதென்ன ?

விடை:—பிரத்தியட்சமானது சந்தேகப் பிரத்தியட்சம், விபரீதப் பிரத்தியட்சம், யதார்த்தப் பிரத்தியட்சமென்று

* (1) செவியாதி யிந்திரியங்களால் சப்தாதி விஷயங்களைக் காணும் அறிவு பிரத்தியட்ச மெனப்படும். (2) புகை முதலிய குறிகளால் மலை முதலிய விடங்களில் நெருப்பு முதலியவை யுண்டென்றாராய்ந்தறிதல் அனுமான மெனப்படும். (3) ஒன்றற்கொன்றுள்ள சாதாரண தருமம் (பொதுமை) பற்றியறிதல் உவமான மெனப்படும். (4) சிருஷ்டியி ஞரம்பத்தில் சீவர்களுய்யுமாறு பரமேசுவரன் எடுத்துச் சொல்லிய வேதமும் அதற்கு விரோதமின்றிய சாஸ்திரமும் ஆகமமெனப்படும். (5) இங்ஙன மன்றாயின் இது கூடாதென் றெதிர் மறைவாயிலாக வறிதல் அருத்தாபத்தி யெனப்படும். (6) விளங்குதலுண்மைக்கு மாறுபட்ட விளங்குதலில்லாமை அனுபலத்தி யெனப்படும். அனுபலத்திப்பிரமாணத்தா லறியப்படும் பிரமேயம் அபாவமாம். (7) தொன்றுதொட்டு இம்மரத்தில் பேய் இருக்கிறதென்று வழங்கிவருதல் ஐதிக மெனப்படும். (8) ஆயிரத்தில் நூறுண்டென்டென்னும் ஞானம் சம்பவ மெனப்படும்.

மூன்றுவிதமாம். அவற்றுள்:—கட்டையைக் கண்டு கட்டையோ கள்ளனோவென்று சங்கற்பித்தது சந்தேகப் பிரத்தியட்சம்; கள்ளனென்றே விகற்பித்தது விபரீதப் பிரத்தியட்சம்; கட்டையென்றறிந்தது யதார்த்தப்பிரத்தியட்சமென்று சொல்லப்படும்.

வினா:—இவற்றின் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—யதார்த்தப் பிரத்தியட்சத்திற் குதவியாக வேறொரு பிரமாணமும் வேண்டுவதின்று, சந்தேக விபரீத புத்தி நிவிர்த்திக்கே வேறு பிரமாணங்கள் வேண்டுவதாகையால் ஆசிரியர் பிரஞ்ஞானம் பிரமமென்று இருக்குவேத மகாவாக்கியத்தை யுபதேசிக்கச், சீடனும் அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்குமானால் தேகாதி சகத்தெல்லாம் பிரத்தியட்சத்திற் காணப்படுதலால் நான் தேகமோ அறிவோ என்றதே சந்தேகப்பிரத்தியட்சம்; நான் தேகமென்றுறுதிகொண்டதே விபரீதப் பிரத்தியட்சம்; நான் பிரமமென்றுறுதியாக நிலைத்ததே யதார்த்தப் பிரத்தியட்சம். இவ்யதார்த்தப் பிரத்தியட்சத்திற்கு வேறு பிரமாணங்கள்வேண்டுவதின்று; சந்தேக விபரீதபுத்தி நிவிர்த்திக்கே அனுமானப் பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா:—அனுமானப் பிரமாணமாவது யாது?

விடை:—அனுமானம் பிரதிக்கினை ஏது திருஷ்டாந்தமென மூன்று அவயவமுடையது. அவற்றுள்:—இம்மலை நெருப்புடைத்து என்பது பிரதிக்கினை; புகையுடைமை

யால் என்பது ஏது; அடுக்களை (சமையலறை) போல என்பது திருஷ்டாந்தமாம்.

வினு:—இவற்றுள் பிரதிக்கினையிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—பூதங்களானவை தடித்துப் பௌதிக (பூதத்தின் காரியம்) சராசரமானவொரு தேகத்தைக் குறித்து இவ்வுடம்பின்கண் அறிவாகிய பிரம மிருக்குமென்று நிச்சயிப்பதே பிரதிக்கினை.

வினு:—ஏதுவிற் சொரூபவபிப்பிராயம் யாது?

விடை:—தேகேந்திரியாதிகளி லறிவுநின்று பகுத்தறிகின்றது; தேகேந்திரியாதிகள் சடமாகையால் அறியுந் தன்மை அவைகளுக்கில்லை; தேகேந்திரியாதிகளே யறிவதானால் சுழுத்தி மூர்ச்சை சமாதியினிடத்து மறியவேண்டும்; அறியாமையினால் இந்திரியங்களிற் பகுத்தறி விருப்பது கொண்டு இவ்வறிவுக் காதாரமான பிரமமொன் றிருக்குமென்பதே ஏது.

வினு:—திருஷ்டாந்தத்திற் சொரூப வபிப்பிராயம்யாது?

விடை:—பிரத்தியட்சத்தி லெழும்பின புகையைக்கண்டு அப்பிரத்தியட்சமான அக்கினி யிருக்குமென் றறிவதுபோலத், தேகேந்திரியாதிகளி னின்றறியு மறிவைக்கண்டு யாவராலு மறியப்படாததாய் அவாங்மனோதீதமான (மனோவாக்குகளுக் கெட்டாததான) பிரமமொன்றிருக்கிறதென் றறிவதே முக்கியப் பிரயோசனமென்று சொல்லப்படும். பூத

பௌதிக * சராசரங்களிலும் அறிவாகிய பிரம மிருக்கிற தென் றனுமானத்தா லறியப்பட்டதன்றிப் பிரத்தியட்சத் திற் காணப்படவில்லை. அஃதென்ன லட்சணமுடையதா யிருக்குமோவென்ற புத்தி விருத்தியைப் பரிகரிக்கவேண்டி உவமானப் பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா:—உவமானப் பிரமாணமாவது யாது ?

விடை:—மரைமிருகமென் றொன்றுண்டென்று கேள் விப்பட்டவன் அதனை அறியவேண்டிய ஆவலினால் அறிந்த பேர்களை வினவ, அவர்கள் ஏகதேச திருஷ்டாந்தமாய் அது இந்தப் பசுப்போ லிருக்குமென்பது உவமானப் பிரமாணம்.

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது ?

விடை:—பிரமத்தை யறிய விரும்பினவன் பிரம சொரூ பமெப்படி யிருக்குமென்று பெரியோர்களை வணங்கிக்கேட் க, அவர்கள் அதற்கோ ருவமையினாலும் ஏகதேச திருஷ் டாந்தத்தினாலு மறிவிக்க வேண்டியதினால், அந்தப் பிர மம் சச்சிதானந்த சொரூபலட்சணமாய் இந்தப் பூதாகாசம் போல வியாபகமா யிருக்குமென்று சொல்ல, ஆகாசலட்சண மென்னவென்று வினவ, ஆகாசம் நான்கு பூதங்களுக்கு மாதாரமாய்த்தானென்றேடும்பற்றுதிருக்கையாலும் நான்கு பூதங்கட்கும் ஆகாசத்தைத் தவிர விருப்பிடமின்மையாலும் நான்குபூதத்திற்கு மாகாசமே யாதாரமாயிருந்ததுகொண்டு அந்த ஓர் ஆகாசத்தையே கடாகாசம் மடாகாசம் சலாகா

* சரம்—இயங்குவது; அசரம்—இயங்காதது.

சம் மகாகாசமென்று உபாதிவசத்தாற் கண்டு கூறப்பட்ட போதும் அவ்வாகாசத்திற்கு இந்நான்கு பூதங்களைக் குறித்துவந்த வுபாதிகள் சற்றுமின்றி, இந்நான்கு பூதங்களையுங் கவளீகரித் ததிக்கிரமித்து (தன்னுட்கொண்டு மேற்பட்டு), அவயவமின்றி (நிரவயவமா) யிருக்குமென்னக்கேட்டு, அந்தப் பிரமமும் இவ்விலக்கண முடையதா யிருக்குமென்றி பரோட்சமாயறிந்ததேஅபிப்பிராயம். இவ்விலக்கணமுடைய பிரமமானது இருக்குமிடந் தெரியவரவில்லையே யென்ற புத்தி விருத்தியைப் பரிகரிக்கவேண்டி ஆகமப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா:—ஆகமப் பிரமாணமாவது யாது?

விடை:—சொர்க்கலோகத்தில் அமிர்த மிருக்கிறதென்றுங் காசியி லரிச்சந்திரன் மயானங்காத்த பரண்காலின்ன மிருக்கிறதென்று மாகமஞ் சொல்லக்கேட்டு அவற்றில் நிச்சயப்புத்தி வந்ததே ஆகமப்பிரமாணம்.

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—"ஏகமேவாத்துவிதம்பிரமம்" என்னும் சுருதி வாக்கியமும், "மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில், வானில்வை யகத்தி லெங்கும் யானிலா விடமுமில்லை" என்னும் ஸ்மிருதி வாக்கியமும், "சோதிதா னுயிருந் தாற் பிரமமதாம்" என்னும் உபநிடத வாக்கியமும் பிரமாணமாகச்சொல்ல, அவற்றைச் சுரோத்திரவிடயமாய்க் கேள்வியுற்று, தன்னிடத்தில் அந்தச்சச்சிதானந்த சொரூபலட்சண

மிருக்கிறதாவென்று விசாரிக்குமளவில் சன்மாந்தர கன்மத்தா லிந்தச்சரீரம் இப்போது வந்ததென்றும், இப்போது செய்கிற கன்மத்தி னிவருகாலத்திலும் தேவமனுஷ திரியக்காதி ஜன்மங்கள் வருமென்றும் அனுபவமிருப்பதால் ஆத்மா சத்தாயிற்று; மேலும் திரிகாலத்தினு முண்டான சரீராதிகளழிவதும் அவற்றால்வரும் சுகதுக்க மானவமான ஹானி விருத்தி லாபாலாபங்களையும் அறிவாயிருந்தறிகின்றதால் சித்தாயிற்று; மேலும் சத்து வேறு சித்துவேறென்று பிரித்துப் பார்க்க விரண்டில்லாமையின லானந்தமாயிற்று. பின்னும் அறிவானது பற்றற்றிருக்க, தேகேந்திரியாதி கரணங்கட்கு அவ்வறிவைத் தவிர விருப்பிட மின்மையாலும், அறிவே யவைகட்காதார பூதமாயிருப்பதினாலும், இந்தத் தேகேந்திரியாதி கரணங்கட்கு அவ்வறிவே யாதாரமாயிருந்ததுகொண்டு அவ்வறிவுதானே கூடஸ்தரென்றுஞ் சீவனென்று மீசுரனென்று முபாதிவசத்தினாற் பின்னமாக அதனால் கண்டம்போலும் பரிச்சின்னம்போலுங் காண்பித்த விடத்திலும், அவ்வறிவாகிய பிரமத்திற்குத் தேகேந்திரியாதிகளைக் குறித்துவரு முபாதிகளின்றித் தேகேந்திரியாதிகரண சீவனையுங் கவளீகரித் ததிக்கிரமித்து அவயவமின்றி யிருப்பதினாலும், முன்பரோட்சமா யறியப்பட்ட சச்சிதானந்த சொரூபத்தைத் தானென்று அபரோட்சமா யறிந்ததே ஆகமப்பிரமாண நிர்ணயம். முற்கூறிய மூன்று பிரமாணங்களினாலும் வஸ்து நிச்சயங்கூடாது; இந்தப்படி எப்போதுஞ் சச்சிதானந்த சுபாவமாயிருக்க முன்பெத்ததசையி (பந்த

காலத்தி) லிந்த லீட்சண மறியாமற்போனதென்னவென்று வருகிற புத்தி விருத்தியைப் பரிகரிக்கும் பொருட்டு அருத் தாபத்திப் பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினு:—அருத்தாபத்திப் பிரமாணமாவது யாது?

விடை:—அது திருஷ்டவருத்தாபத்தி (பொருட்பேறு) யென்றுங் கேள்வி யருத்தாபத்தியென்று மிருவகையாம். இவற்றுள்:—நித்திய வுபவாசியென்று பேரிட்டிருக்கிற ஒருவனது தேகபீனத்தை (புஷ்டியை)க் கண்டு இவனே காந் தத்திற் (தனிமையில் அஃதாவது இராத்திரியில்) புசிப்ப னென் றறிகிறதே திருஷ்டவருத்தாபத்தி (காண்டலருத்தா பத்தி).

வினு:—இதிற் சொரூபவபிப்பிராயம் யாது?

விடை:—நான் பூர்வஜன்மத்திற்செய்த புண்ணிய பலத் தினல் இந்தச் சன்மத்திலும் நல்ல ஜாதி குல கோத்திர வருணதேகரூப ஐஸ்வரிய மனையாதிசம்பத்துக்கள் உண்டாயின என்றும்,இப்போது செய்யும் புண்ணிய கன்மத்தினல் இனி மேலுந் தேவமனுடராய்ப் பிறப்பேனென்றும், முன் சன் மத்திற் கொடுத்துவைக்காத பாவியாகையால் இப்போதுந் தரித்திரனு யிருக்கிறேன் இந்தச்சன்மத்திலும் ஒருவருக்குங் கொடாத தரித்திரனு யிருப்பதினல் வரும் சன்மத்திலுந் தரித்திரனுய்ப் பிறப்பேனென்றும், இன்னவருடம் இன்ன மாதம் இன்னதிதிநட்சத்திர யோககரணவாரத்திற் பிறந்தே னென்றும், இந்தமட்டுஞ் சௌக்கியத்தை யனுபவித்தேன் இனிப் பொல்லாத கஷ்டம் வரப்போகிறதென்றும், அந்தக்

கஷ்டத்துக்குமே லிந்தச் சரீரமில்லாதென்றும் இப்படி திரிகாலங்களினு முண்டான ஆனிவிருத்தி சுகதுக்க லாபாலாப மானவமானங்களையு மறிந்திருக்கிறதினால் தான் சச்சிதானந்த லட்சணமாயிருந்துந் தெரியவில்லை என்றதே யஞ்ஞானம். அதுவே யஞ்ஞானமானால் தெரியவில்லையென்ற வறிவு வரக் கணக்கில்லை. ஆகையால் சுத்தமான தன்னைத் தெரியவொட்டாது மறைத்த தலைமைபெற்ற வஞ்ஞானம் ஒழிய, நித்தியவுபவாசி யென்பவனுடைய சரீரமிளையாததை கண்டு இரக்ஷியத்திற் புசிப்பனென்றறிவதுபோல, தான் சச்சிதானந்த லட்சணமென்பது தோற்றாதிருந்தாலுந் தன்னனுபவத்தினா லூன்றி விசாரித்தறிந்தால் தானே சச்சிதானந்த சொரூபமாவன். இதுவே திருஷ்ட வருத்தாபத்தி. இப்படி சச்சிதானந்த சொரூபமென்பது அனுபவமாயறிந்திருந்தும் முன்போலவே நாமரூபாதிகள் தோற்றுவதன்றி அந்த லட்சணமிருந்தால் தோற்றாதாவென்று வருகிற புத்தி விருத்தியைப் பரிகரிக்கும்பொருட்டுக் கேள்வி யருத்தாபத்திப் பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா:—கேள்வி யருத்தாபத்தி யாவதென்ன?

விடை:—ஒரு புருஷன் அடுத்த கிராமத்திலிருக்கும் ஒருவனைக்காணவேண்டி வந்து, அவன் மனைவாயினின்று, இந்தக் கிரகவாசி யிருக்கின்றானாவென்று அம்மனையிலுள்ளவர்களை வினவ, அவர்கள் அவனில்லையென்று சொன்ன அபாவசத்தம் (அவனில்லையென்னுஞ் சொல்) காதிற் கேட்டும், அவனிறந்துபோகவில்லை அன்னியதானங்களிற் (வேறி

டங்களிற்)போயிருப்பா னென்றறிந்துகொண்டதே கேள்வி யருத்தாபத்தி.

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—நாமரூபாத் மகங்களினு மாத்மாவில்லை யென்றறிந்த வறிவுமாத்திர மிச்சமா யிருக்கக் கண்டதே இல்லை யென்ற கேள்வி யருத்தாபத்தியின் பிரயோசனமாம். அறிவு வடிவாயிருப்பதே ஆத்மாவானால் அறிபொருளைக் குறித்தேயறிவென்ற பேரிருக்கிறதாகையால் அறிபொருளாகிய சீவேசுவர சகத்தும், அதன் காரணமான மாயையும் அனாதியாயிருக்கவேண்டும். அப்போதுஅவைகளுக்கும் நித்தியத்துவம் வருமே யென்னும் புத்திவிருத்தியைப் பரிகரிக்கும் பொருட்டு அனுபலத்திப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா:—அனுபலத்திப் பிரமாணமாவது யாது?

விடை:—அபாவஞானத்திற்குச் சிறந்தகாரணம் அனுபலத்தியாம். அவ்வபாவம்: பிராகபாவம், பிரத்தொம்சாபாவம், அன்னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவம் என்று நால்வகைப்படும்.

வினா:—இவற்றுள் பிராகபாவமாவது யாது?

விடை:—குலாலன் சக்கரத்திருக்கு மிருத்திகா பிண்டத்தை (மண்ணுருண்டையை)ப் பார்த்து இதிற் கடமில்லை யென்பதே பிராகபாவம் (முன்னின்மை).

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—கடமில்லையென்ற அபாவத்திற்கு அநாதித்து வமனந்த கற்பங்களா யிருந்தும் நித்தியத்துவஞ் சித்திக்க வில்லை. எப்படியென்றால் குலாலன் சக்கரத்தைச் சுற்றி மிருத்திகா பிண்டத்திற் கைவைத்தபோது முன்னில்லாத கடகம் உற்பத்தியாயிற்று. ஆதலால் முன்னில்லை யென்ற வபாவத்திற் கநாதித்துவ (உற்பத்தியில்லாமை) மிருந்தும் அநித்தியத்துவஞ் (நாசமுடைமை) சித்தித்தது. அதுபோல மாயையு மதன் காரியமான சீவேசுரசகத்தும் அநாதித்துவ மென்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருந்தாலும் விசாரஞான மான விருத்திஞானத்தினாற் றகிக்கப்பட்டு அனித்தியமாய் விடுமென்பதே பிராகபாவத்தின் பிரயோசனம். விருத்தி யிற் பிரதிபலிக்கும் விருத்தி ஞானத்தினாற் றகிக்கப்பட்ட மாயையும் அதன்காரியமான சீவேசுர சகத்தும் விருத்தி ஞான மொழிந்தவிடத்து முன்போலப் பிரத்தியட்சமாய்த் தோற்றுமேயென்ற புத்திவிருத்தியைப் பரிகரிக்கும்பொரு ட்டுப் பிரத்தொம்சாபாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா:—பிரத்தொம்சா பாவமாவது யாது?

விடை:—ஒரு தரித்திரனை யாசகன் ஒரு கடத்தை யாதாரமாய்க் கொண்டு பாவ வசத்தினால் மனைகள்தோறு மிரந்துண்ணுங்காலத்தில், அம்மனைகளிலுள்ள சிறுவர்கள் அஞ்ஞான சிரேஷ்ட வுற்சாகத்தினால் கற்கொண்டெறிய, அந்தயாசக வாஞ்சையி (விருப்பத்தி) னால் அக்கல்லெறிக ளனைத்தும் தன் சரீரத்திற் றாங்கி மறித்துஞ் சகிக்கமாட்டா மல் அவனுக்கே விரத்திதோன்றி, அக்கடத்தை ஒரு கற்

பாறையில் மோதி, அக்கட முடைந்து, சில்லு (ஓடு) களாய்ச்சிதறிவிட்டது. பிறகு கடவாஞ்சையினால் அவன் புரண்டு புரண்டழுதாலும் உடைந்த கடம் வரமாட்டா தென்பதே பிரத்தொம்சாபாவம் (பின்னின்மை).

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—முன் விசாரஞானத்தாற் றகிக்கப்பட்டமாயையும் அதன் காரியமான சீவேசுர சகத்தும் மீண்டுகற்பகாலத்தினும் உண்டாகமாட்டா வென்றறிவதே யபிப்பிராயம். கடமுடைந்தும் அதன் காரியமறைந்து காரணமாகாமல் கடவோடென்ற காரியவுபாதி காண்பதுபோல, விருத்திஞானத்தாலழிந்த மாயையும் அதன்காரியமான சீவேசுர சகத்தும் காரணமான பிரமமாத்திரமாய்ப் போகாமல் மாயா காரியமான சீவேசுர சகத்தொன்று அறிவிற்றோற்றக் கண்டிருப்பதால் அந்தமாயையும் வஸ்துத் துவயமாயிருக்கும். ஆகையால் பிரமத்தில் மாயை யுண்டு மாயையிற் பிரமமிருக்குமென்ற புத்திவிருத்தியைப் பரிகரிக்கும்பொருட்டு அன்னியோன்னியா பாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா:—அன்னியோந்நியா பாவமாவது யாது?

விடை:—படத்திற் கடமும் கடத்திற் படமும் முக்காலத்திலு மில்லை யென்றறிவதே அன்னியோன்னியா பாவம்.

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—அத்துவிதம் (இரண்டாவதில்லாதது), அவிநாசம் (நாசமில்லாதது), உவமானரகிதம் (உவமையில்லாதது),

அவாங்மனோகோசரம் (மனோவாக்குக்கெட்டாதது), மௌனாதீதம்(மௌனத்திற்கப்பாற்பட்டது), அத்திபாதிப்பிரிய (சச்சிதாநந்த) லட்சணம் ஆகிய தன்மைகளை யுடையதே பிரம சொரூபம். துவிதம் (இரண்டு), திரிசயம் (காணப்படுதல்), மனவாக்குகோசரம் (மனத்தினாலும் வாக்கினாலும் அறியப்படுதல்), அனிர்வசனம் (சத்தென்றாவது அசத்தென்றாவது குறிப்பிட்டுச் சொல்லுதற் கியலாமல் சதசத்விலட்சண (வேறு) மாயிருத்தல்) ஆகிய குணங்களையுடையதே மாயா சொரூபம். அம்மாயா சொரூபத்திற் பிரம சொரூபமில்லை பிரம சொரூபத்தில் மாயா சொரூப மில்லையென் றறிகிற திடம்வந்ததே யபிப்பிராயம். இது நாமரூபமென்றும் மாயையென்றும் நினைவில் தோற்றுகிறது. அந்தமாயை யில்லாவிட்டால் நினைவில் தோற்ற மாட்டாது. ஆகையினால் மாயையு மிருக்குமென்று வருகிறபுத்தி விருத்தியைப் பரிகரிக்கும்பொருட்டு (ஒழிக்குநிமித்தம்) அத்தியந்தா பாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா:—அத்தியந்தா பாவமாவது யாது?

விடை:—ஒரு புருஷன் தனது சொப்பனத்தில் தான் சாகவும் தன்னைத் தகனஞ் செய்யவும் (சுடவும்) மறுநாள் காடாற்றி(பால்தெளித்துச்சூடாறச்செய்து) அஸ்தி(எலும்பு) யெடுத்துக் கும்பத்தி லடக்கிக் கங்கையில் விடவுங்கண்டும், அது விழித்த பிறகு சாக்கிரத்தில் மனத்தால் நினைக்க வாக்கால் சொல்ல வந்தும் மெய்யாகாமற் பொய்யென் றறிவதே அத்தியந்தாபாவம் (முற்றுமின்மை).

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—மாயையென்றும் ஜீவேசுவர ரென்றும் நாம ரூபங்களாய்ச் சொன்னாலும் நினைத்தாலும் அவை சுத்தமித்தைையே (அநிர்வசனமே) யாம். எப்படியென்றால் ஆகாசத்தில் தாமரை பூத்ததென்று நினைவில் தோற்றினாலும் அஃது எப்படி யில்லையோ அப்படியே மாயையென்று நினைவில் வந்தாலுங் காலத்திரயத்திலு மில்லையென்ற திடம் வந்ததே யபிப்பிராயம். மாயையென்பது காலத்திரயத்திலு மில்லாதிருக்க, அது சகல தேகிகளுக்கும் நானாவாய்ப் பிரசித்தமாய் உண்டுபோலத் தோற்றுகிறதற்குக் காரணமேதென்று வருகிற புத்தி விருத்தியைப் பரிகரிக்கும் பொருட்டு ஐதீகப்பிரமாணமும் விசாரிக்கவேண்டியது.

வினா:—ஐதீகப் பிரமாணமாவது யாது?

விடை:—ஒருவன் ஒரு ஆலமரத்திலேறி யிலையும் விறகும் தனக்குப்போதுமானமட்டும் பறித்துக்கொண்டு இறங்குஞ் சமயத்தில் வேறொருவன் வந்து ஆரடா பயித்தியக்காரா இந்தமரத்தில் மகாயக்ஷனென்னும் பசாசிருக்கின்றதே, இதனிடத்து ஒருவருஞ் சேருகிறதில்லையே, நீ இதிற் கால்வைத் தேறலாமாவென்ற சத்தங் கேட்டமாத்திரத்தில் அவன் மனத்திற் பயமும் சரீரத்தில் நடுக்கமு முண்டாய் ஒடித்த விறகையும் பறித்த விலைகளையு மெறிந்துவிட்டு மரத்திலிருந்திறங்கக் கால் தடுமாறிக் கீழேவிழுந்து மூர்ச்சையானதே ஐதீகப்பிரமாணம்.

வினா:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது?

விடை:—மாயையும் மாயாகாரியங்களும் (உலகமும்) காலத்திரயத்திலு மில்லாதவைகளாயினும் பிரத்தியட்சமாய்க் காணுத யக்ஷவிஷயம் அன்னியன்சொற் கேட்டமாத்திரத்தில் இருக்கிறதென்று சத்திய புத்தி வந்ததுபோல மாயையும் அம்மாயா காரியமான சீவேசுவரசகத்தும் பிரசித்தமாயுண்டுபோல விபரீத பாவனையாகிய பிராந்தி (மயக்கம்) யால் தோற்றுமென் றறிகிறதே யபிப்பிராயம். மாயையென்பதில்லையானல் மாயா காரியமான நாமரூப சகத்தென்றும் சத்த பரிச ரூப ரச கந்தமென்றும் கரணமென்றும் அனேக விபரீதங்கள் தோற்றுகிறதற்குக் காரணமேதென்று வருகிற புத்திவிருத்தியைப் பரிகரிக்கும்பொருட்டுச் சம்பவப் பிரமாணமும் விசாரிக்கவேண்டியது.

வினு:—சம்பவப் பிரமாணமாவது யாது ?

விடை:—ஆயிரமென்னுங் கணக்கில் ஒன்று இரண்டு ஐந்து பத்து நூறென்னுங் கணக்கு மிருக்கிறதென் றறிவதே சம்பவப் பிரமாணம்.

வினு:—இதிற் சொரூப வபிப்பிராயம் யாது ?

விடை:—சத்தமென் றறியும்போது அவ்வறிவேசத்தாகாரமாயிருக்கிறது; அப்போது பரிச ரூப ரச கந்த கரண தேகங்களில்லை. பரிசமென் றறியும்போது அவ்வறிவே பரிசாகாரமாயிருக்கிறது; அப்போது சத்த ரூப ரச கந்த கரண தேகங்களில்லை. ரூபமென் றறியும்போது அவ்வறிவே ரூபாகாரமாயிருக்கிறது; அப்போது சத்த பரிச ரச கந்த கரண தேகங்க

ளில்லை. ரசமென்றறியும்போது அவ்வறிவே ரசரூபாகாரமா யிருக்கிறது; அப்போது சத்த பரிச ரூப கந்த கரண தேகங்களில்லை. கந்தமென் றறியும்போது அவ்வறிவே கந்த ரூபாகாரமா யிருக்கிறது; அப்போது சத்த பரிச ரூப ரச கரண தேகங்களில்லை. ஆகையால் இந்திரிய சபளிதமாய் (செவியாதி யிந்திரியங்களுடன் கூடியதாய்)ச் சத்த பரிச ரூப ரச கந்தங்களாய்த் தோற்றினவெல்லாம் அவ்வறிவாகிய பிரமமே. அதுவே யதுவதுவாகத் தோற்றியது. ஆனபடியினால் அறிவாகிய பிரமத்தில் அனேகம்போல அறிவாகிய தனக்கே தோற்றலாம், அன்றியும் தான் சர்வசத்திமானாகையின் அனேகமு மிருக்கலாம், அப்படி யிருக்கையால் சர்வாதார பூதமான (சர்வத்திற்கும் ஆதாரமா யிருக்கிறதான) நிருபாதிகப் (உபாதியில்லாத) பிரமமே யிருக்கிறதென் றறிகிறதே யபிப்பிராயம். இதுவே அபூர்வதை.

வினா:—பலமாவது யாது?

விடை:—இந்தச்சக (உலக) வஸ்துக்களில் ஒரு வஸ்துவையறிந்த மாத்திரத்தில் மற்றவஸ்துவு மிப்படியே யிருக்குமென் றறிவதுபோல ஆத்மஞான மறிந்த மாத்திரத்தில் சகலப் பிரமாண்ட பிண்டங்களிலுந் தானாய் விளங்கும் பிரமமே நாமென்றும், நாமே ஆத்மசொரூபமாய் விளங்குகிறோமென்றும், இந்தத் தேகேந்திரியாதி சகலசகத்தும் பிராரத்தமுள்ளமட்டும் மித்தையாய்த் தோற்றுதல், பிராரத்த நாசத்தில் சிறிதுந் தோற்றாமல் அத்வைத ஆத்ம சொரூபமாத்திரமாய்ப் பிரகாசிக்குமென்றும் பிரதிவாதித்தலே (சொல்லுதலே) பலம்.

வினா:—அர்த்தவாதமாவது யாது?

விடை:—எந்த வஸ்துவைக் கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாத வஸ்து கேட்கப்படுகின்றது, எந்தவஸ்துவை மனனம் பண்ணின மாத்திரத்தில் மனனம் பண்ணப்படாத வஸ்து மனனம் பண்ணப்படுகின்றது, எந்தவஸ்துவை யறிந்தமாத்திரத்தில் அறியப்படாத வஸ்து அறியப்படுகின்றது அதுவே * பஞ்சகிர்த்தியங்கட் காதார பூதமான கர்த்ருத்வமாய் விளங்குவ தென்று பிரதி பாதிக்கின்றதே அர்த்த வாதம்.

வினா:—உற்பத்தியாவது யாது?

விடை:—கடத்திற்கு மண்ணும் ஆடைக்கு நூலும் ஆயுதங்களுக் கிரும்புங் காரணமாவதுபோலத் தோற்றப்பட்ட நாமரூப சகத்துக்குப் பிரமமே காரணமென்று சகத்துக்கும் பிரமத்துக்கும் அபின்னத்துவம் (வேறுபட்டிராமை) பிரதிபாதிக்கின்றதே உற்பத்தி. இந்த ஷட்லிங்க தாற்பரியங்களைச் சற்குரு சாஸ்திர முன்னிலையிற் கேட்டலே சிரவணம்.

வினா:—மனனமாவது யாது?

விடை:—வேதாந்த சாஸ்திரங்களைச் சிரவணம் செய்து அத்துவிதமான பிரத்தியேகாத்ம சொரூபத்தை அனுகூலமான புத்திவிருத்தியா லளப்பிட்டு நிச்சயிப்பதேமனனம்.

---

* சிருஷ்டி (படைப்பு), திதி (காத்தல்), சங்காரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்), அனுக்கிரகம் (அருளுதல்) என்னு மைந்து தொழில்களும் பஞ்சகிருத்திய மெனப்படும். அவற்றுள் முன்னுள்ள மூன்றும்சடத்திற்கும், பின்னுள்ளவிரண்டும்சித்திற்கும் உரியனவாம்.

வினா:—நிதித்தியாசனமாவது யாது?

விடை:—* விசாதிகமான தேகேந்திரியாதிகளைச் † சுசாதிகமான அகண்டாகார விருத்தி(பிரமாகார விருத்தி)யோடு கூட்டி மலையினுச்சியில்விட்ட தயிலதாரை (ஒழுங்கு) போல இடைவிடாமல் அவ்வகண்டாகார விருத்தியினாற் சதா தியானித்து நிற்பதே நிதித்தியாசனம். இப்படி ஷட்லிங்க தாற்பரியத்துடன் செய்த சிரவணத்தில் எவனுக்கு எதுவரையில் அஞ்ஞான புத்தி நீங்கவில்லையோ அவன் அதுவரையிலும் சிரவணஞ் செய்யவேண்டும். இப்படி சிரவணம் செய்து நிச்சயித்த பொருளில் எதுவரையில் சமுசய (சந்தேகம்) புத்தி நீங்கவில்லையோ அதுவரையிலும் ‡ யுத்தி ¶ தர்க்க $ அனுமானவுதவிகளால் மனனம்பண்ணவேண்டும். இப்படி மனனம் பண்ணித் திடங்கொண்ட வறிவில் எதுவரையிலும் யானென தென்னும் விபரீதபுத்தி நீங்கவில்லையோ அது

* விசாதி—வேறுபட்டசாதி.

† சுசாதி—வேறுபடாத சாதி.

‡ இது கூடும் இது கூடாதெனத் தன்னிடத்தே தோன்றுவது யுத்தியெனப்படும்.

¶ தருக்கித்துப் பேசுதல் தருக்கமெனப்படும். அஃதாவது அனிஷ்டத்தைச் சம்பாதித்துக்கொடுப்பது. தருக்கித்தல் காரண (தீ) மின்றாயின் காரிய (புகை) மின்றாமென்பது.

$ ஏதுவை (புகையை)க்கொண்டு சாத்தியத்தை (தீயை) யாராய்ந் தறிதல் அனுமான மெனப்படும்.

வரையிலும் மந்திரயோக முதலிய வைவகை யோகாப்பியாச வுதவிகளால் நிதித்தியாசனம் பண்ணவேண்டும்.

வினா:—அஃதெப்படி ?

விடை:—அபரோட்ச சாட்சாத்கார (ஆத்மாவைப் பிரமாகார விருத்தியால் நேரா யறிவதற்குச் சாதனமான) சிரவணத்தில் குதர்க்கங்களுடன் (விபரீததர்க்கத்தோடு) கூடிய திரிசயமானது எவ்வளவுகாலம் நாசப்பட (பொய்யென்று நிச்சயிக்கப்பட) வில்லையோ அவ்வளவு காலமு மஞ்ஞானம் போகாது. ஆதலால் மோட்சதாகங்கொண்டவன் தியான சமாதிகளை யவசியஞ் செய்யவேண்டும்.

வினா:—அந்தத்தியான சமாதிகளெத்தனை விதம் ?

விடை:—அது சவ்விகற்ப சமாதியென்றும் நிருவிகற்ப சமாதியென்று மிரண்டு விதமாயிருக்கும்.

வினா:—சவ்விகற்ப சமாதியாவது யாது ?

விடை:—ஞாதுரு (காண்பான்) ஞானம் (அறிவு) ஞேயம் (அறிபடுபொருள்) என்னுந் திரிபுடிகளுண்டு. அவற்றுள் தேகமே தானென்பது அசுத்தஞாதுரு; அறிவே தானென்பது சுத்தஞாதுரு; இந்தஞாதுருவே ஞானமென்னும் மனத்தோடுகூடி ஞானேந்திரிய வழிகளால் இது விருப்புடையது இது வெறுப்புடையதென்றறிவதுஅசுத்தஞானம். இந்திரிய வழிகளினறிவாகிய அசுத்த ஞானத்தைப் பொய்யறிவென் றறிந்ததே மெய்ஞ்ஞான துரியமாகிய சுத்தஞானம். பூதங்களானவை தடித்துப் பௌதிகங்களாய் எதிரே

சத்தாதி விடயங்களாய்த் தோற்றுவது அசுத்த ஞேயம். இந்தச் சத்தாதி விடயங்களனைத்தையுஞ் சொரூபமாத்திரமாய்க் காண்பதே சுத்தஞேயம். ஆதலால் இவ்வசுத்தத் திரிபுடிகளை லயம்பண்ணிச் சுத்தத் திரிபுடிகளுக்கு லயம் வராதபடி ஞேயமாயிருக்கிற கேவலப் பரப்பிரம வஸ்துவினிடத்தில் மனம் நிலைத்துத் தான் பிரமாகாரமா யிருப்பதே சவ்விகற்ப சமாதி.

வினா:—அஃதெப்படி?

விடை:—மண்ணாலாகிய பாண்டம் மண்ணா யிருந்தும் காண்பவர்களுக்குப் பாண்டமென்றெப்படி காணப்படுகின்றதோ அப்படியே ஞாதுருஞானஞேயங்களான சுத்தத்திரிபுடியான மனமும் சத்தாகிய சின்மாத்திரமான பிரமத்தினிடத்தில் சின்மாத்திரமாகவே விளங்குகின்றதாதலால் சவ்விகற்ப சமாதியென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா:—நிருவிகற்ப சமாதியாவதியாது?

விடை:—ஞாதுரு ஞான ஞேயங்களான சுத்தத்திரிபுடியென்கிற மனோவாசனையு நீங்கி ஞேயமாத்திரமான பரப்பிரமசொரூபந் தானானதே நிருவிகற்ப சமாதி.

வினா:—அஃதெப்படி?

விடை:—அப்பிற் (நீரிற்) கரைந்தவுப்பானது உப்பென்று வேறாகாமல் அப்புமாத்திரமா யிருந்ததுபோலப் பிரமாகாரமான மனமும் பிரமமாத்திரமாய் நிலைத்துத் திரிபுடிமுதலான சங்கற்ப விகற்பங்களின்றிச் சத்தாமாத்திரமான பிரம

சொருபமாய் விளங்குகின்றதால் நிருவிகற்ப சமாதியென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இவ்விருவகைச் சமாதிகளில் மனோபேத மிருப்பதினாலும், சமாதிசுழுத்தி யிரண்டினுள் மனோநாசம் சமமாய்க் காணாமையாலும், சுழுத்தியில் அஞ்ஞானங் காணப்படுகையினாலும், சமாதியில் அஞ்ஞானங் காணப்படாமையினாலும், அஞ்ஞானமும் அஞ்ஞான காரியமான சந்தேக விபரீதமு மற்றும் பிரமஞானத்திற்கு ஒரு விக்கின (தடை)மு மின்றிச் சதா சொரூபானந்த முண்டாகும்பொருட்டு மோட்ச தாகியானவன் அகம்புற மென்னும் பேதத்தால் அறுவகைப்பட் டிருக்கின்ற ஷட்விதசமாதிகளிலும் அவசியம் அப்பியாசம் பண்ணவேண்டும்.

வினா:—ஷட்வித சமாதிகளாவதென்ன ?

விடை:—அவை : அந்தர் திரிசியானுவித்தம் அந்தர் சத்தானுவித்தம் அந்தர் நிருவிகற்பம், பாகிய திரிசியானுவித்தம் பாகிய சத்தானுவித்தம் பாகிய நிருவிகற்பம் என அறுவகைகளாம்.

வினா:—அந்தர் திரிசியானுவித்தமாவது யாது ?

விடை:—அறிவுதானே திரிசியங்களாகிய காமக்குரோதாதி விருத்தியிற் கூடி, அவ்விருத்திகட்குச் சாட்சியாகத் தானேயிருக்கிற சொரூபானு சந்தானம் பண்ணுகிறதே அகத்திரிசியானுவித்தம். மேலும் நான் எனக்கு ஈதென்கிற காமக்குரோதாதி விருத்திகளை எந்த அறிவு அறிகின்றதோ, அந்தத்திருக்கு ரூபமானவறிவுக்கு அகங்காரமுதலிய காமா

திகளே கிரிசியங்கள். இந்தக்காமாதி விருத்திகளை அவி காரி (விகாரமற்றவன்) யாகப் பார்க்கிற சாட்சியாகத் தன்னைப்பார்க்கிறவன் நிஷ்கிரியனாக (தொழிலற்றவனாக) வே யிருப்பன். இந்தக்காமாதி விருத்திகட்கெல்லாம் நான் சாட்சி, என்னாலிந்தவிருத்திகள் அறியப்படுகின்றனவென்று தன்னைச் சாட்சியா யறிந்தவன் சாட்சியாகவே யிருப்பன். ஆதலாற் கிரிசியமா யிருக்கிற தேகாதி சகத்தையும் ஆத்மா வாயிருக்கிற தன்னிடத்திலே லயம்பண்ணவேண்டும்.

வினா:—லயம்பண்ணு மனுபவ மெப்படி?

விடை:—நான் தேகமும், பிராணாதிவாயுக்களும், அகங்காரமும், மனமும், புத்தியும், சித்தமும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களு மல்ல; இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாகியும் நித்தியமாகியு மிருக்கிற பிரத்தியேகாத்ம சொரூபமே நான்; நான் ஸ்தூலமும், சூட்சுமமும், வளர்ந்தவனும், குறைந்தவனும், பாலனும், யவ்வனனும், விருத்தனும், ஊமையும், நொண்டியும், மூக்கறையனும், வந்தவனும், போனவனும், கொன்றவனும், கொல்லப்படாதவனும், கர்த்தாவும், போக்தாவும், சுகியும், துக்கியும், யோகியும், வியோகியும், ராகியும், விராகியும், காமியும், குரோதியும், லோபியும், பந்தனும், முத்தனு மல்ல; இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாகியு நித்தியமாகியு மிருக்கிற பிரத்தியேகாத்ம சொரூபமே நான்; நான் உட்பிரக்கியனுமல்ல, வெளிப்பிரக்கியனுமல்ல, அறியப்படுகிறவனுமல்ல, அறியப்படாதவனுமல்ல, இந்தத் தேகேந்திரியாதிகளுடைய கூட்டரவு மெனக்கில்லை, புண்ணிய பாவங்களு

யில்லை, பசிதாக முதலான (1) ஷடூர்மிகளுக்கும் அப்பாற் பட்ட சதா (2) விமுக்தமானகேவலசித்துரூபமே நான் என்று தன் சொரூபத்தைத் தானே கண்டுகொண்டு காணப்பட்ட திரிசியங்க ளெல்லாவற்றையும் தனக்குள் லயம் பண்ணிக் கொண்டிருக்கவேண்டும். பிராந்தியினுற் காணுகிற விபரீத பாவனைகளை விவேகி நீங்கி நிற்பன்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சகத் விபரீத பாவ நீங்கிச் சுயம்பிரகாசமான ஆத்மசொரூபமானதே முத்தியென்று சுருதி ஸ்மிருதிகள் சொல்லுகின்றபடியால் சதா மனசை யொடுக்குகிறவனுக்கே இந்தச் சமாதி சித்திக்கும்; இல்லாவிட்டாற் சித்தியாகாது; ஆகையால் சதா மனசை யொடுக்கவேண்டும். இதுவுமன்றி வேஷத்தினாலும் பாஷையினாலும் இந்த அகண்ட சச்சி தானந்த வனுபவஞ் சித்திக்கமாட்டாது; அது சித்திக்கும் பொருட்டு அஸ்தி பாதிப் பிரியமான தன்னிடத்தில் அகங் காராதிகளையு மதன் விகாரங்களையும் லயம்பண்ணவேண்டும். எவனொருவன் ஆத்துமதத்துவத்தை யபேட்சித்துப் பிரகிரு தியை நாசம் பண்ணுகிறானோ அவனே முத்தன். அவ்வாறல் லாமல் கோடி சற்கருமங்கள் பண்ணினாலு முத்தனாக மாட் டானென்று எசுர்வேதமும் சுவேதாஸ்சுவதர வுபநிடதமும் சொல்லுகின்றன. அன்றியும், சுயம்பிரகாசமானவாத்மாவை

1 ஷடூர்மி—பசி, தாகம், சோகம், மோகம், ஜரை (கிழத்தனம்), மரணங்களாம்.

2 விமுக்தம்—நன்றாய் விடப்பட்டது.

யறிந்தவன் சகல அஞ்ஞான பாவங்களையு மறுத்து ஜனன மரண சம்சாரமான கிலேசங்களை விட்டொழிவானென்று சகல வேதாந்த சாஸ்திரங்களுஞ் சொல்லுகிறபடியால் சகலகிலேசங்களையும் விட்டொழிகிறதே ஜன்மமொழிகிறது. அதுவே மீண்டும் பிறவாத முத்தி.

வினா:—கிலேசத்தை யொழிக்கும்வித மெப்படி?

விடை:—கிலேசத்தை ஆத்ம நிஷ்டையினு லொழிக்க வேண்டு மாகையால் மோட்சதாகியானவன் சதாகாலமு நிஷ்டைபண்ணவேண்டும். சன்மவாசனையைத் தவிரப் புருஷனுக்கு வேறு விரோதிகளில்லை. ஆதலாற் சகல வாசனைகளும் சமாதி நிஷ்டையாகிய ஞானாக்கினியினால் தகிக்கப் பட்டால் மீண்டும் அவை சன்மத்திற் கேதுவாகமாட்டா.

வினா:—அஃதெப்படி?

விடை:—அக்கினியினால் வறுபட்ட வித்து முளைக்கிற தற்கேதுவாகாததுபோல ஞானாக்கினியினால் தகிக்கப்பட்ட வாசனாரூபமான கிலேசங்கள் மறு சன்மத்திற் கேதுவாக மாட்டா. ஆதலால் முமுட்சுவானவர்கள் அசேஷ (முழு) வாசனாக்ஷயமும் விபரீத பாவ நிவிர்த்தியும் உண்டாகும் பொருட்டுப் பிரயத்தினம் பண்ணியானாலும் சதா ஞானசமாதியிற் பழகவேண்டும். இப்படிப்பட்ட ஞானநிஷ்டை யுடையவனுக்குக் கன்மம் வேண்டுவதில்லை; கன்மத்துக்கும் ஞான நிஷ்டைக்கு மொன்றான கூட்டரவு சித்தியாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—தேகாத்ம புத்தியோடு கூடின் கர்த்ருத்வ பாவனையைக் கெடுப்பது ஞானம். ஆதலா லொன்றுக்கொன்று விரோதமான ஞானகன்மங்களுக் கெப்படி ஒற்றுமையுண்டாகும். தேஜசுதிமிரங்களுக் (ஒளிக்கும் இருளுக்கும்) கெப்படி கூட்டரவில்லையோ மேற்குமுகம் பார்க்கிறவனுக்குக் கிழக்குமுகம் பார்க்கிறகண் ணிமைத்து விழிக்கிறதற் கெப்படி கூட்டரவில்லையோ அப்படியே அந்தர்முகதிருஷ்டியான நிஷ்டாபரனுக்குப் பகிர்முக திருஷ்டியான கன்மங்களிற் கூட்டரவில்லை. ஆதலால் நிஷ்டாபரனா யிருக்கிறவனுக்குக் கன்மதந்திரத் தொழிலி லவகாசமில்லை.

வினா:—மற்றெதினா லுண்டு.

விடை:—திரிகரணத்தாற் (மனோவாக்குக் காயங்களால்) சாதிக்கப்படுகிற கன்மங்களெல்லா மசத்தாகையால் சுத்தமித்தையேயென்று சகல திரிசியங்களையுந்தள்ளித் திருக்காகிய சிற்சொரூபத்தில்நிலைத்திருப்பதால் அந்தநிலையே சந்தியாவந்தனம்; அதுவே யனுஷ்டானம், அதுவே விரதம்; அதுவே சகலரமிப்புமாகையால் சுத்த சத்துவமான பரமார்த்தத்தை யடைந்திருக்கிற சற்புருஷர்களுக்குச் சகலமும் ஞானநிஷ்டையைத் தவிர வேறில்லை. சகலமும் விட்டுத்துறந்து ஞானநிஷ்டாபரராயிருக்கிற சந்நியாசிகளுக்கு வேறே கிரியா சாதனங்க ளொன்றுமில்லை. ஆதலால் கிரியாந்தரங்களான தொழில்களெல்லா மொழித்து நிஷ்டாபரனாகவே யிருக்க வேண்டும். ஞானமேடையிலேறவேண்டி யபேக்ஷித்திருக்கிற முமுட்சுவானவன் ஆத்ம நிஷ்டையாகிற கன்மஞ் செய்து

கொண்டு சஞ்சலரகிதமாய்ச் சதா ஆத்மபராயணனாய் ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருக்கவேண்டும். ஞானமேடையிலேற வேண்டியபேக்ஷையுள்ள அப்பியாசிக்கு ஞானநிஷ்டா சாதனங்களே கன்மங்கள். யோக மேடையி லேறவேண்டின முமுட்சுவுக்கு யோகத்தைத் தவிர வேறு கிரியாந்தரங்களுள்ளளவுமில்லை. ஒருவன் யோகியாயிருந்து வேறே கிரியாந்தரங்களை நினைத்தால் மரத்தின் மேலேறித் தவறினவனைப் படி கீழே விழுவானோ அப்படியே யதோகதியில் விழுந்து விடுவான். ஞானமேடையிலேறி யிருக்கிற கிருத கிருத்திய (செய்யவேண்டியதெல்லாம் செய்து முடித்தவ) னை விவேகிக்கு வெளியில் செய்காரிய மொன்றுமில்லை. இதுவே அந்தர் திரிசியானுவித்த சவிகற்ப சமாதி.

வினா:—அந்தர் சத்தானுவித்தமாவது யாது?

விடை:—சுத்த சின்மாத்திரமாய்ச் சேஷ்டிக்கப்பட்ட சத்தத்துடன் கூடி, தான் அசங்கன் சுயம்பிரகாசன் அத்வைதனென்கிற சத்தங்களைப் பொருந்தி, அந்தச் சத்தங்களைத் தானாகப் பாவித்த பாவனை யெதுவோ அதுவே அந்தர் சத்தானுவித்தம்.

வினா:—இதற்கனுபவ மெப்படி?

விடை:—நான் சுத்த சாந்தன், அனந்தன் (முடிவில்லாதவன்) முன் பின்னெதிரில்லாதவன் உள்ளும்புறனும் நிறைந்த பரிபூரணன் ஆனந்தனாயிருக்கிறவன் சனன மரண மில்லாதவன் நித்தியானந்தமான அத்வைதன் என்றும், பிரத்தியேக

வபின்னமென்றும் அகண்டமென்றும், சச்சிதானந்தலக்ஷணமென்றும், சுத்தமென்றும் சுருதிகளிற் சொல்லப்பட்ட பரஞ்சோதியான பிரமமெதுவோ அதுவே நானென்னுஞ் சத்தாமாத்திரமாயிருக்கிற விருத்தியோடு கூடிச் சத்தாசாமானியமான சத்தத்தைப் பொருந்திச் சஞ்சலமில்லாமல் சமாதி திரிசியங்களைச் சொருபத்திலே லயம்பண்ணி * சுத்தோக முதலான சத்தங்களுடன் திருக்கே பிரதானமான பாவனையைச் சாதிக்கவேண்டும். இதுவே அந்தர் சத்தானுவித்த சவிகற்ப சமாதி.

வினா:—அந்தர் நிருவிகற்பமாவது யாது?

விடை:—திரிசியானுவித்தம் சத்தானுவித்த மிரண்டும் விட்டொழிந்து மனோவியாபாரத்தையுங் கட்டோடே விட்டொழிகிறதே அந்தர் நிருவிகற்பம். எவனொருவன் முன் சொன்ன சவிகற்ப சமாதியை யன்புடன்கூடி யிடைவிடாமல் நெடுநாள் பழகுகிறானோ அவனுக்கு வாசனாக்ஷயமுஞ் சித்தலயமுந் தடையற்ற நிரதிசயவானந்தமுஞ் சித்திக்கும். இந்த லட்சணம் பொருந்தின யோகியானவன் உள்ளும் புறனுங் காணமல் ஆனந்தாமிர்தக்கடலிலழுந்தினவனாய்த் தன்னைவிட அன்னியமில்லாதவனா யிருப்பன். ஆதலால் நிருவிகற்பமாகிய பரப்பிரம சொரூப நிஷ்டையைப் பொருந்தினவர்களே சீவன் முத்தர்கள். அவர்களே சீவத்தன்மையைப் பொருந்தியும் பொருந்தாம லிருக்கிறவர்க ளென்றறிக. ஒருவன் இந்த

* சுத்தோகம்—நான் சுத்தமா யிருப்பவன்,

மூவித சமாதியும் அகமுகத்திற் பழகினதுபோலப் பகிர்முகத்திலும் துவிதம் நிவிர்த்தியாகும்பொருட்டுப் பாகிய திரிசியானுவித்த சத்தானுவித்த நிருவிகற்பமென்னு மூவித சமாதிகளையும் பழகவேண்டும்.

வினா:—பாகிய திரிசியானுவித்த மாவது யாது?

விடை:—அதிஷ்டானமாய்ச் சச்சிதானந்தமான பரப்பிரம வஸ்துவில் கற்பிதமாக நாமரூபாதி சகத்து விளங்குகிறது. எப்படியென்றால் குளிர்ச்சி வெண்மை நெகிழ்ச்சி நுரை திவலை யென்கிற பேர்களொன்றாய்க் கூடின சலத்தை அலை யென்பதுபோலச் சச்சிதானந்த நாம ரூபங்களைந்துமொன்றாய்க்கூடின சொரூபத்தைப் பிரபஞ்சமென்றுசொல்லப்படுகிறதென்று ஆரோபிதமான நாமரூபமிரண்டையுந் தள்ளி, அதிஷ்டானமான சச்சிதானந்த சொரூப மாத்திரமாய்க் காண்பதே பாகிய திரிசியானுவித்தம். மேலும் சச்சிதானந்த பிரமத்தைத் தவிர நாம ரூபங்களில்லை யென்று நாம ரூபங்களை வேறுபடுத்தி அதிஷ்டான சொரூபத்தி லாரோபிதங்களை லயம் பண்ணி அத்வைத வஸ்துவே நானென்று சதாபஜனை பண்ணவேண்டும்.

வினா:—இதற்கனுபவ மெப்படி?

விடை:—இந்தப் பஞ்சபூதங்களும் இவற்றின் காரியங்களும் நானல்ல, இவைகளுக்கெல்லா மதிஷ்டான மாகியும் விசுத்தமாகியும் சத்தாகியுமிருக்கிற பிரமமெதுவோ அதுவே நான். காணப்பட்ட பதார்த்தங்களும் குணங்களும் கிரி

யைகளும் சாதியும் சத்தாதி பஞ்சவிடயங்களும் இந்திரியங்களும் பிராணனும் மனமும் புத்தியும் அகங்காராதிகளும் நானல்ல; இவைகளுக்கெல்லா மதிஷ்டானமாகியும் ஏகமாகியும் விசுத்தமாகியும் சத்தாகியும் பரமாத்மாவாகியு மிருக்கிற பிரமமே நான். திரிசியமான நாமரூபங்களெல்லாம் பொய்; இதற்கதிஷ்டானப் பிரமமே சதா சத்தியமென்று பாவித்து நடக்கும்போதும் இருக்கும்போதும் சதா தியானித்திருக்கவேண்டும். இதுவே பாகிய திரிசியானுவித்த சவிகற்ப சமாதி.

வினு:—பாகிய சத்தானுவித்த மாவது யாது?

விடை:—அதிஷ்டானமான சச்சிதானந்தத்தில் கற்பிதமான நாமரூபங்களை லயம்பண்ணி, நிருமலமாகியும் அத்வைதமாகியும் பரமானந்தமாகியு மிருக்கிற பிரமமே நானென்கிற பாவனையைப் பொருந்தி நிற்பது பாகியசத்தானுவித்தம்.

வினு:—இதற்கனுபவ மெப்படி?

விடை:—* நிருவிகாரமாகியும் † நிராகாரமாகியும் ‡ நிரஞ்சனமாகியும் $ அனாமயமாகியும் § ஆதியந்தரகிதமாகியும் சத்தியமாகியும் சுத்தமாகியும் || புத்தமாகியும் ¶ சுதசித்த

* நிருவிகாரம்—நாமரூப விகார மில்லாதது.

† நிராகாரம்—ஆகாரம் (உணவு) இல்லாதது.

‡ நிரஞ்சனம்—அஞ்சனம் (மை-கறை) இல்லாதது.

$ அனாமயம்—நோயில்லாதது.

§ ஆதியந்தரகிதம்—தொடக்கமு மீறு மில்லாதது.

|| புத்தம்—ஞானமுடையது.

¶ சுதசித்தம்—தானாகவே ஏற்பட்டது.

மாகியும் பரமாகியும் பிரத்தியேகாத்மாவாகியும் அகண்டமாகியும் சொப்பிரகாசமாகியும் சிதாகாசமாகியும் அத்தியந்த சூட்சுமமாகியும் நிருவிகற்பமாகியும் கேவலமாகியும் பரமாத்மாவாகியு மிருக்கிற பிரமமேநான்; இதிற் சந்தேக மில்லையென்று நிருவிகாராதி சத்தங்களுடன் கூடிக் கேவலமான வஸ்து லட்சியத்தில் மனதை நிறுத்தித் தியானம் பண்ண வேண்டும். இதுவே பாகிய சத்தானுவித்த சவிகற்பசமாதி.

வினா:—பாகிய நிருவிகற்பமாவது யாது?

விடை:—பிரமாநந்த பரவசத்தினால் சொரூபத்தோடே கமாய்க் கலந்து புறத்திற் சகல கிரியைகளுமற்று நிச்சலமாயிருப்பதே பாகிய நிருவிகற்பம். இப்படிப்பட்ட யோகியானவன் எழுந்திருக்கும்போதும் இருக்கும்போது மறவாம லிந்திரிய நிக்கிரகம் பண்ணிச் சாவதானமாய் இந்தச் சமாதியாறையுஞ் செய்யவேண்டும்.

வினா:—எவ்வளவுகாலஞ் செய்யவேண்டும்?

விடை:—எவ்வளவுகாலம் விபரீதபாவனை போகவில்லையோ அவ்வளவுகாலமுஞ் செய்யவேண்டும். மேலும் மோக்ஷதாகியானவன் அந்தர்பாகியமான ஷட்வித சமாதிகளையும் ஒருகாலு மறந்திருத்தல்கூடாது. மறப்பானானால் சூரிய னில்லாதவிடத் திருள் மூடுவதுபோலச் சொரூபமான தற்பிரகாசத்தை மாயையாகிய இருள் மூடிக்கொள்ளும். ஆதலால் தடையற்ற சொரூபானுபவப்பிரகாசமானது எவ்வளவுகாலஞ் சித்திக்கவில்லையோ அவ்வளவுகாலமும் இந்த வறுவகைச்

சமாதியில் நிரந்தரம் (சதா) பொழுது போக்கவேண்டும். பெரியோர்களானவர் சுவானுபவத்தை விட்டு க்ஷணப்போதும் பிரிந்திருப்பதில்லை. சுவானுபவத்தை மறந்திருப்பதே மிருத்தியு. இதுவல்லாமல் வேறே மிருத்தியு வில்லையென்று சுருதி ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ஆதலால் இந்த அறுவ்கைச் சமாதியிலும் எவன் பழகுகிறானோ அவன் மனதிற்கொருவிகற்பமுந் தோற்றாது. இந்த அப்பியாசத்தினால் சர்வாத்ம பாவஞ் சித்திக்கும். இதுவே கைவல்யம். சர்வாத்ம பாவம் பொருந்தினவனே * பிரமவித்தியாபரனென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். சீவன்முத்தனுக்குச் சகலமுந் தானாயிருக்கிற ஆனந்தானுபவமே பிரயோசனம். நான் எனக்கு ஈதென்பது முதலாகிய அசத்தைக் கிரகிக்கிறதே இருதயக்கிரந்தி. இந்த இருதயக் கிரந்தியானது சமாதியில் வாசனையோடு நசித்துப்போனால் பிரமமே தானாயிருக்கிற சுவானுபவந் தடையற்று விளங்கும். அதுவே மோட்சத்திற்கு நேரானவழியென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இது சுத்த அந்தக்கரண முடையவர்களா யிருக்கிறவர்களுக்குச் சதாகாலமுந் தோற்றும்; மற்றபேருக்குத் தோற்றமாட்டாது. ஆதலால் மறதியின்றிச் சதாகாலமும் அறுவகைச் சமாதிகளையும் நன்றாய் அப்பியாசித்து இருதயக் கிரந்தியை ஞானாக்கினியினால் தகித்து நிரந்தரம் பிரமானந்தாமிர்த சமுத்திரத்தில் அழுந்தி விளையாடிக்கொண்டு சந்தோஷகரமாய்

* பிரமவித்தியாபரன் — வேதாந்த வித்தையை முக்கியமாக வுடையன்.

விருத்தி சஞ்சலமின்றித் ததாகாரமா யிருக்கிறதே நிருவிகற்பசமாதி. இந்த நிருவிகற்ப சமாதியி லிருப்பவனே குணத்திரயங்களையுங் கடந்தவன். இஃதில்லாதவன் யோகியாயிருந்தாலும் குணத்திரயவசத்தனாய்ச் சம்சாரத்திற் சுழன்று திரிவன்.

வினா:—குணத்திரயங்களைக் கடப்பதெப்படி?

விடை:—நேத்திரங்கண்டமிருதயங்களை ஸ்தானமாகவுடைய சாக்கிர சொப்பன சுழுத்தியாகிய வவஸ்தாத்திரயங்களுக்கு விலட்சணனாயிருப்பதே குணத்திரயங்களைக் கடப்பதாம். இப்படி குணாதீதமான சுகசமாதியானது சீவன் முத்தனுக்கே சித்திக்குமன்றி மற்றொருவருக்குஞ் சித்தியாது. அசத்தாகிய விடயங்களை யனுசந்தானம் பண்ணுகிறவன் பந்தன், சத்தாயிருக்கிற வஸ்து சொருபத்தை யனுசந்தானம் பண்ணுகிறவன் முத்தனென்று சுருதிகள் சொல்லுகின்றன. ஆதலால் மோட்ச தாகியானவன் பிரயாசைப்பட்டாகிலும் சதா பிரயத்தினம் பண்ணி நிருவிகற்ப சமாதி யடையவேண்டும். இதனை யடைந்தவனே பவபந்தச் சுழலினின்று விடுபட்டவன்.

வினா:—பவபந்தமாவது யாது?

விடை:—அவித்தை ஆகம் (உடல்) கன்மம் என்கிற மூன்றும் சீவர்களுக்குப் பவபந்தமென்று சொல்லப்படும். இது நிருவிகற்ப சமாதியினாலன்றி வேறொன்றினாலும் நீங்காது. இதற்கு (நிருவிகற்பசமாதிக்கு) நான்கு விரோதமுண்டு.

வினா:—நான்கு விரோதமாவ தென்ன ?

விடை:—லயம், விட்சேபம், கஷாயம், ரசாஸ்வாதம் என்பவைகளாம்.

வினா:—லயமாவது யாது ?

விடை:—அகண்டாகார விருத்தி தமோகுணத்துடன் கூடி அகண்ட வஸ்துவிற் கூடாமல் நித்திரை வருகிறதே லயம்.

வினா:—இதற்கு நிவிர்த்தி யெப்படி ?

விடை:—யூக புத்தியினால் லயத்தைப் போக்கி விருத்தியை நிருமலம்பண்ணிப் பிரத்தியேகாத்ம அபிமுகமாய் நாட்டவேண்டியது.

வினா:—விட்சேப மாவதென்ன ?

விடை:—அப்படி வஸ்து நிலையில் நாட்டுகிறபோது அகண்டாகாரவிருத்தி இராசதகுண தோஷத்தினால் அந்த நாட்டத்தில் நிலைக்காமல் விடய நாட்டத்தி லபிமுகப்படுவதே விட்சேபம்.

வினா:—இதற்கு நிவிர்த்தி யெப்படி ?

விடை:—அகண்டாகார விருத்தியினால் தானே விடயங்களிலுள்ள தோஷங்களை யாரோபித்து அதனைப் பிரத்தியேகாத்ம வபிமுகப்படுத்தி நிற்கவேண்டும்.

வினா:—கஷாய மாவதென்ன ?

விடை:—அகண்டாகார விருத்தியானது இராசத தாமத குணங்களால் மூடப்பட்டு லட்சியமான பரதத்துவத்தினு மொட்டாமல் பிரபஞ்ச விடயத்தையு நாடாமல் ஸ்தம்பம் போற் சுத்தமூடமா யிருக்கிறதே கஷாயம்.

வினா:—இதற்கு நிவிர்த்தி யெப்படி?

விடை:—அகண்ட வஸ்துவின் சுகத்தையும் அதன் மகிமையையும் சொல்வதாகவும் கிரிசியங்களெல்லாந் துச்சமென்று போதிப்பதாகவு மிருக்கிற வேதாந்த சாஸ்திரார்த்தங் களை யடிக்கடி வாக்கினாற் சொல்லவேண்டும்.

வினா:—ரசாஸ்வாத மாவதென்ன?

விடை:—அகண்டாகார விருத்தியானது தான் வைத்த நாட்டத்திலிராமல் பூர்வ வாசனா வேகத்தினால் சக (உலக) விகற்பமான விஷயரசங்களைப் புசிக்கப்போகிறதே ரசாஸ்வாதம்.

வினா:—இதற்கு நிவிர்த்தி யெப்படி?

விடை:—வைராக்கியபுத்தியினால் விஷயங்களி லபிமுகப்பட்ட விருத்தியைத் திருப்பிப் பிரத்தியேகாத்ம வபிமுகமாய் நிறுத்தவேண்டும். இந்த விரோதங்களன்றிப் பின்னும் பல விரோதங்கள் வந்தாலும் தியானசமாதிகளால் அந்த விக்கினங்களைப் போக்கி, நிருவிகற்பசமாதியையே அப்பியாசிக்கவேண்டும். விடயங்களில் இந்திரியங்கள் செல்லாதபடி மனோநிக்கிரகம் பண்ணுகிறவனே தீரன். அவனே தீவிரதர மோட்சதாகியும் சகலவிருப்பு வெறுப்பற்றவனுமா யிருப்பன். அவனைக் கண்டமாத்திரத்தில் தாபத்திரயாதி சோக

மோகங்களெல்லாம் பறந்தோடிப்போம். அப்பால் ஏகல விக்கினங்களையும் போக்கி இரட்சிக்கிறவரா யிருக்கின்ற பரமேசுவரன் அவனிடத்தில் எப்போதும் உன்மன்னியராய் நின்று அவனாலருச்சிக்கப்பட்டு விளங்குவர். ஆதலால்மோட்ச தாகியானவன் சகல விக்கினங்களையு மொழித்து ஈசுவரனைப் பரமாக வைத்துக்கொண்டு ஈசுவர சகாயத்தினால் நிருவிகற்ப சமாதியைச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட ராஜயோகியானவன் உள்ளும் புறம்புஞ் சொரூபத்தைத்தவிர அன்னியமில்லாத பரப்பிரம சொரூபந் தானேயாய்ச் சகல தொழிலுமற்றுச் சும்மாவிருப்பன். இதுவே முத்திசாதனை நிலை. இஃது உன்மன்னியாவஸ்தையென்று சொல்லப்படும்.

வினா:—உன்மன்னியாவஸ்தையாவ தென்ன?

விடை:—நிருவிகற்பமா யிருக்கிற ஆத்மாவினிடத்தில் ஆத்மாகாரமாய் ஏகரூபமாயிருக்கிற அகண்டாகார விருத்தி ஞானமே உன்மன்னியாவஸ்தை யென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்தப்பிரகாரம் அத்வைத பரப்பிரமப் பிரகாசத்தினால் அஞ்ஞானந்தகாரம் நிவிர்த்தியாகித் தானே பரப்பிரம சாட்சாத்கார சொரூபமாய் விளங்கும்போது தேகேந்திரியாதிகளில் யானெனதென்றெழுகிற இருதயக் கிரந்தியும் சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்திருந்த சம்சயங்களும் சகல கன்மங்களும் அஞ்ஞான துக்கமாதலாலவற்றை யடியோடு நாசம் பண்ணினவனே பிரமவித்து; அவனே சிரேஷ்டன்; அவனே சகல பந்தங்களு மொழிந்தவன். இந்த நிருவிகற்ப சமாதியினால் துவைத தோற்றங்

கள்மேல்சமு (சிறிது) மில்லாமல் விடுபட்டுக் கேவல சொரூபானந்தமாத்திரமாய் நினைப்பு மறப்பாகிய சுத்தத்திரிபுடியுந் தோற்றாதிருப்பதே அபரோட்ச சாக்ஷாத்கார நிலை. இந்தச் சுவானுபூதியாகிய நடுநிலையில் விடயமுமில்லை, புசிப்பவனு மில்லையாதலால் இதைத்தானே பதிஞானமென்றும் பரஞானமென்றுஞ் சொரூபஞானமென்றுஞ் சொல்லுவார்கள்.

வினா:—இன்னும் பலவகையாகச் சொல்லுகின்ற முத்திநிச்சயங்களெவை?

விடை:—அசைவறத் தெளிந்தவிடமே முத்தியென்றும், மும்மலம் நீங்கினவிடமே முத்தியென்றும், சாக்கிராதீதமே முத்தியென்றும், நினைப்பற நினைத்தழுந்திப் பரமாணுவாய்ப் பேரொளியாய் நின்றவிடமே முத்தியென்றும், முப்பாழுங் கடந்தவிடமே முத்தியென்றும், சுத்தத் திரிபுடி நீங்கினவிடமே முத்தியென்றும், சகல கேவலமாகிய நினைப்புமறப்பற்றவிடமே முத்தியென்றும், மனோலய மானவிடமே முத்தியென்றும், இன்பாதீதமே முத்தியென்றும், காமம் வெகுளி மயக்கமென்னு முக்குற்றங்களு நீங்கினவிடமே முத்தியென்றும் பல ஞானசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றன; இவைகளெல்லாம் அபரோட்ச சாக்ஷாத்கார வானந்தானுபவத்திற் சமமாயிருக்கும். இதுவுமல்லாமல் வேதபாகியமாகிய புறமதங்களில் ஸ்திரீசையோகமே முத்தியென்றும், கந்தமைந்து மழிவதே முத்தியென்றும், திரிகுண மடங்குவதே முத்தியென்றும், இருவினையுங் கெடுவதே முத்தியென்றும்

பாஷாணமாயிருப்பதே முத்தியென்றும், விவேக முண்டாவதே முத்தியென்றும், சீவத்துவங் கெடுவதே முத்தியென்றும் பலவிதங்களாகச் சொல்லுவதெல்லாம் முத்தி யல்லவென்று பெரியோர் சொல்லுவார்கள். அபரோட்சசொரூப சாக்ஷாத்காரமாகிய பிரமானந்த பரவசத்தினால் சொரூப வியாபகத்தி லேகிபாவமாய்ப் புறம்பிற் சகல தொழிலுமற்று நிச்சலானந்தமா யிருப்பதே மௌனாதீதமாய் விளங்கும் நிருவிகற்பமான விதேகமுத்தியென் றறியவேண்டியது சித்தம். மோக்ஷ விருப்பங்கொண்ட அதிதீவரபக்குவனான ஒருவன் நிஷ்காமியமாய்ச் சிவபுண்ணியங்களைச் செய்ய வதனால் இருவினை யொப்புண்டாகி மலபரிபாகம் பிறந்து அதனாற் சத்தினிபாதம் பதிந்து சற்குருதரிசன வபேக்ஷை யுண்டான காலத்தில், அவனுக் குயிர்க்குயிராய்நின்ற ஆனந்தாதீதமான பிரமமே கிருபையினாற் சகளீகரித்து ஆசிரியமூர்த்தமா யெழுந்தருளிவந்து பிரமோபதேசமான ஞான தீக்ஷைசெய்து ஞான சாஸ்திரார்த்தங்களைப் போதித்தருளும். அதைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து ஞானநிஷ்டை கூடி நிருவிகற்ப சமாதிபொருந்தி மோட்சசாந்தி யடைந்து, தான் பெற்ற பேறு உலகம் பெறவேண்டுமென்னுங் கருத்தால் உலகத்தில் சதா நிஷ்டாபரனாகிய சீவன் முத்தனாய் வசித்திருப்பன். அந்த மகானுபவனால் பின்னுள்ள பக்குவர்களுக்கும் உபதேச முதலானவைகளுண்டாம். இதிற் சந்தேக மில்லையென் றறியவேண்டியது சித்தம்.

ஆறவது உபசாந்திப்பிரகரண முற்றிற்று.

நவநீதசாரம் முற்றிற்று.